

கல்கி

KALKI 18-11-1973

45 காசு





தனிமையின் இனிமை-லக்ஷ்மியுடன்



உதயத்தின் இளங்குளிரில், என் அறையின் தனி அமைதியில், போக்குவரத்தின் கூவல் ஒலியில், நள்ளிரவின் மிருதுத் தன்மையில்... நீ எங்கும் எப்போதும் உடனிருக்கிறாய் லக்ஷ்மி.

அன்புக்குரிய லக்ஷ்மி, மனங்கவர் லக்ஷ்மி, மகிழ்ச்சி நிறை லக்ஷ்மி— இப்படி நீ எனக்குப் பலவாக விளங்குகிறாய்.

லக்ஷ்மி, நீ பருத்தியின் குளுமை, பாப்ளினின் மென்மை, பாலியஸ்டர் கலவைகளின் நாகரிகக் கவர்ச்சி...

லக்ஷ்மி, கிளர்ச்சியூட்டும் நிறங்கள், அடக்கமான வண்ணங்கள், தன்னிச்சையான கோடுகள், கட்டங்கள், இழைச் சேர்க்கைகள் இவற்றின் துணைகொண்டு என்னை நீ பிரமிக்கச் செய்கிறாய்.

லக்ஷ்மி-நீ எல்லாருக்கும் எல்லாமாய் விளங்குகிறாய்.

டேடோன்: இகாட்டன் பாப்ளின் ஷர்ட்டிங் — மடிப்புக்கலையா 'கிரெஸ்லின்' சிறப்பு.
டெமொக்ராட்: 100% காட்டன் பாப்ளின் ஷர்ட்டிங்.
ஸம்மர் ஸ்டார்: காற்று புகுவண்ணம் விசேஷ இழை யோட்டம். 100% காட்டன் பாப்ளின்.
கோல்ட் கிரௌன்: இ. 67% பாலியஸ்டர்/33% காட்டன் இணைந்த ஷர்ட்டிங்.
புவராஜ்: 80% பாலியஸ்டர் 20% காட்டன் இணைந்த ஷர்ட்டிங்.
டெரி-கிரௌன்: 67% பாலியஸ்டர்/33% காட்டன் இணைந்த ஸூட்டிங்.

Lovable Lakshmi

பொருளடக்கம்

ப்ரமாதீச, கார்த்திகை, 3 - நவம்பர் 18, '73



கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்கு வைடமின்களும், தாதுப் பொருள்களும் இன்றியமையாதவை.

அவை போதுமான அளவில் கிடைக்கின்றனவா?



வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறை உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்தைப் பாதிக்ககூடும். சோர்வு, ஜலதோஷம், பசியின்மை, உடல் இளைத்துப்போதல், சரும உபாதைகள், மற்றும் பல் உபாதைகள். இவற்றிற்கு மூலகாரணம் சாதாரணமாக, இன்றியமையாத வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறைதான். இருப்பினும், வைடமின்களும், தாதுப் பொருள்களும் பெரும்பாலும் அலட்சியம் செய்யப்படுகின்றன. மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்ட உணவில் கூட இவற்றின் பற்றுக்குறை காணப்படுகிறது. வளமான உணவு எல்லாம் சரிவிகித உணவாக இருப்பதில்லை. விதவிதமான உணவுகளிலும், வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறை இருக்கக் கூடும். அப்படியானால், அத்தியாவசியமான வைடமின்களும், தாதுப் பொருள்களும் — அதுவும் சரியான விகிதங்களில் — உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கின்றன என்று நிச்சயமாக எப்படிச் சொல்ல முடியும்? உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும், தேவையான அளவுகளில் இந்த இன்றியமையாத போஷாக்குச் சத்துக்கள் கிடைப்பதை உறுதிப் படுத்திக் கொள்ள, அவர்களுக்கு விம்க்ரான் - ஸ்கிப் பல்வேறு வைட்டமின் தாதுச் சத்து மாத்திரைகள் - கொடுங்கள், தினம் ஒரு மாத்திரை வீதம். இந்த ஆரோக்கியமான வழக்கத்தை இன்றே ஏன் ஆரம்பிக்கக்கூடாது?

விம்க்ரானில் 11 முக்கியமான வைடமின்களும், 8 தாதுப் பொருள்களும் சரியான அளவுகளில் அடங்கியிருக்கின்றன. இரத்தச் சிவப்பு உயிரணுக்களை வளர்க்கவும், சக்தியை மீண்டும் பெற உதவவும் இரும்புச் சத்து - எலும்புகளையும், பற்களையும் உறுதியாக வைத்திருக்க கால்ஷியம் - ஜலதோஷத்தை எதிர்க்கும் சக்தியை அதிகரிக்க வைடமின் சி - சிறந்த கண் பார்வைக்கும், ஆரோக்கியமான சருமத்திற்கும் வைடமின் ஏ - பசியைத் தூண்டி, தாங்கும் சக்தியை அதிகரிக்கும் வைடமின் பி-12 - இவற்றுடன், உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்குத் தேவையான, இதர போஷாக்குச் சத்துக்களும் அடங்கியிருக்கின்றன.

விம்க்ரான்®

பல்வேறு வைட்டமின்-தாதுச் சத்து மாத்திரைகள்

11 வைட்டமின்களும் 8 தாதுப் பொருள்களும் அடங்கியது.

ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை உங்களை நாள் முழுதும் சக்தியுடன் வைத்திருக்கப் போதுமானது.

SARABHAI CHEMICALS

Shilpi HPMA-25A/71 Tam

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 33 • இதழ் 16

எரிபொருளுக்கு வரியாம்! எரிகிறது உள்ளம்!

பெட்ரோல் விலை, மண்ணெண்ணெய் விலை உயர்வுகளை அறிவித்துள்ள அவசரச் சட்டம் சாதாரண மக்களுக்குக் கனவத்தில் அறைந்த மாதிரி அதிர்ச்சியை அளித்திருக்கிறது. விலைவாசிகள் இறங்கவோ, அல்லது மேலும் ஏறுமல் கட்டுப்படுத்தவோ அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று ஏங்கிக் கொண்டிருக்கும் பொதுமக்கள் மனம் பற்றி எரிகிறது.

உலகத்தில் வியாபாரப் பொருளாக மட்டுமே இதுவரையில் இருந்து வந்த அராபிய நாட்டுக் ''குரூட்'' என்னும் மூலப்பொருள் இப்போது மத்திய கிழக்குப் போர் காரணமாக அரசியல் ஆயுதமாக மாறிவிட்டது. இதன் விநியோகத்தை அராபிய நாடுகள் அவர்களுக்கு வேண்டாத நாடுகளுக்கெல்லாம் குறைத்தும் நிறுத்தியும் நெருக்கடியை உண்டு பண்ணியிருக்கின்றன. இந்தியா அராபிய நாடுகளுக்கு நண்பன் என்ற முறையில் தன் அயல் நாட்டுக் கொள்கையை அமைத்துக் கொண்டது. மிகப் பெரும்பாலான இந்திய மக்களின் அனுதாபம் இஸ்ரேல் பக்கம் இருந்த போதிலும் நமது அரசு அரபு நாடுகளுக்குச் சாதகமாகவே பேசி வந்திருக்கிறது. அவ்வாறிருந்தும் இப்போது ''குரூட்'' விநியோக விஷயத்தில் அராபிய நாடுகள் அப்படி ஒன்றும் நன்றிப் பெருக்குடன் நடந்து கொள்ளவில்லை. இந்தியாவுக்கு அனுப்பப்படும் குரூட் எண்ணெயையும் கணிசமாகக் குறைத்து விட்டன. விலையையும் ஏற்றிவிட்டன. நட்பு நாடு பெறும் கைம்மாறு இதுதான் போலும்!

சப்ளையில் தட்டுப்பாடு ஏற்படும் என்று ஓரளவுக்கு எதிர்பார்த்ததுதான். ஆனால் இந்த நெருக்கடி நிலையை அரசாங்கம் சமாளிக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கையை எந்த விதத்திலும் பாராட்ட முடியாது.

பற்றாக்குறை நிலைமையைச் சமாளிக்க ரேஷன் முறையைத்தான் எந்த அரசாங்கமும் மேற்கொள்ளும். அதன் மூலம் உபயோகிப்பவர்களுக்கு கையிருப்புக்குத் தகுந்தபடி குறைந்த அளவில் அதிக விலை உயர்வில்லாமல் விநியோகிக்க முடியும். இறக்குமதி விலை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறதோ அந்த அளவுக்கு மட்டும் விநியோக விலையை உயர்த்தி, நிலைமையைச் சமாளித்திருக்கலாம். இதன் மூலம் விலை உயர்வை அவசியமான அளவோடு நிறுத்திக் கொள்வதுடன், விநியோகத்திலும் சிக்கனத்தைப் புகுத்த முடியும். ஏற்கனவே மிதமிஞ்சிய பணப் புழக்கத்தினால் விலைவாசிகள் கட்டுக்கடங்காது உயர்ந்துள்ள போது இதைத்தான் விவேகமுள்ள எந்த அரசும் செய்யும். ''குரூட்'' சப்ளைத் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட இதர நாடுகள் ரேஷன் முறை மூலம்தான் நிலைமையைச் சமாளிக்கின்றன.

நமது அரசாங்கம் அவ்வாறு செய்யவில்லை. பெட்ரோல் விலையை லிட்டருக்கு 107 பைசாவும் மண்ணெண்ணெய் விலையை லிட்டருக்கு 28 பைசாவும் உயர்த்திவிட்டது. அதாவது இறக்குமதி விலை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறதோ அதைவிடப் பல மடங்கு அதிகமாக வரி போட்டு விட்டது. இப்படி விலையை உயர்த்தி விட்டால் பெட்ரோல், மண்ணெண்ணெய் உபயோகிப்பவர்கள், தேவையைத் தாமாக 25 சதம் குறைத்துக் கொண்டு விடுவார்கள் என்பது அரசாங்கத்தின் குருட்டுக் கணக்கு.

ஆனால் விளைவு என்ன? டாக்ஸி சத்தம் உயர்ந்து விட்டது. பஸ் பயணக் கட்டணங்கள் முன்னைவிட அதிகமாக உயர்ந்து விட்டன. சர்க்கார் நடத்தும் போக்குவரத்துக்களில் கட்டண விகிதங்கள் பெட்ரோல் விலை உயர்வுக்கும் புதுக் கட்டண விகிதங்களுக்கும் சம்பந்தமில்லாத அளவுக்கு உயர்ந்து விட்டன. ஆபீசுக்கும்

ஒரு திருத்தம்

''சுயம்வரத்தில் அத்வைதம்'' என்ற தலைப்பில் கல்கி தீபாவளி மலரில் வெளியாகியுள்ள ஸ்ரீ காஞ்சி காமகோடிப் பெரியவர்களின் அருள்வாக்குக் கட்டுரையில் ஸம்ஹிதை என்றிருப்பதை ''ஸம்மிதை'' என்று திருத்தி வாசித்துக் கொள்ளக் கோருகிறோம்.


தொழிற்சாலைகளுக்கும் செல்லும் ஊழியர்களும் தொழிலாளர்களும் பயணச் செலவுக்காக அதிகம் செலவு செய்ய வேண்டும். லாரிச் சத்தங்கள் உயர்ந்து விட்டன. அதன் விளைவாகத் தினசரி தேவைப்படும் காய்கறிகளின் விலை ஏறிவிட்டது. மண்ணெண்ணெய் உபயோகிக்கும் வீடுகளில் அதிக விலை கொடுத்துத்தான் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. மண்ணெண்ணெய் விலை உயர்வு என்பதனால் விறகும் கரியும் கூட விலை உயர்ந்து விட்டன. நகர்ப்புறங்களில் காணும் நிலைமையைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாகக் கிராமப்புறங்களில் மக்களுக்குக் கஷ்டங்கள் தோன்றத் தொடங்கிவிட்டன. மண்ணெண்ணெய் விலை உயர்வினால் கிராம மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் அளவிட முடியாதவை. சொல்லில் அடங்காதவை.


இவ்வளவு கஷ்டங்களை மக்களின்மீது சிந்தனையின்றிச் சுமத்திவிட்ட அரசாங்கம் பெட்ரோல் உபயோகத்தில் சிக்கனத்தை ஏற்படுத்தி விட்டதா? பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் கோச் வண்டியில் ஆபீசுக்குப் போய் வருகிறார் என்று விளம்பரப்படுத்தப்படுகிறது. ஆனால் கோச் வண்டிக்கு முன்னும் பின்னும் பாதுகாப்புக்கான மோட்டார் வண்டிகள் ஓடிக் கொண்டிருந்தன! வழக்கம்போல் அல்லாது இவை இரண்டாவது 'கிய'ரில் மெதுவாகச் சென்றதால் அதிக பெட்ரோலை விழுங்கின! இம்மாதிரி விளம்பர விளையாட்டுக்களினால் பெட்ரோல் உபயோகத்தில் என்ன சிக்கனத்தை உண்டாக்க முடியும்?

இப்போதுள்ள மோட்டார் வாகனங்களில் பெரும்பான்மையானவை அரசாங்க இலாகாக்கள், அமைச்சர்கள், பெரிய பெரிய கம்பெனி முதலாளிகள், தொழில் அதிபர்கள் முதலியவர்களிடம்தான் உள்ளன. அவர்கள் எல்லோருக்கும் பெட்ரோல் செலவை அந்தந்த இலாகாவோ, அரசாங்கமோ, தொழில் நிறுவனங்களோதான் கொடுக்கின்றன. தாங்களே பணம் கொடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாதவரையில் பெட்ரோல் விலை உயர்ந்து விட்டதனால் இவர்கள் உபயோகத்தைக் குறைத்துக் கொள்ளுவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. பெட்ரோல் விலை உயர்வால் அரசாங்கத்துக்கு ஆகிற அதிகச் செலவை மக்கள்தான் மேலும் வரி கொடுத்துத் தாங்க வேண்டும். பெரிய முதலாளிகள் பெட்ரோலுக்கு ஆகிற அதிகச் செலவைத் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் விலையை உயர்த்திச் சமாளிக்கப் பார்ப்பார்கள். கடைசியில் பொருள்களை வாங்கும் மக்கள்தான் அவதிப்படுவார்கள். பெட்ரோலுக்குத் தாங்களே கையை விட்டு அதிக விலையைக் கொடுத்துக் கஷ்டப்படும் சில தனிப்பட்ட நபர்கள் வேண்டுமானால் தேவைகளைக் குறைத்துக் கொள்ளலாம். இவர்கள் எப்படியும் சிறுபான்மையினரே.

ஆகக்கூடி எரிபொருள்களின் உபயோகத்தை மட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை இல்லை இது. அரசாங்கத்துக்கு அமோகமான அதிக வருமானம் கிடைக்கவே மேற்கொள்ளப்பட்டது. ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 300 கோடி ரூபாய் புது வரிகளால் கிடைக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் (1973—74ல் மீதமுள்ள ஐந்து மாதங்களில்) சுமார் 140 கோடி ரூபாய் கிடைக்குமாம். மத்திய அரசாங்கம், மூன்றாவது சம்பளக் கமிஷனின் சிபாரிசுகள் விளைவாகத் தான் சமாளிக்க வேண்டியிருக்கும் அதிகச் செலவுக்கு வருவாயை இவ்விலை உயர்வுகள் மூலம் தேடிக் கொண்டு விட்டது என்று எண்ணினால் தவறாகாது. மாநில அரசாங்கங்களும் சர்க்கார் போக்குவரத்துக் கட்டணங்களைச் சம்பந்தா சம்பந்தமில்லாமல் உயர்த்துவதன் மூலம் தங்கள் வருவாயையும் கிடைத்த மட்டில் லாபம் என்ற வகையில் பெருக்கிக் கொண்டுள்ளன.

பட்ஜெட் என்றோ, உப பட்ஜெட் என்றோ, பார்லிமெண்டுக்கு முன் மசோதாக் கொண்டுவந்து 'விவாதித்து' 300 கோடி ரூபாய் வருஷ வருவாய்க்கு அனுமதி பெறுவதைக் காட்டிலும் அவசரச் சட்டம் மூலம் ஒரு குட்டி பட்ஜெட்டையே நாட்டின்மீது திணித்து விட்ட அரசாங்கத்தின் சாமர்த்தியத்தை சோஷலிஸவாதிகள் மெச்சலாம்; நாளைய சோற்றுக்குத் திண்டாடும் நிலையில் உள்ள சராசரி இந்தியனால் மெச்ச முடியாது.


என் கப்பல் மாடல் காரின் டாங்கை நிரப்பிட்டு நீங்க கோச்சில் ஏறிட்டீங்களே! அடடா! என்ன தியாகம்!
அமைச்சர்
விலைவாசி உயர்வு
பொதுமக்கள்


இக்கரையிலிருந்து பார்த்தா அக்கரை பசுமையா இருக்கு! அக்கரையிலிருந்து பார்த்தா இக்கரை பசுமையா இருக்கு! ஆனா எந்தப் பக்கம் பாய்ஞ்சாலும் மேய முடியலியே?
மதியழகன்
அதிகாரம், பதவி
அண்ணாயிசம்
மதிப்பு, செல்வாக்கு, புகழ்

தமிழ் நாட்டிலே... தீரன்

மதியழகன் பல்டி

அண்ணா தி.மு.க. என்பதாக ஒன்று தோன்றிய நாளிலிருந்து அதன் முக்கிய ஆதரவாளராகக் கருதப்பட்ட மதியழகன் இப்போது மறுபடியும் தி. மு. க.வுக்கே வந்துவிட்டார். இந்த ஆண்டின் நவம்பர் முதல் வாரத்தை மதியழகன் வாரம் என்று சொல்லும் அளவுக்குப் பத்திரிகைகளில் அவருடைய பெயர் அடிபட்டது. மதியழகன் விலகியது பற்றி அ. தி. மு. க. வருத்தப்படுகிறதோ இல்லையோ, சிறிதும் தயங்காமலும் கூசாமலும் அவரைத் தங்களுடன் தி. மு. க.வில் சேர்த்துக் கொள்வதற்குத் தி. மு. க.வினர் தயங்கவில்லை. தி. மு. க. தலைமையை எதிர்த்து, ஊழல்களை விமர்சித்து அவர் கடந்த சில மாதங்களில் பேசிய பேச்சுக்கள், முழக்கங்கள் எதுவுமே அவர் மீண்டும் தி. மு. க.வில் சேருவதை அணுவளவும் பாதிக்கவில்லை. திரு மதியழகனும், தம்மைச் சபாநாயகர் பதவியிலிருந்து நீக்கியதை எதிர்த்துச் சுப்ரீம் கோர்ட்டில் தொடர்ந்துள்ள வழக்கைக்கூட வாபஸ் வாங்கப் போவதாக அறிவித்து விட்டார்.

"எம். ஜி. ஆரை இதுவரை ஓர் அரசியல் தலைவராக நினைத்ததே தவறு. அவருடைய கடந்த ஓராண்டுக் கால நடவடிக்கைகள் அவரைச் சுற்றி மட்டுமே இருந்தன. தி. மு. க. மந்திரிசபை மீது எம். ஜி. ஆர். கூறிய ஊழல் புகார்கள் ஆதாரமற்றவை. சட்ட மன்றத்தில் அந்த ஊழல் புகார்களுக்குப் பதிலளித்து முதலமைச்சர் கருணாநிதி பேசிய போது நான் எதுவும் கூறாமல் சும்மா இருந்ததற்கு அந்தப் புகார்கள் ஆதாரமில்லாதவை என்பதுதான் காரணம். எம். ஜி. ஆர். அறிவித்துள்ள அண்ணாயிஸத்தில் அண்ணாவின் கொள்கை எதுவும் கிடையாது. கருணாநிதி முதலிய அனைவரும் கழகத்தில் என்னிடம் சகோதரர்களாகப் பழகியவர்கள். தாய்க் கழகத்துக்கு மீண்டும் செல்லும் என்னை அவர்கள் வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன்" என்பது திரு மதியழகனின் விலகல் காலத்து அறிக்கை.

ஊர், ஊராக மேடை மேடையாகக் கருணாநிதியின் சர்வாதிகாரப் போக்கையும், தி.மு.க.வின் லஞ்ச ஊழல் போக்குகளையும் பற்றித் தாம் பேசிய அனைத்தையும் திரு மதியழகன் மறந்துவிட்டது போல் ஜனங்கள் மறந்துவிட மாட்டார்கள். சந்தர்ப்பவாத அரசியலையும் அரசியல்வாதிகளையும் அவர்கள் மறக்கவோ மன்னிக்கவோ மாட்டார்கள். "சிங்கப்பூருக்குச் சென்றவர் திரும்பி வந்தால் அவரை வரவேற்பது போல் மதியை வரவேற்கிறோம்" என்று முதல்வர் கருணாநிதியும் சிங்கப்பூரின் தலையில் பழியைப் போட்டு விட்டு மதியை வரவேற்று விட்டார். உவமைகள் இருக்கிறவரை முதல்வருக்குக் கவலை இல்லை. முதல்வர் இருக்கிறவரை மதியழகனுக்குக் கவலை இல்லை. பொதுமக்களுக்கும் கண்டு களிக்க இப்படி வேடிக்கைகளுக்குப் பஞ்சமில்லை.

மண்ணெண்ணெய், பெட்ரோல் விலை

நவம்பர் முதல் வாரத்தை 'மதியழகன் வாரம்' என்று சொல்வதை விரும்பாதவர்கள் அல்லது வரவேற்காதவர்கள் அகில இந்திய ரீதியில் ஏதாவது சொல்லிக் கொள்ள விரும்பினால், 'மண்ணெண்ணெய், பெட்ரோல் வாரம்' என்று சொல்லிக் கொள்ளலாம். பெட்ரோல் விலை லிட்டர் 2-73 என்றும் மண்ணெண்ணெய் விலை லிட்டர் 93 காசு என்றும் அறிவிக்கப்பட்டு விட்டன. அறிவிக்கப்பட்ட தினத்தன்று சென்னை நகரில் தெருவுக்குத் தெரு வந்து விற்கும் மண்ணெண்ணெய் வண்டிகள் திடீரென்று காணாமல் போய்விட்டன. மண்ணெண்ணெய் லிட்டர் ஒரு ரூபாய், ஒரு ரூபாய் பத்துக் காசு, ஒன்றேகால் ரூபாய் என்று விதம் விதமாக விற்றன. டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷாக்களின் மீட்டர் சார்ஜ் பயங்கரமாக ஏறிவிட்டது. டாக்ஸிகளும், ஆட்டோக்களும் ஸ்டாண்டுகளில் தூங்குகின்றன. ஸ்டாண்டைத் தேடிப் பெட்டி படுக்கையுடன் வரும் ஓர் அப்பாவிப் பிரயாணியை முன்பெல்லாம் ஏற்றிக் கொள்ளாமலிருக்க ஒருவரோடொருவர் போட்டியிட்ட டாக்ஸி டிரைவர்கள் இப்போது ஏற்றிக்கொள்ளப் போட்டி போடுகிறார்கள். பஸ்களில் ஃபுட் போர்டு, பக்கவாட்டில் உள்ள கம்பிகள் எல்லாவற்றிலும் தொங்கும் அளவு அதிகமாகப் பிரயாணிகள் பயணம் செய்கின்றனர். நவம்பர் மாத நடுவிலிருந்து பஸ் கட்டணங்களும் ஏறப் போவதாகத் தெரிகிறது. நிலைமை இப்படியே தொடர்ந்தால் காருக்குப் பதில் இரட்டை மாட்டு வண்டியும் ஸ்கூட்டருக்குப் பதில் ரேக்ளா வண்டியும், பஸ்ஸுக்குப் பதில் பாத யாத்திரையும்கூட நடைமுறைக்கு வந்து விடலாம். டாக்ஸியை வரச் சொல்லிக் கூப்பிடவே எல்லோரும் தயங்குகிற இந்தச் சமயம் பார்த்து டாக்ஸி ஸ்டாண்டில் டெலிபோன் வேறு அமைக்கப்பட்டிருக்கிறது.

எது உண்மை ?

இப்போதெல்லாம் முதலமைச்சர் கருணாநிதி மாற்றுக் கட்சிகளின் தலைவர்களுக்குப் பதில் சொல்லும்போது அவருக்குக் கோபம் வருகிறது.

"உண்மையான செய்திகளை வெளியிடும் பத்திரிகைகளை இந்த ஆட்சி மிரட்டுகிறது. முதலமைச்சருக்கு அப்படிப்பட்ட பத்திரிகைகளைப் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை" என்ற கருத்துப்பட ஒரு புதிய தினசரியின் வெளியீட்டு விழாவில் திரு காமராஜ் அவர்கள் கூறினாலும் கூறினார், கருணாநிதிக்குக் கடும் கோபம் வந்து விட்டது.

"தி. மு. க. ஆட்சியில் பத்திரிகைச் சுதந்திரம் இல்லை என்று சமீபத்தில் காமராஜ் பேசியிருக்கிறார். அவர் கூறிய இந்தக் குற்றச்சாட்டைப் புள்ளி விவரங்களுடன் பொது மேடையில் விளக்கி நிரூபித்தால் மந்திரிசபை


உத்தரவுப் பிரதேசம்!
நீங்க தயவு செய்து மரியாதையா டில்லிக்கு வந்து சேருங்க!
திரிபாதி
எம்.எல்.ஏக்கள்
நீங்கள்ளாம் சுதந்திரமா இயங்கி இவரைக் கட்டாயம் தலைவராத் தேர்ந்தெடுத்தாகணும், தெரிந்ததா?
பகுகுணா
எம்.எல்.ஏக்கள்
நான் தருகிற இந்தப் பட்டியல் பிரகாரம் நீங்க உங்கள் விருப்பப்படி மந்திரிசபை அமைக்கலாம்!
பகுகுணா
எம்.எல்.ஏக்கள்

யின் ராஜிநாமாக் கடிதத்தை அவர் கையி லேயே கொடுத்து விடுகிறேன். அவரே அதை கவர்னரிடம் சேர்க்கலாம். இந்தச் சவாலை அவர் ஏற்றுக் கொள்வாரா?'' என்று முதல்வர் கேட்டிருக்கிறார். எது உண்மை என்பது மக்களுக்குத் தெரியும்.

முதல்வரின் இந்தச் சவாலுக்குத் திரு காம ராஜ் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டு மென்பதில்லை. யார் வேண்டுமானாலும் வெகு சுலபமாகப் பதில் சொல்லிவிடலாம். மெயில், தவிர்த்து, சுதேசமித்திரன், போன்ற நாளி தழ்கள் கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு காரணங்களால் நடு நடுவே வெளிவராமல் போனதும், அலை ஓசைக்கு ஏற்பட்ட துன்பங் களும், கல்கி, விகடன், குமுதம், இந்து போன்ற பத்திரிகைகள் தி. மு. க. பேச்சாளர் களால் பெயர் சொல்லி மிரட்டப்பட்டதும், சேலத்தில் ஆபாச ஊர்வலம் நடத்தியதைத் தடுக்காமல், அதைப் பற்றிப் பிரசுரமான 'துக்ளக்' இதழைத் தடுத்துப் பறிமுதல் செய்ததும், நவசக்தி நாளிதழில் வெளியான இரு கட்டுரைகளுக்காக அதன் ஆசிரியர், உதவி ஆசிரியர்களைப் பாதுகாப்புச் சட்டத் தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்த தும் தி. மு. க. ஆட்சியில் நடந்தவைதாமே?

யார் சொல்வது நிஜம்?

சமீபத்தில் திரு ஈ. வெ. ராவைத் திருச்சி யில் தாம் சந்தித்தபோது, சமூக சீர்திருத்த விஷயங்களைப் பற்றிப் பேசியதாகவும், மாநில சுயாட்சி அடிப்படையில் அரசியல் சட்டத் தைத் திருத்தக் கோருவது பற்றி விவாதித்த தாகவும் முதல்வர் கூறியுள்ளார். ஆனால் இந்தச் சந்திப்புக்குப் பின்பும் பிரிவினையை வலியுறுத்துவது போலவே திரு ஈ. வெ. ரா. கடுமையாக எழுதியும், பேசியும் வருவதைப் பார்த்தால் அவர்கள் என்ன பேசிக் கொண் டார்கள் என்பது பற்றிச் சந்தேகப்படுவ தற்கே வாய்ப்பு அதிகம். இந்தச் சந்தே கத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது அண் மையில் தி. மு. க.விலிருந்து விலகியுள்ள திரு கோவை செழியனின் அறிக்கை.

''பிரிவினையைத் தி. மு. கழகம் விரும்ப வில்லை என்று வெளியில் கூறுகிற திரு கருணா நிதி தனியே தனது சக அமைச்சர்களையும் கழக முக்கியஸ்தர்களையும் பிரிவினையை வற் புறுத்திப் பேசும்படி கேட்டுக் கொள்கிறார். அண்ணாவுக்கே விரோதமான இந்தக் கொள்கை எனக்குப் பிடிக்கவில்லை. எனவே பிரிவினை பற்றிய தி. மு. கழகத்தின் சரியான கொள்கையை நீங்கள் தெளிவு படுத்தாவிட் டால் இதையே என் ராஜிநாமாக் கடிதமாக ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று திரு கோவை செழியன் கூறியுள்ளதைப் பார்க்கும்போது தி. மு. க.வின் மீது மக்களுக்கு ஏற்கெனவே உள்ள அவநம்பிக்கை அதிகரிக்கவே செய் கிறது. மாநில சுயாட்சி — பிரிவினை தொடர் பாகத் தி. மு. க. இரட்டை வேடம் போடு கிறதோ என்ற வலுவான சந்தேகம் பொது மக்களில் பலருக்கு எழுகிறது.

யானையும் எறும்பும் சிங்கமும்

தமிழ்நாட்டில் இரண்டு காங்கிரஸ் கட்சி களும் இணைந்து விடுமோ என்று நினைக்கும் போதே தி. மு. க. முதல்வர் கருணாநிதிக்குப் பயமும் கோபமும் சேர்ந்தாற்போல் வரு கிறது. சென்னையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது, ''இரண்டு காங்கிரஸ் கட்சி களும் அகில இந்திய ரீதியில் இணையப் போவ தில்லை. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் அவை இணையப் போகின்றன. இங்கே இந்திரா காங் கிரஸுக்குப் பலம் இல்லை. காமராஜ் காங்கிர ஸுக்குப் பணம் இல்லை. இணைந்தால் காம ராஜ் தமது கட்சிக்குப் பணம் கிடைக்கும் என்று நினைக்கிறார்: இந்திரா காந்தி தம் முடைய கட்சிக்கு ஆள் பலம் கிடைக்கும் என்று நினைக்கிறார். காமராஜ் கட்சி யானை போன்றது. இந்திராகட்சி எறும்பு போன்றது. எறும்புடன் சேருவதால் யானைக்குப் பலம் ஏற்பட்டு விடாது என்பதை உணர வேண்டும். காமராஜ் கட்சி யானை என்றால் தி. மு. க. சிங்கம் போன்றது. சிங்கம் யானையின் மேல் பாய்ந்து மத்தகத்தைப் பிளக்கும் வலிமை உடையது'' என்று கூறியிருக்கிறார் தமிழக முதல்வர். எப்போதும் போல் முதல்வர் உவமைகளினால் அரசியலைச் சமாளித்தாலும் தி. மு. கழகத்தைச் சிங்கம் என்று கூறு வதைக் கேட்கச் சிரிப்புத்தான் வருகிறது. கேட்பதற்குச் சிங்கமாக இருப்பதை விட அசிங்கமாக இருக்கிறது. இது செத்த காலேஜ் சிங்கமாகவே மக்களுக்குத் தோன்றுமே ஒழிய சர்க்கஸ் சிங்கமாகக்கூடத் தோன்றாது.

ராஜாஜி சிந்தனை

சில சமயங்களில் ஒரு மகானுடைய வாழ்க்கை, அவருடைய போதனைகள் ஆகியவற்றின் மூலம் நாம் பல விஷயங்களைக் கற்றுக் கொள்ள லாம். ஆனால் பெரும்பாலும் அனுபவத்தின் மூலமே அதிகம் கற்றுக் கொள்ள முடியும். எங்கேனும் சிறிது கட்டுப்பாடின்மை காணப்பட்டால் பொறுமையுடன் இருங்கள். அனுபவத்தின் மூலம் நாளடைவில் நம் முடைய மக்கள் திறமையையும் கட்டுப்பாட்டையும் கற்றுக் கொள் வார்கள். 'நான் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும்' என்று உங்களுக்கு நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள். 'கட்டுப்பாட்டுடன் இருங்கள்' என்று மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டாம். 'உண்மையே பேசுவேன்' என்று உங்களுக்கு நீங்களே கூறிக் கொள்ளுங்கள். 'பொய் சொல்ல வேண்டாம்' என்று மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டாம். நீங்கள் உண்மையைப் பேசினால் மற்றவர்கள் உங்களைப் பின்பற்றுவார்கள். நீங்கள் கட்டுப் பாட்டுடன் இருந்தால் மற்றவர்களும் அதன்படி நடப்பார்கள்.



கறுப்பும் சிவப்புமான காமாக்ஷி

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி
காமகோடி சங்கராசார்ய
ஸ்வாமிகள்.

அம்பாளைப் பற்றிப் பல ஸ்தோத்திரங்கள் இருக்கின்றன. இவற்றில் ஆதி சங்கர பகவத் பாதர்கள் செய்த 'ஸௌந்தர்ய லஹரி'யும் மூக கவி செய்த 'பஞ்ச சதீ'யும் ஈடு இணை இல்லாமல் இருக்கின்றன. தேர்ந்த சைத்திரிகன் ஒருவன் அம்பாளின் ஸ்வரூபத்தை எழுதிக் காட்டுகிற மாதிரி இவை அம்பிகையின் திவ்விய வடிவத்தை அப்படியே நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்திவிடும்; அவளுடைய மகிமையில் நம் மனசை மூழ்கிக் கிடக்கும்படி செய்யும். கண்ணுக்கும் மனசுக்கும் எட்டாத பராசக்தியைக் கண்ணால் காணவும் மனத்தால் அநுபவிக்கவும் செய்கிற வாக் சக்தி 'ஸௌந்தர்ய லஹரி'க்கும் 'மூக பஞ்ச சதி'க்கும் உள்ளது. கம்பீரம் அத்தனையும் 'ஸௌந்தர்ய லஹரி'யில் அடங்கியிருக்கிறது. மிருதுத் தன்மை முழுதும் 'மூக பஞ்ச சதி'யில் உள்ளது.

'மூகன்' என்றால் ஊமை என்று அர்த்தம். ஊமையாக இருந்த ஒரு பரம பக்தர் காஞ்சி புரத்தில் குடிகொண்டுள்ள ஜகன்மாதா காமாக்ஷியின் கிருபா கடாக்ஷத்தைப் பெற்று, உடனே அமிருத ஸாகரம் மாதிரி ஐந்நூறு சுலோகங்களைப் பொழிந்து தள்ளிவிட்டார். அதைத்தான் 'மூக பஞ்ச சதி' என்கிறோம். 'பஞ்ச' என்றால் ஐந்து; 'சத' என்பது நூறு.

அதிலே காமாக்ஷியின் நிறத்தைச் சொல்கிற போது செக்கச் சிவந்தவள் என்று பல இடங்களில் கூறியிருக்கிறார். கரு நிறம் படைத்தவள் என்றும் சில சுலோகங்களில் சொல்கிறார். 'காச்மீர ஸ்தபக கோமளாங்க லதா' (குங்குமப் பூங்கொத்து போன்ற கோமளக் கொடி), 'பந்துஜீவ காந்தி முஷா' (செம்பருத்தியின் ஒளியைப் படைத்தவள்) என்று சொல்கிறார். 'தாபிஞ்ச ஸ்தபக த்விஷா' (கருநீலக் காயாம்பூப் போல் ஒளிருகிறவள்) என்றும் கூறுகிறார்.

ஏன் இப்படி இரண்டு நிறங்களாகச் சொல்கிறார் ? நமக்கு இப்படிச் சொல்வது புரியவில்லை. சரி, சங்கர பகவத்பாதர்கள் ''ஸௌந்தர்ய லஹரி''யில் இதைப் பற்றி என்ன சொல்கிறார் ?

''ஜயதி கருணா காசித் அருணா'' என்கிறது ஸௌந்தர்ய லஹரி. ''நல்லதற்கெல்லாம் உற்பத்தி ஸ்தானமாக சம்பு என்று ஒன்று இருக்கிறது. அது பரப்பிரம்ம வஸ்து. பரப் பிரம்மமாகச் செயலின்றி இருந்தால் போதாது என்று அது லோகத்துக்கு நல்லது செய்வதற்காக ஒரு ஸ்வரூபம் எடுக்கிறது. அதற்குத்தான் அம்பாள் என்று பெயர். நிறமில்லாத சம்பு உலகைக் காக்கும் கருணையினால் அருண வர்ணம் கொண்டு வெற்றியோடு பிரகாசிக்கிறது — ஜகத் த்ராதும் சம்போ: ஜயதி கருணா காசித் அருணா'' என்கிறார் ஸ்ரீ ஆசாரியாள். சூரியோதயத்துக்கு முன்னும் கிழக்கில் பரவுகிற பிரகாசச் சிவப்புத்தான் அருண நிறம். 'அருண நிறம் தான் கருணை நிறம்' என்கிறார் ஆசாரியாள்.


கறுப்போ அழிவின் நிறம். தமோ குணத்துக்குக் கறுப்பை அடையாளமாகச் சொல்வார்கள். தூக்கம், மரணம், சம்ஹாரம் எல்லாம் கறுப்பு.

காருண்ய மூர்த்தியான காமாக்ஷியைச் சிவப்பானவளாக மூகர் சொல்வது நியாயமாகப் படுகிறது. ராஜராஜேச்வரி, லலிதா மகா திரிபுரசுந்தரி, ஸ்ரீ வித்யா என்றெல்லாம் சொல்லப்படுகிற அம்பாளை மந்திர சாஸ்திரங்களும் செக்கச் சிவந்த ஜோதிப் பிரவாகமாகவே சொல்கின்றன.

'ஸைன்ஸ்'படிகூட இதுவே பொருத்தமாக இருக்கிறது. Vibgyor — ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு என்று ஏழு வர்ணங்களை ஸ்பெக்ட்ராஸ்கோப்பில் பிரித்துப் பார்த்திருக்கிறார்கள். நிறமில்லாத வெறும் ஒளிதான் இப்படி ஏழு நிறங்களாகச் சிதறுகிறது. இதில் வெள்ளை, கறுப்பு இரண்டும் இல்லை. ஒரு கோடியில் ஊதாவைக் கடந்தால் கறுப்பு; மறு கோடியில் சிவப்பைத் தாண்டினால் வெள்ளை. அதாவது வெளுப்புக்கு ரொம்ப ரொம்பக் கிட்டேயிருப்பது சிவப்புத்தான். நம் கண்ணுக்குப் பரம இதமானது வெள்ளைதான். கொஞ்சம்கூட உறுத்தாது. ஆனால் அது நிறமே இல்லை. நிறம் என்று ஏற்பட்டபின் ரொம்பவும் இதமாக, மிகக் குறைவாக உறுத்துவது (Least disturbing colour) சிவப்புதான். இதனால் தான் போட்டோ எடுத்த ஃபிலிமைக் கழுவும்போது, அதில் வேறெந்த நிறத்தின் கிரணம் பட்டாலும் படம் அழிந்துவிடும் என்று சிவப்பு விளக்கையே போட்டுக் கொள்கிறார்கள். நாம் சிவப்பு கண்ணைக் குத்துவதாக நினைத்தாலும் அதிலிருந்தே Infra Red என்கிற மிக மிருதுவான நிறத்துக்குப் போகிறார்கள். இந்த Infraவுக்கு மாறாக மறு கோடியில் உக்கிரமான Ultra violet (ஆழ்ந்த ஊதா) இருக்கிறது. அதற்கப்புறம் கறுப்பு. அம்பாளைக் கறுப்பு என்றும் கருநீலம் என்றும் மூகர் சொல்கிறார்; சிவப்பு என்றும் சொல்கிறார். வெள்ளையான சுத்தப் பிரம்மத்துக்கு மிக மிக நெருங்கியுள்ள சக்தி என்பதாலும் கருணாமூர்த்தி என்பதாலும் சிவப்பு என்பதே பொருத்தமாயிருக்கிறது.

அம்பாள் கிருபையால் அவளைப் பிரத்தியட்சமாகப் பார்த்த மூகர் ஏன் கறுப்பு என்றும் சொல்கிறார் ?

(அடுத்த இதழில்: காமாக்ஷியின் கருமை)



CMLB.21.203 TM



ராஜாஜியின் ஜெயில் டைரி

எங்களுடன் சிறையில் வெங்கட் ராவ் என்ற வாலிப ஒத்துழையாமைக்காரர் ஒருவர் இருக்கிறார். தண்ணீர்க் குழாய் அருகில் கைதி வார்டர் ஒருவர் கைதி ஒருவரைப் பாறாத் தடியால் அடித்து விட்டதாக வெங்கட்டராவ் சிறைத் தலைமை அதிகாரியிடம் போய்க் கூறினார். சாதாரணக் கைதிகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளைப் பற்றித் தலைமை அதிகாரியிடம் முறையிடுவதால் யாதொரு பயனும் உண்டாவதில்லை. அதனால் அவரிடம் போய்க் கூற வேண்டாம் என்று நாங்கள் எல்லாம் வெங்கட் ராவிடம் கூறினோம். நாங்கள் எதிர்பார்த்தபடியே அடிக்கப்பட்ட கைதி அடிபடவில்லை என்று கூறி விட்டார். சிறை உத்தியோகஸ்தர்கள் என்றால் அவ்வளவு பயம், அவர்களுக்கு விரோதமாக யாரும் எதுவும் கூறத் துணிய மாட்டார்கள். ஆயினும் சிறைத் தலைமை அதிகாரி வெங்கட்ராவ் கூறியதை ஏற்றுக்கொண்டு அடித்த வார்டரைத் தண்டித்தார்.

ரங்கம் செட்டி ஓயாத நோயாளியாகிவிட்டார். அஜீர்ணமும், நெஞ்சு வலியும் அதிகம். அவர் அதிக நாட்கள் சிறையில் தங்க முடியாது. கௌரவமாகச் சிறையிலிருந்து அவரை விடுதலை செய்து வெளியே அனுப்புவார்கள் என்று நம்புகிறேன்.

1922 மார்ச், 11உ

சனிக்கிழமை: இப்பொழுது இந்தச் சிறையில் ஒத்துழையாமைக்காரர்களில் மிகவும் முக்கியமானவராக இருப்பவர் கம்பலக்கூடம் குமார ஜமீன்தாரான திரு கே. வி. கிருஷ்ணா ராவ் காரு. இங்கே அவரை ராஜாசாகேப் என்று அழைக்கிறார்கள். அவர் ஒரு நல்ல அறிஞர். சிறந்த அறிவும், ஜனநாயக உணர்ச்சியும், உண்மையான தேசப் பற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக ஆடம்பரமற்ற கடவுள் பக்தியும் உடையவர். பெரிய பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவராயிருந்த போதிலும் சாதாரண நடுத்தர வகுப்பினர் போலவே பேச்சிலும், நடத்தையிலும் காட்டிக் கொள்கிறார். அவர் பல காவியங்கள் எழுதியிருக்கிறார். அவை நன்றாயிருப்பதாகச் சொல்லுகிறார்கள். சிறைவாசம் இத்தகைய பிரபுவின் மனத்துக்கு எவ்விதத்திலும் சோர்வு உண்டாக்கவில்லை. அவர் சுருட்டுக் குடிப்பவர். அதற்கு மட்டுமே இடையூறாக இருக்கின்றது.

திரு கே. ஸ்ரீனிவாசய்யங்கார் என்பவர் சென்னையில் பச்சையப்பர் கல்லூரியிலும் நெல்லூரிலும் ஆசிரியராக இருந்தவர். சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பித்தவுடன் ஆசிரியர் தொழிலை விட்டு விட்டு இயக்கத்தில் ஈடுபடலானார். தில்லித் திட்டத்தின் அடிப்படை அம்சங்களையும் நோக்கத்தையும் நன்றாக அறிந்து கொண்டிருப்பதால், அவர் எப்போதும் இங்குள்ளவர்களை நெறி பிறழாமல் நடக்கும்படி செய்து வருகிறார். சிறைக்கு வரும்போது அவருடைய நிறை 208 ராத்தல். அது படிப்படியாகக் குறைந்து இந்த



மார்ச்சு மாத ஆரம்பத்தில் 170 ராத்தலுக்கு வந்துவிட்டது. அலிகாரிலிருந்து வந்துள்ள ஷாஃபுக்-உர் ரஹ்மானைப் பற்றி என்ன நினைப்பது? அத்தகைய மனிதர் ஒருவரைச் சந்திப்பதை நான் ஒரு பாக்கியமாகவே கருதுகிறேன். அவரைப் போல் நல்லவிதத்தில் வளர்க்கப்பட்டவராயும் உண்மையான தெய்வ பக்தியுள்ள சான்றோராயும் உள்ளவர் யாரையும் நான் கண்டதில்லை. அவரும் அவருடைய நண்பர் ஹாஸேனும் இந்திய முஸ்லிம்களில் எடுத்துக்காட்டாக உள்ளவர்கள் என்று கூறினால் அது மிகையாகாது. நம்முடைய கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் உள்ள சகல ஜாதியினரும் மதத்தவரும் அவர்களைப் போல் நடந்து கொள்ளப் பழக வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.




“பழைமையான கரகரப்
பான பற்பொடிகள்
உங்கள் ஈறுகளுக்கும்,
பற்களுக்கும் தீங்கு
இழைக்கக்கூடும்...”


கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களையும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!

பழைமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளைச் சேதப்படுத்தி, பல் எனுமலைச் சிதைக்கக்கூடும். கால்கேட் பற்பொடி மிகவும் மென்மையானது. அது உங்கள் ஈறுகளுக்கு இதமளிக்கும் போதே, அதில் கலந்துள்ள மெருகேற்றும் பொருள் பற்களின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கி, பற்களைச் சுத்தமாக வெண்மை பளிச்சிடச் செய்கிறது. கால்கேட்டின் வளமான நுரை பல் இடுக்குகளில் ஊடுருவி வாய்நாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளை அகற்றுகிறது. அதனால்தான் கால்கேட் பற்பொடி வாய் நாற்றத்தை உடனே நிறுத்தி, பற்சிதைவையும் எதிர்க்கிறது. அதன் குளுமையான இன்மணத்தையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்!

நவீன
பல் பராமரிப்பு முறைகளே **சிக்கனமாக**
இருக்கும்போது பழைமையான
பற்பொடிகளை ஏன் உபயோகிக்க வேண்டும்!

உங்கள் குடும்பத்திற்கு
எகானமி சைஸ் கால்கேட்
பற்பொடியை இன்றே வாங்குங்கள்!
ஒரு டப்பா மாதக்கணக்கில் வரும்!





TP. G. 19 TM

எதிர்ப்புக் காணாப் படையெடுப்பு

சர்வகலாசாலை நூற்றாண்டுவிழா மண்டபத்தில் அமர்ந்திருந்தவர்கள் எல்லாம் அன்று தங்களை அறியாமல் தாளம் போட்டார்கள். அவர்கள் உடல் ஒரு நிலையில் இல்லாமல் துள்ளிக் கொண்டிருந்தது. காரணம், மேடையிலே ஓர் அழகி பாடிக் கொண்டிருந்தாள். உள்ளங்களைத் துள்ள வைக்கும் ஒரு மாய சக்தி அந்த மங்கையின் இசையிலே இருந்தது. அடுத்துக் காதலனும் காதலியுமாக இருவர் வந்து இசைத்தார்கள். அவர்களது குரல் இனிமையிலே அவையோர் சொக்கிப் போனார்கள். பின்னணி வாத்தியம் இசைத்த ஒன்பது பேரும் ஒன்பதுவித வாத்தியங்களை இயக்கினாலும் பாடுபவரின் இசையை அமுக்கி விடாமல் அடக்கி வாசித்து அபாரமான பாராட்டுதல்களைப் பெற்றார்கள். கடந்த மாத இறுதியில் ஜெர்மன் டெமோகிராடிக் ரிபப்ளிக்கிலிருந்து (கிழக்கு ஜெர்மனி) வந்து விருந்தளித்த இசைக் குழுவினரின் இசை தற்காலத்தில் பிரபலமாகி வரும் இளைஞர்களின் இசையான பாப் மியூஸிக் பாணியில் இருந்தாலும் ரசிக்கும்படி கௌரவமாகவும் இருந்தது.

இசை நிகழ்ச்சிகளின் இடையே சில சர்க்கஸ் சாகஸங்களையும் ஜெர்மன் கலைஞர்கள் நிகழ்த்திக் காட்டியது நமக்குப் புதிய அனுபவமாயிருந்தது.

ஒற்றைச் சக்கர 'சைக்கிளில்தான் எத்தனை எத்தனை அற்புதங்களை அந்தச் சின்ன இடத்தில் செய்து காட்டிவிட்டார்? சைக்கிளில் இருந்தபடியே தாவித் தாவித் தத்திக் குதித்து ஏணிப் படிகளில் ஏறிய அந்த லாகவத்தை, சாகஸத்தைக் கண்டு வியக்காதவர் இல்லை.


நளினத்துக்கும் மென்மைக்கும் பெயர் பெற்றவர்கள் பெண்கள். மெல்லியலார் என்ற பெயர் அதனால்தானே? ஆனால் ஜி.டி..ஆர். கலைக் குழுவில் ஓர் அணங்கு தன் உயரத் தூக்கிய கையில் ஓர் ஆடவனைத் தாங்கி நிற்க அவர் அங்கேயே அந்தக் கைகளையே 'பார்' விளையாடும் கம்பங்களாகக் கொண்டு பார் விளையாடினார். தையல் நீட்டிய கை கொஞ்சமும் மடங்கவில்லை; வளையவில்லை. முகத்தில் புன்னகைகூட மறையவில்லை. அப்படியொரு சாகஸத்தைச் செய்ய எத்தகைய உடல் வலிமையும் பயிற்சியும் வேண்டும் என்பதை எண்ணிப் பார்த்துப் பிரமிப்பில் மூழ்கிப் போனார்கள் பார்வையாளர்கள்.


கலைஞர்களுக்குத் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கைவினைப் பொருள்களைப் பரிசளித்துப் பாராட்டியது

கிழக்கு ஜெர்மானியரின் இந்தக் கலைப் படையெடுப்பு எதிர்ப்புக் காணாததோடு மகத்தான வரவேற்பையும் பெற்று வெற்றி கண்டது.

— கௌசிகன்







குறைந்த முதலீடு—
நிறைந்த மூலதனம்!


சுந்தரம் பைனான்ஸ் லேலண்ட், பிரிமியர், டாடா டிரக்குகள், பஸ்கள், அம்பாஸடர், பிரிமியர், ஸ்டாண்டர்ட் கேஜல் கார்கள் முதலியவைகளை வாங்க பண உதவி அளிக்கிறது.

சுந்தரம் பைனான்ஸ் உங்களுக்கு கீழ்க்கண்ட வகையில் உதவுகிறது: ☐ உங்கள் பழைய பஸ் அல்லது லாரியின் மேல் பண உதவி அளிக்கிறது. ☐ நீங்கள் முதலில் கட்டவேண்டிய தவணைத் தொகை பஸ் அல்லது லாரியின் விலையில் 25 சதவிகிதம் தான். ☐ குறைவான தவணைக்கட்டணம். ☐ எளிய இன்ஷ்யூரன்ஸ் தவணைச்சலுகைகள் ☐ சுலபமாக 36மாதங்களில் திருப்பிச் செலுத்தக்கூடிய சலுகை. மிக நேர்மையான, எளிய முறையில் சுலபமான நிபந்தனைகளின் பேரில், சுந்தரம் பைனான்ஸ் பண உதவி அளிப்பதில் முதன்மையில் திகழ்கிறது. எனவே பெரும்பாலான வாடிக்கையாளர்கள் சுமார் இருபது ஆண்டுகளாக சுந்தரம் பைனான்ஸுடன் நீடித்த தொடர்பு கொண்டு இருப்பதில் வியப்பில்லை.

sf

சுந்தரம் பைனான்ஸ் — நம்பகமான சேவைக்கு

சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்
37, மவுண்ட் ரோடு,
சென்னை 600006



SAA/SF/1112

சிவகாமியின் சபதம்

முப்பத்தோராம் அத்தியாயம்

வைஜயந்தி

வழித்துணையாகக் கிடைத்த இந்த வீரன் எந்த மயூரசன்மனைப் பற்றிக் கூறிவந்தானோ அதே மயூரசன்மனைக் குறித்து ஏற்கெனவே புத்த பிக்ஷு கூறியிருந்தது பரஞ்சோதியின் ஞாபகத்தில் இருந்தது. ஆனால் அவர் கூறிய வரலாறு இவ்வளவு ரஸமாக இல்லை. அந்த வரலாற்றை அவர் கூறியதன் நோக்கமும் பரஞ்சோதிக்குப் பிடிக்கவில்லை. ''அந்த மயூரசன்மனைப்போல் ஒரு வேளை நீயும் ஆனாலும் ஆகலாம்'' என்று புத்த பிக்ஷு கூறியது பரஞ்சோதியின் உள்ளத்தில் அருவருப்பைத்தான் உண்டு பண்ணிற்று. ஏன்? மயூரசன்மன் பேரிலேயே அவனுக்கு அருவருப்பு உண்டாக அது காரணமாக இருந்தது.

ஆனால், இப்போது மயூரசன்மன் செய்த வீரப் போரையும், உடம்பில் முப்பத்தாறு காயங்களுடன் அவன் பல்லவ மன்னனின் முன்பு கொண்டு வந்து நிறுத்தப்பட்டதையும் அறிந்ததும் அவன்மீது பரஞ்சோதியின் மரியாதை பன்மடங்கு வளர்ந்தது.

''அப்பேர்ப்பட்ட வீரன் பல்லவ மன்னனுக்குச் சரணாகதி அடைய மறுத்துத்தான் இருப்பான். அரசனுக்கு எதிராகக் கலகம் செய்பவர்களைப் பூமியில் புதைத்து யானையின் காலால் இடறச் செய்வதுதானே வழக்கம்? பல்லவ ராஜாவும் அப்படிச் செய்து விட்டாராக்கும்!'' என்று பரஞ்சோதி மனக் கசப்புடன் கூறினான்.

''இல்லை, தம்பி, இல்லை! சாதாரணமாய் அங்க, வங்க, கலிங்க, காஷ்மீர, காம்போஜ தேசங்களின் ராஜாக்களாக இருந்தால் அப்படித்தான் செய்திருப்பார்கள். ஆனால், காஞ்சி பல்லவ மன்னர்களின் காரியங்கள் ஒரு தனிப் போக்காக இருக்கும்...''

''பல்லவ மன்னர் என்ன செய்தார்?''

''மயூர சன்மனை மன்னித்ததோடு அவனுடைய வீரத்தை மெச்சி அவன், ஸ்தாபித்த ராஜ்யத்தை அவனுக்கே திருப்பிக் கொடுத்து விட்டார். அவரே நேரில் சென்று மயூர சன்மனுக்கு முடி சூட்டிவிட்டு வந்தார்!''

''அப்படியா ?'' என்று பரஞ்சோதி தன் உண்மையான வியப்பைத் தெரிவித்துவிட்டு, ''அதைக் குறித்து மயூர சன்மன் நன்றி பாராட்டினானா?'' என்று கேட்டான்.

''மயூர சன்மன் மட்டுமில்லை. அவன் ஸ்தாபித்த கதம்ப வம்சத்தில் பிறந்தவர்கள் எல்லோரும் சென்ற இருநூறு வருஷங்களுக்கு மேலாகப் பல்லவர்களுக்குக் கப்பம் செலுத்திக் கொண்டு நன்றியுடன் இருந்து வந்தார்கள். கிருஷ்ணா—துங்கபத்திரை நதிக்கரை ஓரமாய் அவர்களுடைய ராஜ்யமும் பெருகி வந்தது. கொஞ்ச காலத்துக்குப் பிறகு வைஜயந்தி பட்டணத்தில் தங்கள் தலைநகரை ஸ்தாபித்துக் கொண்டார்கள். அவர்களுக்கு ஆபத்து நேர்ந்த சமயங்களில் பல்லவ மன்னர்களும் வேண்டிய உதவி புரிந்து வந்தார்கள். இருபது வருஷங்களுக்கு முன்பு புலிகேசியின் சிற்றப்பன் மங்களேசன் கதம்ப ராஜ்யத்தின் மீது படையெடுத்த செய்தி தெரியுமோ இல்லையோ?''

அமரர் கல்கி



''தெரியாதே; அது என்ன விஷயம்?'' என்று பரஞ்சோதி ஆவலுடன் கேட்டான்.

''ஆமாம்; நீ சிறுபிள்ளை. உனக்கு எப்படி அது தெரிந்திருக்கும்? இப்போது ராட்சஸ ஸ்வரூபம் கொண்டு பல்லவ சாம்ராஜ்யத்தின்மீது படையெடுத்து வருகிறானே, இந்தப் புலிகேசியும், இவனுடைய தம்பிமார்களும் சிறு பிள்ளைகளாக இருந்தபோது, இவர்களுடைய சிற்றப்பன் மங்களேசன் என்பவன் வாதாபி ராஜ்யத்தை ஆண்டு வந்தான். அவனுக்குத் திடீரென்று அயல்நாடுகளைக் கைப்பற்றிப் பெரிய சக்கரவர்த்தி ஆகவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. துங்கபத்திரையைக் கடந்து கதம்ப ராஜ்யத்துக்குள் பிரவேசித்தான். வைஜயந்தி நகரம் வரையில் வந்து அந்த நகரத்தை முற்றுகை போட்டு விட்டான். அப்போது வடக்கு மண்டலத்துப் பல்லவ சைனியந்தான் கதம்ப ராஜாவின் ஒத்தாசைக்குச் சென்றது. வைஜயந்தி பட்டணத்துக்கு அண்மையில் பெரிய யுத்தம் நடந்தது.''

''யுத்தத்தின் முடிவு என்ன ஆயிற்று ?''

''கேட்பானேன்? வீர பல்லவ சைனியந்தான் ஜயித்தது. சளுக்கர்கள் தோற்றுப் பின்வாங்கி ஓடினார்கள். ஆஹா! அப்போது மட்டும் அந்தச் சளுக்கர் படையைப் பல்லவ சைன்யம் பின்தொடர்ந்து போய் அடியோடு நிர்மூலம் செய்திருந்தால் இப்போது இந்த யுத்தமே வந்திருக்காது!'' என்றான் அவ்வீரன்.

அந்தப் பழைய வரலாறுகளையெல்லாம் அறிந்து கொள்வதில் பரஞ்சோதிக்கு ரொம்பவும் சுவாரஸ்யமாக இருந்தது. யுத்தங்களைப் பற்றியும் அவை நடந்த முறைகளைப் பற்றியும் வெற்றி தோல்விகளைப் பற்றியும் தெரிந்து கொள்ள அவனுக்கு மிகவும் ஆவலாயிருந்தது. நிலா இல்லாத முன்னிரவில் வழிப் பிரயாணத்தின் அலுப்புத் தெரியாமலிருப்பதற்கும் அது ஏதுவாயிற்று.

''தோல்வி அடைந்து ஓடிய சளுக்க சைனியத்தைப் பல்லவ சைனியம் ஏன் தொடர்ந்து போகவில்லை?'' என்று அவன் கேட்டான்.

''அதற்குப் பல காரணங்கள் உண்டு. முக்கியமான காரணம் என்னவென்றால், வைஜயந்திப் பட்டணத்துக்கு அருகில் நடந்த யுத்தத்தில் பல்லவ சைனியம் ஒரு பெரிய நஷ்டத்தை அடைந்தது. பல்லவ சேனாபதி அந்தப் போரில் உயிர் துறந்தார்!''

பரஞ்சோதியின் நினைவு சட்டென்று வேறு பக்கம் திரும்பியது.

''ஐயா! அந்த வீர பல்லவ சேனாபதியின் பெயர் என்ன?'' என்று அவன் கேட்டான்.

''நீ கேள்விப்பட்டதில்லையா? சேனாபதி கலிப்பகைதான். இப்போதுள்ள கலிப்பகையாரின் மாமன்...''

''கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த வீர புருஷரை மணம் செய்து கொள்வதாக இருந்த திலகவதியாரைப் பற்றியும் கேட்டிருக்கிறேன்'' என்று பரஞ்சோதி பக்திப் பரவசத்துடன் கூறினான்.

''உனக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே! நீ பெரிய சைவன் போலிருக்கிறதே!'' என்றான் அவ்வீரன்.

''ஆம், ஐயா! என் உற்றார், உறவினர் எல்லாரும் சைவர்கள். திருநாவுக்கரசு அடிகளைத் தரிசிப்பதற்கென்றே நான் கிளம்பிக் காஞ்சிக்கு வந்தேன்...'' என்று கூறிய பரஞ்சோதி சட்டென்று நிறுத்தினான்.

''அப்படியா, தம்பி! நானும் சைவன்தான். திருநாவுக்கரசரை நீ காஞ்சியில் தரிசிக்கவில்லையா?''





''இல்லை.''

''ஏன்?''

''அதற்குள் இந்த வேலை வந்து விட்டது.''

''எந்த வேலை?''

பரஞ்சோதி சற்று நிதானித்து, ''ஐயா! என்னுடைய வேலை என்ன என்பது பற்றி நீங்கள் ஒன்றும் கேட்காவிட்டால் நான் பொய் சொல்ல வேண்டிய அவசியமும் ஏற்படாது!'' என்றான்.

''ஆஹா! நீ வெகு புத்திசாலிப் பிள்ளை!'' என்றான் அவ்வீரன். பிறகு சொன்னான்: ''தம்பி! உன்மாதிரியே எனக்கு ஒரு புதல்வன் இருக்கிறான். உன் வயதேதான் அவனுக்கும். இந்தப் பிரயாணத்தில் என்னோடு தானும் வர வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தான். நான் கூடாது என்று தடுத்துவிட்டேன். அதனால் அவனுக்கு என்மீது கோபம்.''

இப்படிப்பட்ட ஒரு வீரத் தந்தையைப் பெற்ற அதிர்ஷ்டசாலியைக்



குறித்துப் பரஞ்சோதியின் மனத்தில் சிறிது பொறாமை உண்டாயிற்று.

அந்தத் தகாத எண்ணத்தைப் பரஞ்சோதி மறக்க முயன்றவனாய், ''ஐயா! வைஜயந்தி யுத்தத்தைப் பற்றிக் கூறி இவ்விடம் நிறுத்தி விட்டீர்களே! அந்தப் போரில் சேனாபதி கலிப்பகை உயிர் துறந்ததாகச் சொன்னீர்கள். ஆனால், பல்லவ சைனியத்துக்கு வேறு சேனாதிபதி கிடைக்கவில்லையா? தோற்று ஓடிய சளுக்கர்களைத் தொடர்ந்து பல்லவ சைனியம் ஏன் போகவில்லை?'' என்று கேட்டான்.

''விசித்திர சித்தர் என்று பட்டப் பெயர் பெற்ற காஞ்சிச் சக்கரவர்த்தியை நீ பார்த்திருக்கிறாயா, தம்பி!'' என்று பொருத்தமில்லாமல் கேட்டான் அவ்வீரன்.

பரஞ்சோதி மௌனம் சாதித்தான்.

அவனுடைய மௌனத்தைப் பாராட்டி அவ்வீரன் தலையை ஆட்டிவிட்டு மேலே சொல்லுகிறான்:

''விசித்திர சித்தர் அந்தக் காலத்தில் மிக மிக விசித்திரமான எண்ணங்களைக் கொண்டிருந்தார். உலகத்தில் யுத்தம் என்பதே கூடாது; பகையும் துவேஷமும் இருக்கக் கூடாது; எல்லா ஜனங்களும் சிற்பம் முதலிய கலைகளில் ஈடுபட்டு ஆடல் பாடல்களில் ஆனந்தமாய்க் காலம் கழிக்க வேண்டும் என்ற எண்ணங்கள் அவர் மனத்தில் குடிகொண்டிருந்தன. நமக்கு இருக்கிற இராஜ்யம் போதும்; அதிகம் எதற்கு என்ற வைராக்கியத்தையும் கொண்டிருந்தார். அப்பேர்ப்பட்ட சமயத்தில் புலிகேசியிடமிருந்து சமாதானக் கோரிக்கையும் கிடைக்கவே, யுத்தத்தை நிறுத்தும்படி கட்டளை போட்டு விட்டார்.''

''புலிகேசி எப்போது அரசனானான்?''

''சிற்றப்பன் மங்களேசன், இராஜ்யத்தின் மேலுள்ள ஆசையினால், புலிகேசியையும் அவன் தம்பிகளையும் சிறையில் போட்டிருந்தான். மங்களேசன் வைஜயந்தியின் மேல் படையெடுத்த போது புலிகேசியும் அவன் தம்பிமார்களும் சிறையிலிருந்து தப்பி வெளியே வந்து விட்டார்கள். தோல்வியடைந்து திரும்பிய மங்களேசனைக் கொன்றுவிட்டு வாதாபி மன்னனாகப் புலிகேசி முடி சூட்டிக்கொண்டான். உடனே காஞ்சிச் சக்கரவர்த்திக்குச் சமாதானத் தூது அனுப்பினான். நாகசர்ப்பத்துடன் சமாதானம் செய்து கொண்டது போல் அந்தப் பாதகனுடன் மகேந்திர சக்கரவர்த்தியும் அப்போது சமாதானம் செய்து கொண்டார். அதனுடைய விபரீத பலனை இப்போது அனுபவிக்கிறார்.''

''என்ன விபரீத பலன்?''

''விபரீத பலன் என்னவா? புலிகேசியின் சைனியங்கள் இந்த யுத்தத்தில் வைஜயந்தியைக் கைப்பற்றிக் கொண்டு மேலேறி வருகின்றன என்பது உனக்குத் தெரியாதா? இன்னொரு பயங்கரமான செய்தி கேள்விப்படுகிறேன்: வைஜயந்திப் பட்டணத்தைக் கைப்பற்றியவுடனே புலிகேசி அந்த நகரிலிருந்த செல்வங்களையெல்லாம் கொள்ளையடித்து, நகரையே கொளுத்தும்படியாகக் கட்டளையிட்டான் என்று தெரிகிறது. இதை என்னால் நம்பவே முடியவில்லை. ஒரு வேளை உண்மையாக இருந்தால்...?''

''இருந்தால்...?''

''உண்மையாயிருந்தால், 'காஞ்சி மகேந்திர வர்மருக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்' என்றுதான் சொல்லுவேன். உலகத்தில் ராஜாக்

களும், சக்கரவர்த்திகளும் 'போரிலே புலி' என்றும், 'சண்டையில் சிங்கம்' என்றும் பட்டப்பெயர் வாங்குவார்கள். காஞ்சிச் சக்கரவர்த்தி 'சித்திரக்காரப் புலி' என்று பட்டம் பெற்றிருக்கிறார் அல்லவா? அவருக்கு இதெல்லாம் வேண்டியதுதானே!''

பரஞ்சோதி மீண்டும் மௌனத்தில் ஆழ்ந்தான். வைஜயந்திப் பட்டணம் எரிக்கப்பட்ட செய்தி அவன் மனத்தைக் கலக்கியிருந்தது.

சற்றுப் பொறுத்து அவ்வீரன், ''தம்பி! எங்கே போகிறாய், என்ன காரியமாகப் போகிறாய் என்று உன்னை நான் கேட்கவில்லை. ஆனால் இன்று ராத்திரி எங்கே தங்குவதாக உத்தேசம் என்று சொல்லுவதில் உனக்கு ஆட்சேபம் ஒன்றும் இராதே?'' என்றான்.

''இந்த மலையைத் தாண்டியதும் அப்பால் ஒரு மகேந்திர விடுதி இருப்பதாகச் சொன்னார்கள். அதில் தங்கலாமென்று எண்ணியிருக்கிறேன். இருட்டுவதற்கு முன்னால் மகேந்திர விடுதிக்குப் போய்ச் சேர்ந்து விடலாம் என்று நினைத்தேன்.''

''ஆ! அதோ பார் வெளிச்சத்தை! நீ சொன்ன மகேந்திர விடுதி அந்த வெளிச்சம் தெரிகிற விடுதான். நானும் இன்றிரவு அங்கேதான் தங்கப் போகிறேன்'' என்றான் அவ்வீரன்.

முப்பத்திரண்டாம் அத்தியாயம்


கும்பகர்ணன்

பிரயாணிகள் இருவரும் விடுதியை நெருங்கியபோது அங்கே ஆயத்தமாகக் காத்திருந்த வீரர்கள் நால்வர் கையில் உருவிய கத்திகளுடன் பளிச்சென்று முன்னால் வந்து, ''நில்!'' என்றார்கள். விடுதியின் வாசலில் நின்ற இன்னொரு வீரன் கையில் பிரகாசமான தீவர்த்தியைப் பிடித்துக் கொண்டிருந்தான். அதன் ஒளியில் மற்ற நால்வருடைய கைகளிலும் இருந்த கத்திகள் மின்னித் திகழ்ந்தன.

அப்போது அந்தக் குதிரை வீரன் தன் அங்கியிலுள்ளிருந்து ஏதோ ஓர் அடையாளத்தை எடுத்துக் காட்டவே, அந்த வீரர்கள் நால்வரும் சிறிது மரியாதையுடன் ஒதுங்கி நின்று அவனுக்கு வழி விட்டுப் பின்னால் வந்த பரஞ்சோதியை அணுகினார்கள். குதிரை வீரன் திரும்பிப் பார்த்து, ''அவனும் என்னுடன் வருகிறான்!'' என்று சொல்லவே, பரஞ்சோதிக்கும் அவர்கள் வழி விட்டார்கள்.

மூத்த பிரயாணி, விடுதித் தலைவனிடமும் மேற்சொன்ன அடையாளத்தைக் காட்டி, ''நாங்கள் இருவரும் இன்று இரவு விடுதியில் தங்க வேண்டும். குதிரைகளுக்கும் தீனி வேண்டும்'' என்றான்.

விடுதித் தலைவன் மற்ற வீரர்களைப் போலவே மரியாதையுடன், ''அப்படியே ஐயா!'' என்று மறுமொழி கூறினான். இதெல்லாம் பரஞ்சோதிக்கு மிக்க வியப்பை அளித்தது. அந்த வீரன் ஏதோ பெரிய இராஜாங்கக் காரியமாகப் போகிறான் என்றும், பரஞ்சோதி ஊகித்துக்கொண்டான். ஒருவேளை பல்லவ சைனியத்தைச் சேர்ந்த பெரிய தள



பதியாகக்கூட அவன் இருக்கலாம் என்றும் சந்தேகித்தான். தான் இப்போது ஏற்றுக் கொண்டிருக்கும் காரியம் ஒரு விதமாக முடிந்த பிறகு, இந்த வீரன் எங்கே இருந்தாலும் தேடிக் கண்டு பிடித்து இவனுடைய சிநேகத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை பரஞ்சோதிக்கு உண்டாயிற்று.

இருவரும் உணவு அருந்தியபோது, அவ்வீரன் பரஞ்சோதியைப் பார்த்து, ''தம்பி! வைஜயந்தி யுத்தத்தைப் பற்றி உனக்குச் சொன்னேனல்லவா? அந்தக் காலத்தில் எனக்குக் கிட்டத்தட்ட உன் வயதுதான் இருக்கும். அப்போது ஒரு தடவை நான் இந்த விடுதியில் தங்கி

யிருக்கிறேன். அன்றிரவு எனக்கு ஒரு விசித்திரமான அநுபவம் ஏற்பட்டது!'' என்றான்.

''அது என்ன?'' என்று பரஞ்சோதி ஆவலுடன் கேட்டான்.

''தம்பி! இத்தனை நேரமும் நாம் ஒருவர் பெயரை ஒருவர் தெரிந்து கொள்ளாமலே பேசிக் கொண்டிருக்கிறோம். என் பெயரைத் தெரிவிப்பதில் எனக்கு ஆட்சேபம் ஒன்றும் இல்லை. எனக்கு என் தாய் தந்தையர்கள் இட்ட பெயர் வஜ்ரபாஹு. ஆனால், என் சிநேகிதர்கள் என்னைக் கும்பகர்ணன் என்று அழைப்பார்கள். தூங்கினால் அப்படித் தூங்குவேன். இன்று போலவே அன்றைக்கும் நாளெல்லாம் பிரயாணம் செய்திருந்தபடியால் அசந்து தூங்கி விட்டேன். அப்போது என்ன நடந்தது தெரியுமா ?''



'' ஏதாவது பிசாசு சொப்பனம் கண்டு உளறியடித்துக் கொண்டு எழுந்தீர்களாக்கும்?'' என்று பரஞ்சோதி குறும்பாகக் கூறினான்.

அதைக் கேட்ட வஜ்ரபாஹு நகைத்துவிட்டு, ''இல்லை, இல்லை! அதைவிட ஆபத்தான விஷயம்! வீடு இடிந்து என் மேலே விழுந்துவிட்டது போல் சொப்பனம் கண்டு கண்ணை விழித்துப் பார்த்த போது, ஐந்தாறு தடியர்கள் என் மேல் உட்கார்ந்து அமுக்கிக் கொண்டிருந்தார்கள். இரண்டு பேர் என் இடுப்பைத் தடவிக் கொண்டிருந்தார்கள். எ ன் ன த் து க் கா க த் தெரியுமா?'' என்று கேட்டான்.

'' ஐயா! என்னை ஞானதிருஷ்டியுள்ளவன் என்று நினைத்துக் கொண்டீர்களா? தாங்கள் சொல்லாவிட்டால் எனக்கு எப்படித் தெரியும் ?'' என்றான் பரஞ்சோதி.

''நல்லது, தம்பி! நான் சேனாபதி கலிப்பகையாருக்குக் கொண்டு போன ஓலையைத் தஸ்கரம் செய்வதற்காகத்தான். என் இடுப்பில் அந்த ஓலை இருக்கும் என்று அந்த முரடர்கள் எண்ணினார்கள்!''

''ஆஹா!'' என்றான் பரஞ்சோதி. அவனை அறியாமல் அவனுடைய கை இடுப்பைத் தொட்டுப் பார்த்தது. இது ஒரு கணந்தான்; மறுகணம் கை பழைய நிலையை அடைந்தது.

ஆனால், அந்த ஒரு கண நேரச் செய்கையை வீரன் வஜ்ரபாஹுவின் கூரிய கண்கள் கவனிக்காமல் போகவில்லை.

''அப்புறம் என்ன ஆயிற்று, ஐயா! அ ந் த முரடர்களுக்குத் தாங்கள் கொண்டு போன ஓலை கிடைத்ததா?'' என்று பரஞ்சோதி கேட்டான்.

''ஓலை கிடைக்கவில்லை. என்னுடைய கை முஷ்டியினால் தலைக்கு ஏழெட்டுக் குட்டுக்கள் கிடைத்தன! பெற்றுக் கொண்டு தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று ஓட்டம் பிடித்தார்கள்!''

பரஞ்சோதி சிரித்துவிட்டு, ''அந்த முட்டாள்களுக்கு நன்றாய் வேண்டும்! உங்களுடைய கும்பகர்ணத் தூக்கத்தைக் கலைத்தார்கள் அல்லவா? யாராவது ஒருவன் தனியாக வந்து இடுப்பைத் தடவியிருந்தால் ஒரு வேளை ஓலை கிடைத்திருக்கும்'' என்றான்.

'' அப்போதும் கிடைத்திராது '' என்றான் வஜ்ரபாஹு.

''ஏன்? நீங்கள்தான் கும்பகர்ணன் மாதிரி தூங்குவேன் என்று சொன்னீர்களே ?''

''உண்மைதான், தம்பி! ஆனால், ஓலை இடுப்பில் இருந்தால்தானே கிடைக்கும் ?''

''பின் வேறு பத்திரமான இடத்தில் அதை வைத்துக்கொண்டிருந்தீர்களா?''

''ஆமாம் அக்கினி பகவானிடமே ஒப்படைத்து விட்டேன்.''

''இதென்ன? நல்ல தூதராயிருக்கிறீர்களே ? ஓ லை யை நெருப்பிலே போட்டுவிட்டு எதற்காகப் பிரயாணம் செய்தீர்கள் ?''

'' ஓலையை நெருப்பிலே போடுவதற்கு முன்னால் அதைப் படித்து விஷயத்தை மனத்தில் பதிய வைத்துக் கொண்டேன்.''

புதிது—:பாஸ்:போமின் தயாரிப்பாளர்கள் அளிக்கும்

:பாஸ்:போமின் அயன்

...ஏனெனில், பெண்களுக்கு அயன் அதிகம் தேவை

பெண்களுக்கு அயன் அதிகம் தேவை. ஏனெனில் மாதந்தோறும் அவர்களுக்கு அயன் இழப்பு ஏற்படுகிறது. உயிர்ச் சத்தான அயன் இட்டு நிரப்பப்பட வேண்டும்.

பெண் கருவுற்றிருக்கும் போதும், தன் குழந்தைக்குப் பாலூட்டும் காலத்திலும் அவளுக்கு அதிக அயன் சத்து தேவைப்படுகிறது. ஏனெனில் அக்காலங்களில் தன் குழந்தைக்கும் சேர்த்துப் போதுமான அயனைப் பெற வேண்டியிருக்கிறது.

இழந்த அயன் சத்தை இட்டு நிரப்பவும், உடலில் அயன் சத்தைச் சமநிலையில் பெற்றிருக்கவும் :பாஸ்:போமின் அயன் அருந்துங்கள்; :பாஸ்:போமின் அயன் ஒவ்வொரு பெண்ணிற்கும் தேவையான டானிக்.

:பாஸ்:போமின் அயன் சத்து நிறைந்த சிவப்பு ரத்த செல்களை உருவாக்க உதவுகிறது—உங்களை இளமையோடு இருக்கச் செய்கிறது.

:பாஸ்:போமின் அயன் வைட்டமின்களையும் தாதுப் பொருட்களையும் கூட உங்களுக்குத் தருகிறது—உங்களைச் சுறுசுறுப்புடனும் உற்சாகத்துடனும் வைத்திருக்கிறது.

இன்று முதல் :பாஸ்:போமின் அயனை அருந்துங்கள். ஒவ்வொரு நாளும் அருந்துங்கள்.

எல்லா கெமிஸ்டுகளிடமும் 240 மி.லி., 480 மி.லி. ஆகிய 2 சைஸ்களில் கிடைக்கிறது.





புதிது!
:பாஸ்:போமின் அயன்—
பெண்களுக்கென்று
விசேஷ முறையில்
உருவாக்கப்பட்டுள்ள
முதல் டானிக்


SQUIBB SARABHAI CHEMICALS

:பாஸ்:போமின் [illegible] ரெஜிஸ்டர்டு ட்ரேட் மார்க்காகும்.

*இ. ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்ப்பரேடெட் அவர்களின் ரெஜிஸ்டர்டு ட்ரேட் மார்க்கை குறிப்பதாகும். இதை சேபிசல் உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.


Shilpi-HPMA-7A/73 Tam

தலைவலியா?



சக்தி வாய்ந்த, நம்பகமான அனாஸின்

விரைவில் குணமளிக்கிறது



"தலைவலியைப் போக்க நான் எப்பொழுதும் அனாஸின் சாப்பிடுகிறேன்" என்கிறார், பம்பாயிலுள்ள ஒரு கப்பல் கம்பெனி அதிகாரி திரு. பரமசிவம்.

சக்தி வாய்ந்தது— ஏனெனில், உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி நிவாரணியை அதிக அளவில் கொண்டது அனாஸின். ஆகையால்தான் அனாஸின் வலியிலிருந்து விரைவிலேயே நிவாரணமளிக்கிறது.


நம்பகமானது— திரு. பரமசிவம் போன்ற லட்சக்கணக்கானவர்கள் அனாஸினை நம்புகிறார்கள். டாக்டரின் நம்பகமான மருந்தைப்போல பல மருந்துகளின் கலவையே அனாஸின்.

ஜலதோஷம் மற்றும் ஃப்ளுவினால் ஏற்படும் வலிகள் மற்றும் நோவுகள், தலைவலி, முதுகுவலி, தசைவலி, பல்வலி ஆகியவற்றுக்கு அனாஸின் சக்திவாய்ந்த நிவாரணி.

சக்தி வாய்ந்த, நம்பகமான

அனாஸின்

இந்தியாவின் புகழ் பெற்ற வலி-நிவாரணி



Regd. User of TM : Geoffrey Manners & Co. Ltd.

A-43

''ஓஹோ! இராஜாங்கத் தூதர்கள் அப்படிக்கூடச் செய்யலாமா என்ன?''

''சமயோசிதமாகக் காரியம் செய்யத் தெரியாதவன் இராஜாங்கத் தூதனாக இருக்கவே அருகனில்லை தம்பி! இம்மாதிரி அபாயம் ஏதாவது நேரலாம் என்று நான் எதிர்பார்த்தேன். எனவே, முன் ஜாக்கிரதையாகக் காரியம் செய்தேன். அதற்காகச் சக்கரவர்த்தியிடமிருந்து எனக்கு வெகுமதியும் கிடைத்தது.''

இதையெல்லாம் கேட்ட பரஞ்சோதியின் உள்ளம் பெரிதும் குழப்பத்துக்கு உள்ளாயிற்று. இரவில் விடுதிகளில் தங்க நேர்ந்தால் மற்றவர்கள் படுக்கும் அறையில் படுக்கக் கூடாது என்று புத்த பிக்ஷு எச்சரித்தது அவனுக்கு ஞாபகம் வந்தது.

நல்ல வேளையாக அன்றிரவு படுத்துக் கொள்வதற்கு அவனுக்குத் தனி அறையே கொடுத்தார்கள். வஜ்ரபாஹுவும் ''தம்பி! இனிமேல் உன் வழி வேறு; என் வழி வேறு. நான் அதிகாலையில் எழுந்து போய்விடுவேன். உன்னை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. எப்போதாவது உதவி தேவையிருந்தால் என்னிடம் வரத் தயங்காதே!'' என்று சொல்லி விடை பெற்றுப் படுக்கச் சென்றான்.

• • •

பரஞ்சோதி படுத்துக் கொள்ளும் போது வஜ்ரபாஹு கூறிய அநுபவம், அவனுக்கு ஞாபகம் இருந்தபடியால், அயர்ந்து தூங்கிவிடக் கூடாது என்றும் ஏதாவது சத்தம் கேட்டால் பளிச் சென்று எழுந்துவிட வேண்டுமென்றும் மனத்துக்குள் சங்கல்பம் செய்துகொண்டான். ஆனால், வாலிபப் பருவமும், நாளெல்லாம் பிரயாணம் செய்த களைப்பும் சேர்ந்து, படுத்த சிறிது நேரத்துக்கெல்லாம் அவனை நித்திரையில் ஆழ்த்திவிட்டன.

எனினும், அவனுடைய தூக்கம் அமைதியான தூக்கமாக இருக்கவில்லை. பயங்கரமான கனவுகள் மாறி மாறித் தோன்றிக் கொண்டிருந்தன. செந்நிறப் புரசம் பூக்கள் நிறைந்த பிரதேசத்தில் ஆவி வடிவத்துக் குதிரை வீரர்களுக்கு மத்தியில் தானும் ஓர் ஆவி வடிவமாகி ஓயாது சுற்றி அலைந்து கொண்டிருந்ததாக அவனுக்குத் தோன்றியது. அலைந்து அலைந்து களைத்துப் போன பிறகு ஒரு மலைக் குகையில் அவன் போய்ப் படுத்துக் கொள்கிறான். கனவுக்குள் தூங்குவதாகக் கனவு காண்கிறான்! ஆனால், அந்தத் தூக்கத்திலும் நினைவு இருந்து கொண்டிருக்கிறது. கண்கள் மட்டும் மூடியிருக்கின்றன. பிசாசுகள் ஒன்று மாற்றி ஒன்று வந்து அவனுடைய இடுப்பைத் தடவுகின்றன. 'நல்ல வேளை, ஓலை இடுப்பில் இல்லை; தலைக்கு அடியில் வைத்துக் கொண்டிருக்கிறோம்' என்று தோன்றுகிறது. கண்ணைத் திறந்து பார்த்தால் அந்தப் பிசாசுகள் ஓடிவிடுமென்று அவன் எண்ணுகிறான். ஆனால், எவ்வளவு முயன்றும் கண்களைத் திறக்கவே முடியவில்லை.

அப்புறம் எங்கேயோ வெகுதூரத்தில் ஒரு கொள்ளிவாய்ப் பிசாசு காணப்படுகிறது. அதை அழைத்துக்கொண்டு ஒரு கரும் பிசாசு அவனை நோக்கி வருகிறது. அருகே, அருகே, அருகே அவை நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன!



கொள்ளிவாய்ப் பிசாசின் வாயிலுள்ள தீயின் ஒளியினால் அவனுடைய மூடியுள்ள கண்கள் கூசுகின்றன. கடைசியில் அந்த ஒளியின் கடுமையைப் பொறுக்க முடியாமல் கண்ணிமைகள் திறந்து கொள்கின்றன.

ஆனால், எதிரில் வந்தவை கொள்ளிவாய்ப் பிசாசும் இல்லை, கரும் பிசாசும் இல்லை என்பதை அவனுடைய திறந்த கண்கள் தெரிவிக்கின்றன. வீரன் வஜ்ரபாஹுவும், அவனுக்குப் பின்னால் கையில் விளக்கு ஏந்திக் கொண்டு அந்த விடுதியின் தலைவனுந்தான் வந்துகொண்டிருந்தார்கள்!

பரஞ்சோதி திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். அவனுடைய வலது கை அருகில் தரையில் கிடந்த வேலைப் பற்றியது.

(தொடரும்)





இளவரசி திருமணம் இனிய வைபவம்

1968 மெக்ஸிகோ ஒலிம்பிக்கில் பிரிட்டிஷ் ஒலிம்பிக் ஆட்டக்காரர்களுக்கு ஒரு விருந்து நடந்தது. இந்த வைபவத்தில் முதல் முறையாக பிரிட்டிஷ் இளவரசி ஆனும், ராணியின் குதிரைப் படை அதிகாரி மார்க் பிலிப்ஸும் சந்தித்தார்கள்; தங்கள் இதயங்களை இரகசியமாகப் பரிமாறிக் கொண்டார்கள். இளவரசி ஆன் குதிரைச் சவாரியில் அசாத்திய மோகம் கொண்டவர். குதிரைச் சவாரிப் பந்தயத்தில் ஐரோப்பிய சாம்பியன். இரண்டாம் வயதிலிருந்தே குதிரைச் சவாரியில் ஈடுபட்ட மார்க் பிலிப்ஸ் ஒலிம்பிக் போட்டியில் 'ரிஸர்வ் ரைடராக' விளங்கி விசேஷ விடுமுறையில் மெக்ஸிகோ வந்திருந்தார். இரு குதிரையேற்றக் கலைஞர்களை ஒன்றுபட வைத்த புகழைப் பெறுகிறது மெக்ஸிகோ ஒலிம்பிக். இவர்களது இரகசியக் காதல் அம்பலமானது பாட்மிண்டனில் 1971ல் நடந்த குதிரைச் சவாரி போட்டிகளின்போது தான்! வெற்றி பெற்ற பிரிட்டிஷ் குதிரைச் சவாரிக் கலைஞர்கள் கோஷ்டியில். இளவரசி ஆனும் பிலிப்பும் இருந்தார்கள்!

காதல் பரீட்சையிலும் வெற்றி முனையை நோக்கிக் குதிரைகளில் பாய்ந்தார்கள். சில வருஷங்களாகவே அவர்கள் பிலிப்பின் பண்ணையில் குதிரைச் சவாரி பயிற்சியோடு இதயப் பரிவர்த்தனையும் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது வெட்டவெளிச்சமாயிற்று. காதலை இரகசியமாக வைத்திருப்பது நடக்காத காரியமாகப் போயிற்று! பிலிப்ஸ் தம் காதலியை நரி வேட்டையில் ஈடுபட வைத்தது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தி விட்டது. பத்திரிகைகளும்—டெலிவிஷனும் இவர்களது காதலை அலச ஆரம்பித்து விட்டன.

காதல் கனிந்து இளவரசி ஆனும் லெப்டினன்ட் மார்க் பிலிப்பும் இந்த மாதம் பதினாலாம் தேதி திருமணம் செய்து கொள்கிறார்கள்.

மார்க் பிலிப்ஸின் தகப்பனார் பீட்டர் பிலிப்ஸ் பெரும் பணக்காரர். இளவரசி ஆன் — மார்க் பிலிப்ஸ் திருமணச் செய்தியைத் தமது பதினாறும் நூற்றாண்டு மாளிகையில் கேள்விப்பட்டதும் மகிழ்ந்தார். மேஜர் பீட்டர் பிலிப்ஸ் பிரிட்டிஷ் ராணுவத்தில் இரண்டாம் உலக யுத்தத்தின்போது இத்தாலியில் சேவை செய்து 'பதக்கம்' பெற்றவர். தந்தையைப் போலவே ஆறு அடி ஒன்றரை அங்குலம் உயரமுள்ள மார்க் பிலிப்ஸ் சான்ட்ஹர்ஸ்ட் ராணுவப் பள்ளியில் 'காப்டன்'னுக்கான பரீட்சையில் இருபத்தைந்து வயது ஆவதற்கு முன்பே தேறியவர். மால்பரோவின் ரக்பி காப்டன். மூன்று வருஷங்களாக ராணியின் குதிரைப் படை அதிகாரியாக மாதம் 2300 பவுன் சம்பாதித்து வருகிறார்!

"திருமணத்துக்குப் பின் ராணுவத்தில் உங்கள் எதிர்காலம் என்ன?" என்று மார்க் பிலிப்ஸைப் பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது, "கடமை தவறாது நன்கு பணியாற்றுவதே என் குறிக்கோள்!" என்றாராம்.

இருபத்திரண்டு வயதான பிலிப்ஸின் சகோதரி இந்தத் திருமணச் செய்தி பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டதும், "எனக்கு ஒரே 'திரில்' ஆக இருக்கு. இளவரசி ஆன் எனக்கு மன்னியாக (Sister-in-Law) வருவது!" என்று குதித்தாளாம்! இருக்காதா பின்னே!

இளவரசி ஆன் பிறந்தது 1950ம் ஆண்டு ஆகஸ்டு 15ந் தேதி. பட்டத்து

★ இளவரசி ஆனும் மார்க் பிலிப்ஸும்.

★ ஸான்ட்ஹர்ஸ்ட் ராணுவக் கல்லூரியில் இளவரசி ஆன் சார்ஜண்ட் மேஜருக்குப் பதக்கம் அளிக்கிறார்.

★ பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் பிரத்தியேகக் கப்பல் பிரிட்டானியாவில் ஓர் அறை. இளவரசி ஆன் - மார்க் பிலிப்ஸ் தம்பதி இக்கப்பலில்தான் தேனிலவுக்குப் புறப்படுகிறார்கள்.



இளவரசன் சார்லஸுக்கு உள்ளதுபோல் ராஜீய விவகாரங்களில் அவ்வளவாக இவளுக்கு வேலை இல்லைதான் என்றாலும் தங்கை ஆன், ஸூடானுக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரதிநிதியாகச் சென்று இரு நாடுகளுக்குமுள்ள மனக் கசப்பை நீக்கியிருக்கிறாள். ஒரு முறை 'ஸ்கிரிட்னி' என்ற ரஷ்யக் கப்பலுக்குச் சென்று ரஷ்ய மாலுமிகளுடன் மொழி பெயர்ப்பாளரின் உதவி கொண்டு அளவளாவினாள். அவர்களது கேள்விகளுக்குப் பதில் தந்து, மகிழ்வித்து அவர்கள் மனத்தைக் கொள்ளை கொண்டாள். ருஷ்ய மாலுமிகள் தாங்கள் அணிவது போன்ற ஒரு தொப்பியை இளவரசிக்கும் அணிவித்து அழகு பார்த்துக் குதூகலித்தனர். பிரிட்டனின் அரச குடும்பத்துக்கு அரசியல் அதிகாரங்கள் அதிகமாக இல்லை. ஆயினும் செல்வாக்கு மிகுதியாக உண்டு. பிரிட்டனுக்கும் இதர நாடுகளுக்குமிடையே நட்புறவையும் நேசப்பான்மையையும் வளர்ப்பது, உள் நாட்டில் முக்கியமான விழாக்களில் பயன்படுத்திக் கொண்டு கௌரவிப்பது, மக்களின் குறைகளைக் கூடிய மட்டில் உணர்ந்து மந்திரி சபைக்கு ஆலோசனைகள் வழங்குவது போன்ற அலுவல்கள் அவர்களுக்கு உண்டு. திருமணத்துக்குப் பிறகு பிரிட்டிஷ் அரசாங்கம் இளவரசி ஆனுடைய 'அலவன்ஸ்' தொகையை 35,000 பவுனாக உயர்த்தும்.

இளவரசி குதிரைச் சவாரி மோகத்தோடு கார் ஓட்டும் ஆசையும் கொண்டவர். சட்டம் விதித்துள்ள வேகத்தைவிட அதிக வேகத்தில் கார் ஓட்டியதாக இரு தடவைகள் போலீஸார் அரண்மனைக்குத் தாக்கீது அனுப்பி வைத்து விட்டார்கள். பிரிட்டனில் அரசனானாலும் சாதாரண பிரஜையானாலும் சட்டம் சட்டம்தான்.

இளவரசிக்கு இப்போது முதலே — கல்யாணத்துக்குப் பல மாதங்கள் முன்பிருந்தே பரிசுகள் வந்து குவிய ஆரம்பித்துவிட்டன.

இதில் மனத்தைத் தொடும் அம்சம் என்னவென்றால் பெருந் தலைவர்கள், பிரமுகர்கள், நண்பர்கள் மட்டுமின்றிச் சர்வ சாதாரணமான மக்களும் அன்புடன் பரிசு அனுப்பி வைக்கிறார்கள். ஓர் ஆஸ்திரேலியப் பெண்மணி ஸ்ரீமதி வியால் ராம்லே ஒரு கூடை நிறைய விலையுயர்ந்த பீங்கான் பாத்திரங்களைப் பரிசளித்தார். ஒரு நெசவாலையில் பணிபுரியும் சிப்பந்திகள் திரைச் சீலைகளை அனுப்பியிருக்கிறார்கள். இப்படிப் பலப்பல.

இந்தப் பிரபல திருமணத்தை முன்னிட்டு அகில உலகப் பிரமுகர்கள் லண்டனில் குழுமுகிறார்கள்.

திருமணத்துக்குப் பிறகு புது மணத் தம்பதிகள் அரச குடும்பத்தின் பிரத்தியேகக் கப்பலான 'பிரிட்டானியா'வில் மூன்று வாரங்கள் தேனிலவைக் கரீபியன் தீவுகளில் கழிக்கச் செல்கிறார்கள்.

பிரிட்டானியா கப்பலில் ஒரு விநோத சம்பிரதாயம் உண்டு. கட்டளைகள் எல்லாம் மௌனமான சைகைகளில்தான் பிறப்பிக்கப்படும்! எனவே தேனிலவில் செல்லும் இளம் தம்பதியருக்கு ஓர் இடைஞ்சலும் இருக்காது! ''பிரிட்டானியா'' ஏற்கனவே தேனிலவுக்குப் பழக்கப்பட்டதுதான். முதன் முதலில் தேனிலவுக்குப் பிரிட்டானியாவில் செல்லும் பெருமை ஆனின் சித்தி மார்கரெட்டுக்கும் அந்தோணி ஆர்ம்ஸ்ட்ராங் ஜோன்ஸுக்கும் கிட்டியது. இப்போது இரண்டாவது முறையாகத் தேன் நிலவு தம்பதியைச் சுமக்கிறது 'பிரிட்டானியா'.

அக்கரைச் சீமையில் நடக்கும் இளவரசி ஆன் — பிலிப்ஸ் கல்யாணத்துக்குக் 'கௌரி கல்யாணம்' பாடி, வைபோகமாக நடக்க வாழ்த்துவோம்.

— பி.எஸ்.எம்.

விடுதலை?

ஸ்ரீரங்கம் நரசிம்மன்



கையில் ஒரு சிறு தோல் பெட்டியுடன் வண்டியைவிட்டு இறங்கிய மது, பிளாட்பாரத்திலேயே மெய்மறந்த நிலையில் சில நிமிஷங்கள் நின்று கொண்டிருந்தான். 'திருவாரூர்ச் சந்திப்பு' என்று பெயர்ப் பலகையில் எழுதியிருப்பதைப் பார்த்ததுமே அவன் உடல் முழுதும் ஓர் இன்ப உணர்ச்சி பரவியது. அப்பா! எவ்வளவு நாட்கள் ஓடி விட்டன !

நாட்களா ? வருஷங்கள் !

பதினொரு வருஷங்கள் ஓடி விட்டன. அவன் வரையில் ஓடிவிட்டன என்ற வார்த்தைகள் பொருந்தாது. பதினொரு வருஷங்களும் பதினொரு யுகங்களாக உதிர்ந்தன என்று தான் சொல்ல வேண்டும். இந்த ஜன்மத்தில் திரும்பவும் ஊரைப் பார்ப்போமா என்று வருடக் கணக்கில் ஏங்கிக் கொண்டிருந்தவனுக்குப் பிளாட்பாரத்தில் நிற்கையில் தேவர்களும் கந்தர்வர்களும் நடமாடும் சொர்க்க பூமியில் அடியெடுத்து வைத்து விட்டதைப் போன்ற ஓர் ஆனந்தம் ! இருக்காதா ? அவன் பிறந்த மண்ணுயிற்றே ! அத்துடன், அவனைப் பெற்றவனும் அவனுடன் பிறந்தவனும் இந்த மண்ணில்தானே இருக்கிருர்கள் !

'இருவருமே இருக்கிருர்களா?' இந்தக் கேள்வி அவன் நெஞ்சில் தோன்றியதும், அவனே அறியாமலே கால்கள் நகரத் தொடங்கின. திருவாரூர் நகர எல்லையிலிருந்து பள்ளிவார மங்கலம் கிராமத்துக்குச் செல்லும் பாதை பிரியும் இடத்துக்கு வந்ததும் சிறிது நின்ருன். எங்கும் வயல் வெளி ! வண்டிப் பாதையோடு போகாமல் வயல்வெளியில் புகுந்து நடந்தால் சீக்கிரமே வீட்டை அடையலாம். பெரு மழையின் முன்னறிவிப்பாகக் குளிர்ந்த காற்று வீசத் தொடங்கியது. வயலில் நடப்பதும் அவ்வளவு எளிதாக இல்லை. இருப்பினும் கூடியவரை விடுவிடுவென்று நடந்தான். அன்றைக்குப் பார்த்தாற் போலவே எல்லாம் இன்னும் இருந்தன. வயல், வரப்பு, இறைவு எதுவும் மதுவுக்கு மறக்கவில்லை. சற்றுத் தூரத்தில் மேட்டுப் பாங்கான ஒரு நிலப்பரப்பு தெரிந்தது. ஒற்றை மரம் சற்றுத் தள்ளி ஒரு கொட்டகை. சுடுகாடுதான்,

மதுவுக்குப் பழைய ஞாபகங்கள் வந்தன. அவன் தந்தை திடீரென்று மாரடைப்பால் இறந்து விட்டார். அவர் இறப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு மனைவி மக்களுடன் இரவு வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது, ''சஞ்சீவி! நீயும் மதுவும் ராம லக்ஷ்மணர்களைப்போல் எப்பொழுதும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நானும் அம்மாவும் போய்விட்டால், மதுவை நீதான் கவனித்துக் கொள்ள வேண்டும்..... அவனுக்கு ஒரு குறையும் இருக்கக் கூடாது.....'' என்று ஏதேதோ கூறினுர்.

இனி சஞ்சீவிதான் குடும்பத்துக்குப் பெரிய ஆண் மகன் !

தன் பொறுப்புக்களை உணர்ந்த சஞ்சீவி, முன்னைவிட இன்னும் அதிகமாக உழைத்தான். 'மது மது' என்று தம்பியிடம் உயிராயிருந்தான். தந்தை போய்விட்டாலும் அவர்



வார்த்தைகள் வீண் போகாமல் மதுவை அடுத்த வருடம் திருவாரூர்ப் பள்ளியில் கொண்டு சேர்த்தான். ஒரு சைக்கிளும் வாங்கிக் கொடுத்து விட்டான்.

சஞ்சீவி தம்பியிடம் அன்பு செலுத்தினான் என்றால் மது, அண்ணனிடம் பக்தியே கொண்டிருந்தான்!

மது ஹைஸ்கூல் படிப்பை முடித்துவிட்டுத் தட்டெழுத்துச் சுருக்கெழுத்து முதலியவைகளும் படித்துத் தேறினான்.

சஞ்சீவிக்குச் சிறு வயதிலேயே திருமணம் செய்துவிட்டார்கள். தந்தை காலமான இரண்டு வருடங்களுக்கெல்லாம் அவனுடைய உறவினரின் பெண் ஒருத்தியை மணந்து கொண்டான். அடுத்த வருடம் ஒரு குழந்தைக்கும் தந்தையாகிவிட்டான்!

மது வேலைக்காகப் பல இடங்களில் முயற்சி செய்தான். கல்கத்தா ரயில்வே காரியாலயத்திலிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது. மதுவின் தாயாரும் சஞ்சீவியும் அவனை அவ்வளவு தூரம் அனுப்புவதற்குத் தயங்கினார்கள். மது அவர்களுக்குத் தைரியம் சொல்லிவிட்டுக் கிளம்பினான். அப்பொழுது அவனுக்கு இருபத்தொரு வயது.

அவன் கல்கத்தாவுக்குப் புறப்பட்ட நாள் நினைவுக்கு வந்தது. அவனுடைய தாயார்கூட ஓரளவு தைரியமா யிருந்தாள். ஆனால் சஞ்சீவி மிகவும் கலங்கிவிட்டான். கடைசி நிமிஷத்தில், ''மது! நீ இந்தப் பக்கமே ஏதாவது வேலை தேடிக் கொள்ளக் கூடாதா? அப்படி வேலை கிடைக்காவிட்டால், நிலத்திலிருந்தும் தோட்டத்திலிருந்தும் கிடைப்பதைக் கொண்டு காலத்தை ஓட்டுவோமே!'' என்றான்.

''அண்ணா! வயலும் தோட்டமும் இப்ப சோறு போடலாம். ஆனால் நம்ம குடும்பம் எப்பொழுதும் இப்படியே இருக்குமா?..... நாளுக்கு நாள் குடும்பம் விருத்தியாகாதா? நாளைக்குப் பாமாவுக்கு நல்ல இடத்திலே ஒரு கல்யாணம் பண்ண வேண்டாமா? வடக்கே போனால் நிறையச் சம்பாதிக்கலாம். நான் மாசா மாசம் பணம் அனுப்பறேன். அடிக்கடி வந்து போறேன்.....'' என்றான். சஞ்சீவி, விழிகளில் நீர் ததும்பத் திருவாரூர் ஜங்ஷனில் தம்பிக்கு விடை கொடுத்தான்.

மது கல்கத்தா போய் முதல் இரண்டு வருஷங்கள் ஓரளவு பணம் அனுப்பிக் கொண்டிருந்தான். பிறகு பணமும் அனுப்பவில்லை. கடிதமும் எழுதவில்லை. அவன் திருவாரூரை விட்டுக் கிளம்பிப் பதினொரு வருடங்கள் ஓடிவிட்டன. கடந்த ஒன்பது ஆண்டுகளாக அவனைப் பற்றி வீட்டுக்கும் வீட்டைப் பற்றி அவனுக்கும் எதுவும் தெரியாது! இப்பொழுது அவனைக் கண்டதும் அண்ணனும் அம்மாவும் எப்படிக் குதூகலிப்பார்கள்?

வாசல் திண்ணை காலியா யிருந்தது. மாடத்தில் ஒரு சிறு மாக்கல் அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தாளிடப்பட்டிருந்த வாசற் கதவை மெல்லத் தட்டினான். ''யாரு?'' என்றொரு குரல் உள்ளிருந்து கேட்டது. மது பதில் கொடுக்காமல் மீண்டும் கதவைத் தட்டினான். உள் பக்கம் கட்டைத் தாழ்ப்பாளை இழுக்கும் சத்தம் கேட்டது. கதவு திறக்கப்பட்டது. கையில் ஓர் அரிக்கன் விளக்குடன் சுமார் பதினாறு பதினேழு வயது மதிக்கக்கூடிய ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அவள் யார் என்பதை மது புரிந்து கொண்டான். அண்ணன் மகள் பாமா! அவன் ஊரை விட்டுக் கிளம்புகையில் ஐந்து வயதுச் சிறுமியாக இருந்தவள், இப்போது ஒரு பருவப் பெண்ணாகக் காட்சி தந்தாள்.

'' பாமா! என்னைத் தெரியல்லியா?'' என்றான்.

''தெரியறது சித்தப்பா!''

''அண்ணன், அம்மா எல்லாரும் நலம் தானும்மா?''

ஒரு நிமிஷம் தயங்கினாள். பிறகு, ''உங்கம்மா நலமாயிருக்காங்க....'' என்றாள்.

''அப்பமன்னு?''

''எங்கம்மா.....'' ''பாமாவின் கண்கள் கலங்கிவிட்டன. அப்பொழுது, ''யாருடி, அங்கே?'' என்று உள்ளேயிருந்து குரல் வந்தது. அது அவனுடைய அம்மாவின் குரல்.

''நான்தான் அம்மா....!'' என்று கூறிக் கொண்டே உள்ளே சென்றான் மது. ஒரு கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருந்த அவனுடைய தாயார், ''சஞ்சீவியா.....? இன்னும் வரக் காணுமேன்னு நினைச்சேன்.......'' என்று அவனை நிமிர்ந்து பார்க்காமலே சொன்னாள்.

''அம்மா! நான் மது வந்திருக்கேம்மா'' என்று பெட்டியை ஒரு பக்கமாக வைத்துவிட்டு அன்னையின் காலடியில் அமர்ந்தான்.

''யாரது......? மதுவா.....?''

''ஆமாம், பாட்டி. சித்தப்பா வந்திருக்காங்க......'' என்றாள் பாமா.

'' விளக்கை இப்படிக் கொண்டு வந்து காட்டும்மா.....'' என்று பாட்டி கூறியதும் பாமா அரிக்கேன் விளக்கை மதுவின் முகத்துக்குப் பக்கத்தில் தூக்கிப் பிடித்தாள்.

மதுவின் விழிகளிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

'' மதுவாடா வந்திருக்கே?'' என்ற அவன் தாயின் குரல் தழுதழுத்தது.

''ஆமாம்மா! நான் மதுதாம்மா!''

''நீ உயிரோடுதான் இருக்கியா? இவ்வளவு காலமும் எங்களையெல்லாம் மறந்துவிட்டு எங்கேடா போயிருந்தே?''

இந்தக் கேள்விக்கு மது உடனடியாகப் பதில் தரவில்லை. ''ஏம்மா, உடம்பு இப்படி இளைச்சு....''

'' உன்னைக் கடைசியா ஒரு முறை பார்க்கணுங்கிறதுக்காகவே உசிரைக் கெட்டியாகப் பிடிச்சுக்கிட்டிருக்கேன்..... நீ எப்படிடா இருக்கே?''

'' நல்லா இருக்கேம்மா. அம்மா! என் அண்ணி...?'' என்று இழுத்தான் மது.

'' போய்ட்டாடா..... ரெண்டு வருஷங்களுக்கு முந்தி மூணாவது பிரசவத்தின்போது'' என்றாள் வருத்தத்துடன்.

''மூணாவதா......? அப்படின்னு பாமாவுக்குப் பிறகு......''

''பாமாவுக்குப் பிறகு சரசு.... அதோ படுத்திருக்காளே.....'' என்று ஓர் இடத்தைக் காட்டினாள். சுமார் ஒன்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண் உறங்கிக் கொண்டிருந்தாள். ''மூணாவது, அதன் அம்மாவுடனேயே போய்விட்டது.....'' என்றாள்.

''அண்ணன் எங்கேம்மா?''

''அடியக்கமங்கலம் போனான்.. பொழுது சாயறதுக்குள்ளே திரும்பிடறேன்னான். இன்னும் காணோம்...நீ ஏன்டா, இந்தப் பக்கமே வரல்லே? ஒரு கடுதாசாவது எழுதக் கூடாதா?''

''பணம் சம்பாதிக்கிற ஆசையிலே ஊர் ஊராக அலைஞ்சுக்கிண்டிருந்தேம்மா. ஒவ்வொரு மாசமும் இந்த மாசம் ஊருக்குப் போகணும்னு நினைப்பேன். சோதனையா வேறு ஏதாவது ஊருக்குப் போகும்படி நேரும். இப்படியே வருஷங்கள் ஓடிவிட்டன.....'' என்றான்.

FOUR AND A HALF MILLION PEOPLE READ THE WEEKLY...

...NATURALLY!



It is Asia's finest illustrated magazine.

It gives you:

* Current Topics. The Weekly helps you to keep pace with tomorrow: lively comment on topical subjects—political, social, economic, cultural.
* Communities. The Weekly helps you know your neighbours—their origins, customs, rituals, their problems and their achievements.
* General Features. The latest in books, films, music, theatre, painting, short-stories, humour and satire, a fun-filled page for children; jokes—new and stale; your Fortune from the Stars, and loads of other interesting material.

All written by experts, yet lively and readable.

All illustrated by the finest photographers, artists and cartoonists of the country.

Make the Illustrated YOUR Weekly Habit



The Illustrated Weekly of India



ஜோரிக்
ஸ்டெயின்லஸ்
க்ஷவரம் செய்துகொள்வதை
இன்பமயமாக்கும்
3 BLADES
Zorrik
STAINLESS
THE SPACE AGE BLADE
Zorrik
STAINLESS
ஜோரிக் ஸ்டெயின்லஸ் — பிளேடு
தொழில்நுட்பத்திலே ஒப்பற்ற முன்னேற்ற
சாதனை புரிந்து, இத் தொழிலை எந்திர
யுகத்திலிருந்து விண்வெளி யுகத்திற்கு
முன்னேற்றிவிட்டது.
ஜோரிக் — விண்வெளி யுக பிளேடு
BMA/Z 269 TM

''ஒரு கடுதாசிகூடவா போட முடியல்லே? அப்படி என்னடா ஆயிரம் ஆயிரமா வாரிக் குவிச்சிருக்கே?.... பெத்தவளேயும் கூடப் பிறந்தவளேயும் நினைக்க முடியாதபடி அப்படி என்ன......?''

''கடுதாசு போட்டிருக்கலாம். ஆனா, திடீர்னு எதிர்பார்க்காமல் நானே வந்து எல்லாரையும் ஆச்சரியப்பட வைக்கணும்னு'' என்று அவன் சமாதானம் சொல்லிக் கொண்டிருக்கையில் வாசற்கதவு தட்டப்பட்டது.

''சஞ்சீவியாத்தான் இருக்கும். போய்த் திறம்மா.....'' என்ருள் மதுவின் தாயார். சட்டென்று மது எழுந்து பாமாவின் கையிலிருந்த விளக்கை வாங்கிக் கொண்டு கதவைத் திறக்கப் போனுன். பாமாவும் பின்னுலேயே சென்ருள்.

கதவைத் திறந்ததும் யாரோ புது மனிதரைப் பார்ப்பதுபோல் மதுவைப் பார்த்தான் சஞ்சீவி. விளக்கைச் சிறிது தூக்கிப் பிடித்துத் தன் முகத்தை நன்ருகக் காட்டினுன் மது.

''நீயா!'' என்ருன் சஞ்சீவி வியப்புடன்.

'' நான்தான் !''

'' நீ எப்ப வந்தே மது ?''

''இப்பத்தான் வந்தேன்......''

'அம்மாவுக்காவது வயதாகி விட்டது என்று காரணம் சொல்லலாம். ஆனல், அண்ணன் ஏன் இப்படிக் கிழவனேப் போல் காட்சியளிக்கிருன் ?'

''உன்னே நினைத்து நினைத்துத்தான் அம்மா இப்படி உருகிவிட்டாள். நீ எங்கிருந்தாலும் 'நன்ருயிருக்கிறேன்' என்று ஒரு வரி எழுதிப் போட்டிருந்தால் நாங்கள் சந்தோஷப்பட்டிருப்போம்... நான்தான் படிக்காத முட்டாள். படித்தவன் நீ.....'' மேற்கொண்டு சொல்லத் தெரியாமல் தவித்தான் சஞ்சீவி.

''கடிதம் எழுதாதது என் தவறுதான் அண்ணு......''

'' சாப்பிடுங்களேண்டா...... பாமா !'' என்று எழுந்திருக்க முயன்ருள் அவர்களது தாயார்.

சாப்பிடும்போது மதுவைப் பற்றி விசாரித்தான் சஞ்சீவி. ஏதோ 'பிஸினஸ்' செய்வதாகவும் அதனுல்தான் இவ்வளவு காலமும் இந்தப் பக்கம் வர முடியாமற் போய் விட்டதென்றும் சொன்னுன்.

'' நான் என்ன எண்ணி யிருந்தேன் தெரியுமா? நீ எவளாவது வேறு ஜாதிப் பெண்ணே... அதனுல்தான் பயந்துகொண்டு கடிதம் எழுதாமலும் இந்தப் பக்கம் வராமலும் இருந்தாயோ என்று நினைத்தேன்...''

''பெண்ணைப் பற்றியோ கல்யாணத்தைப் பற்றியோ இதுவரை நான் நினைக்கவேயில்லே....''

'' பணம் சம்பாதிப்பது ஒன்றைத்தான் நினைத்தாயாக்கும்?''

''...........''

''நல்ல வருமானமா?''

''ஏதோ பரவாயில்லே.''

அப்புறம் தன் கஷ்டங்களையும் நஷ்டங்களேயும் சொல்லிக் கொண்டிருந்தான் சஞ்சீவி.

இருவரும் வெளித் திண்ணையில்தான் படுத்துக்கொண்டார்கள். படுத்த ஒருசில நிமிஷங்களுக்கெல்லாம் குறட்டை விடத் தொடங்கி விட்டான் சஞ்சீவி. மதுவுக்கு வெகு நேரம் வரை தூக்கம் வரவில்லே. தான் வந்ததில் அண்ணன் அதிக மகிழ்ச்சியைக் காட்டாதது அவனுக்குச் சிறிது ஏமாற்றமாகவே யிருந்தது.

மறுநாள் முதல் சஞ்சீவி ஒரு தினுசாகவே இருந்தான். கூடுமானவரை மதுவிடமிருந்து ஒதுங்கியே இருந்தான்.

பத்துத் தினங்கள் இதே போலக் கழிந்தன. மதுவின் மனம் மிகவும் சங்கடப்பட்டது.

'' அம்மா ! அண்ணன் என்னுடன் பேசுவதே யில்லேயே?... நான் வந்திருப்பதை விரும்பவில்லேயா?'' என்று பக்கத்தில் யாருமில்லாத சமயம் அம்மாவிடம் கேட்டான்.

''கொஞ்ச நாட்களா அவன் அப்படித்தாண்டா இருக்கான். வருமானம் குறைவு; செலவு அதிகம். அங்கும் இங்குமாகக் கொஞ்சம் கடனும் ஏற்பட்டு விட்டது.

சைக்கிள்தான் இல்லை!

''உங்களுக்குச் சாப்பிடச் சாப்பாடு இல்லையானால் பக்கத்து தோட்டத்தில் நுழைந்து கொள்ளையடியுங்கள். உங்களுக்கு உடுத்திக்கொள்ள ஆடை இல்லையானால் பக்கத்து ஜவுளிக் கடைக்குள்



நுழைந்து கொள்ளையடியுங்கள்'' என்று இப்படிச் சொல்லிக்கொண்டே போனார் ஒரு பொதுவுடைமை வாதி. கடைசியில் பிரசங்கம் முடிந்து பார்த்தால் அவருடைய சைக்கிளைக் காணோம்! -நாடோடி

நீயாவது அவ்வப்போது கொஞ்சம் பணம் அனுப்பிக் கொண்டிருக்கலாம். நிறையச் சம்பாதிக்கிறேன் என்கிறாய். பெற்றவள் ஒருத்தி இருக்கிறாளே என்று உனக்குத் தோன்றியதே யில்லையா?'' என்றான். மது உள்ளூற ஏதோ வேதனையில் அல்லல் பட்டான்.

மூன்று வாரங்கள் கழிந்து விட்டன. இன்னும் ஒரு வாரத்தில் மது ஊரை விட்டுக் கிளம்ப வேண்டும். தெரிந்தவர்கள் வீட்டில் எல்லாம் அவனுக்கு விருந்து வைத்தார்கள். பிரியமாகப் பேசினார்கள்.

ஒரு நாள் சஞ்சீவி தோட்டத்தில் தனியாக இருக்கையில் மது வந்தான். அவன் வந்ததைப் பார்த்தும் பார்க்காதது போல் சஞ்சீவி கீற்று முடைந்து கொண்டிருந்தான். சஞ்சீவியின் பக்கத்தில் வந்து முடைந்து போட்டிருந்த ஒரு கீற்றின் மீது உட்கார்ந்தான் மது. அவனைத் திரும்பிப் பார்க்காமலே ''இன்னிக்கு யார் வீட்டிலே விருந்து?'' என்றான். மது அதற்குப் பதில் கூறவில்லை. பிறகு ''அண்ணா!'' என்று ஆரம்பித்தவன் மேற்கொண்டு என்ன பேசுவது என்று புரியாமல் தயங்கினான்.

''மது! இப்பல்லாம் நானே கீற்று முடைந்து விடுகிறேன். கூலி கொடுத்து யாரையும் முடையச் சொல்லுவதில்லை...'' என்றான் சஞ்சீவி. தனக்கு ஏற்பட்டுள்ள பணத் தேவையை அந்த ஒரு வார்த்தையிலேயே சொல்லாமல் சொல்லி விட்டான்.

''நான் நிறையச் சம்பாதித்தும் உங்களுக்கு உதவவில்லையே என்ற கோபம் உங்களுக்கு. ஆனால் என்னுடைய உண்மையான நிலை உங்களுக்குத் தெரியாது அண்ணா...நான் வேலைக்குப் போன முதல் இரண்டு வருஷங்கள் என்னால் முடிந்ததை அனுப்பிக் கொண்டிருக்கவில்லையா? இன்னும் எவ்வளவோ அனுப்பி யிருப்பேன். ஆனால் கடந்த ஒன்பது வருஷங்களாக...'' மேற்கொண்டு சொல்ல முடியாமல் ஏதோ ஒன்று அவன் தொண்டையை அடைத்தது. தம்பியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் சஞ்சீவி.

''கடந்த ஒன்பது வருடங்களாக நான் சிறையில் இருக்கிறேன் அண்ணா!'' என்று கூறுகையில் மதுவின் விழிகள் கலங்கிவிட்டன. இந்தச் செய்தி சஞ்சீவிக்கு அதிர்ச்சியாக இருந்தது. ''என்ன சொன்னே?'' என்றான்.

''நான் ஜெயிலில் இருக்கிறேன்!''

''ஜெயிலிலா?... ஏன்? திருடினியா?''

''போய், திருட்டு இதெல்லாம் என்னை அண்டியதே யில்லை அண்ணா.''

''பின்னே?''

''கொலைக் குற்றம் சாட்டி ஆயுள் தண்டனை கொடுத்து விட்டார்கள்:''

சஞ்சீவியின் முகம் சவம் போலாகிவிட்டது. ஒரு நிமிஷம் கல்லாய்ச் சமைந்திருந்தான்.

''மது! நீ கொலை செய்தியா?'' என்று குரலில் உயிரே இல்லாமல் கேட்டான்.

''நடந்ததைக் கேட்டுவிட்டு நான் கொலை செய்தேனா இல்லையா என்பதை நீங்களே முடிவு பண்ணுங்க அண்ணா!... ஒன்பது வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் பர்த்வான் என்ற ஊரிலிருந்து ஒரு சில மைல்கள் தொலைவிலிருந்த ஒரு கிராமத்துக்கு ஒரு நண்பனைப் பார்க்க நடந்து போய்க் கொண்டிருந்தேன். அப்பொழுது இருட்டும் சமயம். பாதையை யொட்டிய ஒரு தோப்பிலிருந்து ஒரு பெண் அலறும் குரல் கேட்டது. என்னை அறியாமலேயே என் கால்கள் அந்தத் தோப்புக்குள் சென்றன. முரடன் ஒருவன் நன்றாகக் குடித்து விட்டு ஓர் இளம் பெண்ணைப் பலாத்காரம் செய்து கொண்டிருந்தான். அந்தப் பெண் என்னைப் பார்த்ததும் ''காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!'' என்று வங்காளி மொழியில் கெஞ்சினாள். நான் அவர்களை நெருங்குவதைப் பார்த்த அந்த முரடன் அந்தப் பெண்ணை விட்டு விட்டு என்மீது பாய்ந்தான். அவனால் சரியாக நிற்கக்கூட முடியவில்லை. அவ்வளவு போதை! என்மீது விழுந்தவனைப் பிடித்துத் தள்ளினேன். நாலடிகள் தள்ளிப் போய் மல்லாந்த வாக்கில் கீழே விழுந்தான். அவன் மண்டை ஒரு பாறாங்கல்லின் மீது மோதியதால் அந்தக் கணமே அவன் உயிர் போய் விட்டது. அந்தப் பெண் ஓட முயன்றாள். அவளை நிறுத்திப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விஷயத்தைச் சொல்லலாம் என்றேன். அவள் பதிலே சொல்லாமல் ஓடி விட்டாள். நானும் ஓடி வந்திருக்கலாம். ஆனால் நான் போலீஸ் ஸ்டேஷனைத் தேடிச் சென்று நடந்ததைச் சொன்னேன். 'யார் அந்தப் பெண்?' என்றார்கள். எனக்கு எப்படித் தெரியும்? பிணத்தைப் பார்த்தார்கள். கேஸ் ஜோடனை செய்தார்கள். நான் கொலை செய்யும் நோக்கத்துடனேயே அவனுக்கு நல்ல போதை ஏற்றி அவன் மண்டையில் பலத்த ஆயுதத்தால் அடித்துக் கொலை செய்து விட்டதாக வாதாடினார்கள்....''

''நீ வக்கீல் வைச்சுக்கலையா?'' என்றான் சஞ்சீவி.

''எனக்காகவும் ஒரு வக்கீல் பேசினார். ஆனால் என் பக்கம் சாட்சி கிடையாது. போலீஸ் பக்கம் பதினைந்துக்கும் மேற்பட்ட சாட்சிகள் நான் விரோதம் காரணமாகவே

ஃப்யூராடான் உபயோகித்தால் அதிக நெல் விளைச்சல்

டாடா ஃபைஸன் ராலிஸ் வழங்கும் புதிய ஃப்யூராடான் 3 ஜீ குருணைகள் நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகளைக் கொல்லுகின்றன. இவை பயிர் முழுவதும் பரவி செயலாற்றுவதோடு, அதிக பசுமையான நெல்லைத் தருகின்றன. மற்ற பூச்சிக் கொல்லிகள் தருவதை விட ஹெக்டேருக்கு 3 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக விளைச்சல் தருகின்றன.

உலகெங்குமுள்ள நெற்பயிர் விளையும் பிரதேசங்களில் மிகச் சிறந்த பூச்சிக் கொல்லி என்று போற்றப்படுகின்றன, ஃப்யூராடான் 3 ஜீ குருணைகள். இவை பயிர் முழுவதும் பரவும் நஞ்சியல்பு கொண்டவை. இவற்றை நிலத்திலும் நெல் வயலிலுள்ள நீரிலும் போட்டால், வேர்கள் மூலம் பயிர்கள் அவற்றை உறிஞ்சி, பயிர் முழுவதும் பரப்புகின்றன. இதனால் இந்தப் பயிரைக் கடித்து மெல்லும், துளைக்கும் மற்றும் சாற்றை உறிஞ்சும் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

உங்கள் நெற்பயிருக்கு சிக்கனமான புதிய முறை, அதாவது விதைகளை/ நாற்றுக்களைத் தோய்த்து எடுக்கும் முறைபற்றி உங்கள் வியாபாரியைக் கேளுங்கள். அதை ஒரு முறை கையாண்டு பாருங்கள். வியப்பூட்டும் பலன்களைக் கண்டு நீங்கள் அதிசயிப்பீர்கள்.

வியாபார விவரங்களுக்கு எழுதுக:

ராலிஸ் இந்தியா லிமிடெட்
அக்ரோ கெமிக்கல்ஸ் & பெஸ்டிசைட்ஸ் டிவிஷன்,
21, ஹோமின் ஸ்ட்ரீட்,
பம்பாய் 1.

மற்ற இடங்கள்: சென்னை, கல்கத்தா, டில்லி

TATA FISON RALLIS

விசேஷ சிறப்பம்சங்கள்:

ஃப்யூராடான் 3ஜீ குருணைகள் வேறெந்த தூசுப் பூச்சிக் கொல்லியை விடச் சிறந்தவை; மிகவும் பயனுள்ளவை.

- நெற்பயிரைத் தாக்கும் தண்டு துளைப்பான், தத்துப் பூச்சி, ஆனைக்கொம்பன், அசுவினி, பேன் ஆகிய பெரும்பாலான பூச்சிகளைக் கட்டுப்படுத்துகின்றன.
- விசேஷ கருவிகளின் உதவியின்றியே கையால் இந்த மருந்தை எளிதில் பத்திரமாகப் போடலாம்.
- கடித்து மெல்லும் பூச்சிகளையும் சாற்றை உறிஞ்சும் பூச்சிகளையும் கட்டுப்படுத்துகின்றன.
- பூச்சிகளை விரைவில் கொல்வதற்காக பயிர் முழுதும் உடனடியாகப் பரவி விடுகின்றன.
- இக் குருணைகளை மழை அடித்துச்செல்ல முடியாது. தெளிப்பு மருந்துகளைவிட நீண்ட காலப் பாதுகாப்புத் தருகின்றன.
- தானிய மணியில் மருந்து தங்கியோ காற்றைக் கெடுக்கவோ செய்யாது.
- இவை பயிரை அழிக்கும் பூச்சிகளை மட்டுமே பாதிக்கும்; பயிருக்கு சாதகமான பூச்சிகளுக்குத் தீங்கு செய்யாது.



டாடா ஃபைஸன்
தயாரிப்பு

fmc furadan®
IS A REGISTERED TRADEMARK OF FMC CORPORATION
PATENT NUMBER 97323 OF FMC CORPORATION

அதிக நெல் விளைச்சல் பெற...ஃப்யூராடான் 3 ஜீ குருணைகள்

OBM-0275 TAM

சதுர்புஜ ராமன்

கல்கி தீபாவளி மலரில் "விசித்திர விக்கிர கங்கள்" என்ற அம்சத்தில் சதுர்புஜ ராம னின் திருவுருவப் படத்தைக் கண்டு பல்லா யிரக் கணக்கான பக்த உள்ளங்கள் பரவசம் அடைந்திருக்கக் கூடும்.

இலட்சிய மனிதனாகவே வாழ்ந்த பிரபு தமது நாராயண மூல ரூபத்தை வெளிப் படுத்திச் சங்கு சக்கரம் தாங்கி நான்கு கரங்க ளுடன் திகழும் தலம் சதுர்புஜ ராமம் என்றே வழங்குகிறது. செங்கற்பட்டு - காஞ் சூர் - திருக்கழுகுன்றம் மார்க்கத்திலுள்ள இதற்கும் பொன்பதர் கூட்டம் என்றும் ஒரு பெயர்.

சதுர்புஜ கோதண்ட ராமர் ஆலயம் திருப்பணி மேற்கொள்ளப்பட்டுத் தை மாதம் மகா கும்பாபிஷேகம் நடத்த உத்தேசித்துள்ளார்கள். இந்தக் கைங் கர்யம் குறையின்றி நிறைவேறப் பக்தர்கள், திரு ஏ. பி. பாஷ்யம் அய்யங்கார், பொக் கிஷதார், சதுர்புஜ ராமன் கோயில் திருப் பணிக் குழு, 25, தேரடித் தெரு, சென்னை - 600005 என்ற விலாசத்துக்குப் பணம் அனுப்பலாம்.

அவனை வேண்டுமென்று இட்டமிட்டுக் கொலை செய்ததாகச் சொன்னார்கள்! எனக்கு ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்டது!"

சஞ்சீவி சில நிமிஷங்கள் மௌனமாயிருந் தான். பிறகு, "நீ ஏன் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்தவில்லை?" என்றான்.

"கேஸ் முடியும்வரை அனாவசியமாக உங் களை யெல்லாம் பயத்துக்கும் கவலைக்கும் ஆளாக்கவேண்டாமென்று இருந்துவிட்டேன். நிச்சயமாக நான் விடுதலையாகி விடுவேன் என்று நம்பினேன். நான் தண்டிக்கப்பட்டதும் என் கஷ்டம் என்னோடு போகட்டும் என்று தெரிவிக்காமலே இருந்தேன்... ஒன்பது வரு டங்கள் ஓடிவிட்டன. இன்னும் மூன்று அல் லது நான்கு வருடங்களில் என் தண்டனைக் காலம் முடிந்து விடும். சிறையில் எனக்கு நல்ல பெயர். கருணை மனு போட்டிருக்கிறேன். அதை ஏற்றுக் கொண்டால் இன்னும் சில மாதங்களிலேயே விடுதலையாகலாம்..."

"இப்போ எப்படி வந்தே?"

"பரோல்லே வந்திருக்கேன். இருபதாம் தேதி ஆஜர் ஆகணும்."

"மது! நீ வேலைக்காக அவ்வளவு தூரம் போகாமலிருந்திருக்கலாம்" என்றான் சஞ்சீவி.

"அண்ணா! என் தலையிலே எழுதியிருக் கிறதை அனுபவிக்காமல் இருக்க முடியுமா?"

"இந்த விஷயம் அம்மாவுக்குத் தெரிந் தால்..." என்று சொல்ல ஆரம்பித்த சஞ் சீவியை மதுவின் கண்ணீர் மேற்கொண்டு பேச முடியாதவாறு செய்தது. "அண்ணா! தயவுசெய்து இதைமட்டும் யாரிடமும் சொல் லாதீங்க... அம்மா உயிரோடு இருக்கிறவரை இந்த விஷயம் அவர்களுக்குத் தெரியக் கூடாது" என்றான்.

இருவரும் மௌனமாகி விட்டனர். "நீ எவ்வளவோ பெருமையாக வாழ்வாய் என்று எதிர்பார்த்தேன்டா..." மனவேதனையுடன் கூறினான் சஞ்சீவி. பேச்சை வேறு திசையில் திருப்ப எண்ணினான் மது. "அண்ணா! நம்ம பாமா கல்யாணத்துக்கு ஏதாவது ஏற்பாடு பண்ணியிருக்கிறீர்களா?" என்றான். சஞ்சீவி ஒரு பெருமூச்சு விட்டவாறு, "பணத்துக்கு எங்கே போவது? இரண்டு மூன்று இடங் களில் பாமாவைக் கேட்கிறார்கள். நல்ல மனிதர்கள்தான். அதற்காகப் பெண்ணைச் செலவில்லாமல் வெறுமனே அழைத்துக் கொண்டு விடுவார்களா? வீட்டையோ, வயலையோ, தோப்பையோ அடமானம் வைத்தோ அல்லது ஏதாவது ஒன்றை விற் றோதான் பாமாவைக் கல்யாணம் செய்து கொடுக்கணும். எதற்கும் உன் கையெழுத்து இல்லாமல் நடக்காது" என்றான்.

"அதுக்காகக் கவலைப்படாதீர்கள், அண்ணா! நாளைக்கே ஒரு வக்கீல் வீட்டுக்குப் போவோம்" என்றான் மது.

மறுநாள் எல்லா தஸ்தாவேஜுகளுடன் திருவாரூரில் ஒரு வக்கீலைத் தேடிச் சென்று தமையன் பெயருக்கே சகல உரிமையையும் எழுதிக் கொடுத்தான் மது. அன்றைக்கு மறுநாள் ரிஜிஸ்தரும் செய்து கொடுத்து விட்டான்.

மது ஊருக்குத் திரும்பும் நாள் வந்தது. அண்ணன், அம்மா இருவர் தாள்களிலும் விழுந்து நமஸ்காரம் செய்தான்.

மதுவை வழியனுப்ப வந்தான் அண்ணன். சில நிமிஷங்கள் சஞ்சீவி எதுவும் பேசவில்லை. பிறகு "மது! நான் சொல்றதைத் தவறாக நினைக்காதே. விடுதலையானதும் அந்தப் பக்கமே ஒரு பிழைப்பைத் தேடிக்கொண்டா யானால் நல்லது... நீ திரும்பவும் இந்தப் பக்கம் வந்தால்... எப்படியும் உன் விஷயம் யார் மூலமாவது ஒரு நாள் வெளியாகி விடும்....அப்புறம்....என் பெண்களின் திரு மணம் தடைப்பட்டுப் போகலாம்" என்றான் தயங்கியபடி.

மதுவுக்குத் தலை சுற்றியது. இதயம் இடம் பெயர்ந்து எங்கோ நழுவிக் கொண்டிருப் பதைப் போல உணர்ந்தான்.


"மது! உன் விலாசம் கொடு. எதுக்குன்னு ஒரு வேளை வயலையோ, தோட்டத்தையோ விற்கும்படி நேர்ந்தால் உன் பங்குப் பணத்தை அனுப்பி வைப்பதற்குத்தான்..."

"அண்ணா! நான் தேடி வந்தது அன்பையும் பாசத்தையும்தான்! எனக்கு ஒரு காலணா வேண்டாம். குழந்தைகளின் திருமணத்தை நன்றாக நடத்துங்கள்...எனக்கும் குழந்தைகள் தானே, அவர்கள்!" என்று கூறிய மது, அண்ணன் சஞ்சீவியின் கையிலிருந்த பெட் டியை வாங்கிக் கொண்டு "நான் போகிறேன் அண்ணா..." என்று கூறிவிட்டு நடந்தான்.

"ஈசுவரா! சிறையிலிருந்து இந்தச் சரீரத் துக்கு விடுதலை கிடைப்பதற்குள் இந்தச் சரீ ரத்திலிருந்து என் உயிர் விடுதலை பெறக் கருணை செய்..." என்று பிரார்த்தனை செய் தது அவன் மனம்.


அவன் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப் பட்டதா என்று யாரும் மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டாம். பகவான் கருணைக் கடல். எதை ஏற்பது, எதை நிரா கரிப்பது என்று அவனுக்குத் தெரியும்.

அனைவரும் பால் பற்றாக்குறை பற்றியே பேசுகிறார்கள். ஆனால் நம் வீட்டில் எப்போதும் சிறந்த கட்டித் தயிர். எப்படி?



அமுல் மில்க் பவுடரில் நீர்விட்டுத் தயாரித்த பாலைக் கொதிநிலைக்கு சூடாக்குங்கள். இளம் சூடாகும் வரை குளிரவிடுங்கள். அதில் அரை முதல் ஒரு தேக்கரண்டி நல்ல தயிரைத் தோய விடுங்கள். படியவிடுங்கள். கட்டியான ஆடைத்தயிர் தயார்! அமுல் மில்க் பவுடரிலிருந்து ஆரோக்கியமான நல்ல பால் தட்டில்லாமல் கிடைக்கிறது. காப்பி அல்லது தேநீருக்கு-சுவைமிக்க பால் பானங்களுக்கு, மிட்டாய் மற்றும் தின்பண்டங்களுக்கு, கட்டியான தயிருக்கு. அதிலிருந்து லஸ்ஸி, பச்சடி மற்றும் தயிர் வடை தயாரிக்கலாம். இது வசதியானது, சிக்கனமானதும் கூட. எப்போதும் ஒரு டின் கைவசம் இருக்கட்டும்.

இல்லத்தரசியின் இரகசிய பால்பண்ணை:



அமுல்
மில்க் பவுடர்

கைரா டிஸ்ட்ரிக்ட் கோ-ஆப்பரேடிவ்
மில்க் ப்ரொட்யூஸர்ஸ் யூனியன் லிட்., ஆனந்த்.

ASP/AMP/16


எஸ்ட்ரெலா சக்தி
இந்த சக்தி தரும் ஒலி உங்கள் காதுகளில் ரீங்காரம் செய்கிறது.
ESTRELA
132
ESTRELA
ESTRELA
112
ESTRELA
இந்த சக்தி தரும் ஒளியை நீங்கள் கண்ணெதிரே காணலாம்
உங்கள் டிரான்ஸிஸ்டர் மற்றும் டார்ச்சில் எஸ்ட்ரெலா சக்தி காட்டும் அதிசயம் பாரீர்!
எஸ்ட்ரெலா பாட்டரிகளின் சக்தி: குடத்தில் காவேரிபோல!
எஸ்ட்ரெலா பாட்டரீஸ் லிட்., பம்பாய்-400 019.
CMEB-2-203

சிறிய நூலுக்குப் பெரிய விமர்சனம்!

திரு மோகன் குமார மங்கலம் இந்தியாவில் கம்யூனிஸம் ஆட்சியில் அமர வேண்டுமானால் அதற்கு ஆக்கிரமிப்போ, புரட்சியோ பயன்படாது என்றும் ஊடுருவலே சிறந்த வழி என்றும் முடிவு செய்து அது பற்றி விரிவான ஆராய்ச்சிக் கட்டுரை எழுதினார். அவரது தீர்மானம் எவ்வளவு சரியானது என்பதற்கு இன்று ஆளும் காங்கிரஸில், சட்டையின் நிறத்தை மாற்றிக் கொண்டு பல கம்யூனிஸ்டுகள் ஊடுருவிப் பொறுப்பான பெரிய பதவிகளில் இருப்பதே சான்று. ஏன், திரு மோகன் குமாரமங்கலமேகூட சாதுர்யமாக ஆளும் கட்சிக்குள் ஊடுருவி, மந்திரி பதவியைப் பிடித்துக் கொண்டு, பிரதமரின் நம்பிக்கையையும் குறைவின்றிப் பெற்று அரசியல் சட்டம் மக்களுக்கு உறுதி அளித்த பல அடிப்படை உரிமைகளும் நீதித் துறையின் சுதந்திரமும் பறி போகக் காரணமாயிருந்திருக்கிறார். ஆட்சியில் உள்ள அரசியல் கட்சியின் நோக்கங்கள் நிறைவேறும் வகையில்தான் நீதித் துறை இயங்க வேண்டும் என்ற நிலை உருவாகி விட்டது. கம்யூனிஸ்டுகளின் நோக்கில் மிகவும் சாதகமானதும் முக்கியமானதுமான மாறுதல்கள் இவை. ஆனால் ஜனநாயகத்துக்குக் குழி பறிக்கும் நடவடிக்கைகள்.

சில மாதங்களுக்கு முன்னால் ஸுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் மூவரின் 'ஸீனியாரிடி' புறக்கணிக்கப்பட்டு ஜஸ்டிஸ் ரே பிரதம நீதிபதியாக நியமிக்கப்பட்டதை, இந்நாட்டில் நீதித் துறையின் சுதந்திரம் பறிபோய்விட்டது என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாகவே கருதலாம். இதை யொட்டி ஜனநாயகப் பற்றுள்ள அறிஞர் பெருமக்கள் வெளியிட்ட கருத்துக்களைப் பிரபல வழக்கறிஞர் திரு பால்கிவாலா தொகுத்துச் சிறிய, அரிய நூலாக வெளியிட்டிருக்கிறார். அதன் தமிழாக்கமும் தற்போது பிரசுரமாகி யிருக்கிறது.

தொடக்கத்தில் திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் சாஸனம் மக்களுக்கு வகுத்துத் தந்த அடிப்படை உரிமைகளையும் நீதித் துறையின் சுதந்திரத்தையும் பாதுகாக்குமாறு உருக்கமான வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஆட்சியில் உள்ளோரைப் பொறுத்தவரை செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் இது ஒலிக்கும். ஆனால் ஜனநாயகத்தில் மக்கள்தாம் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எனவே இந்தச் சங்கொலி அடிப்படை உரிமைகள், நீதித் துறை சுதந்திரம் ஆகியவற்றின் மறைவுக்கான சங்கொலியாக இராதென்றும் மக்களை விறுகொண்டு எழச் செய்யும் சங்கநாதமாக ஒலிக்கும் என்றும் நம்புவோமாக.

அரசியல் துறை, சட்டத் துறை, நிர்வாகத் துறை ஆகியவற்றில் அனுபவ ஆற்றலுடைய பேரறிஞர்கள் ஒன்பது பேர்களுடைய கருத்துக்கள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. பல மேற்கோள்களையும், உதாரணங்களையும் நிகழ்ச்சிகளையும் நகைச்சுவையுடன் எடுத்துச் சொல்லிப் பாமரருக்கும் புரியும் வண்ணம் விளக்குகிறார்கள்.

படித்துப் பாருங்கள்



'' 'கட்டுப்பட்ட நீதிபதி' என்பது அர்த்தமில்லாத சொற்றொடராகும். 'சூடான ஐஸ்கிரீம்' என்பது போலத்தான் இதுவும். ஒருவர் கட்டுப்பட்டவராய் இருந்தால் அவர் விருப்பு வெறுப்பற்ற நீதிபதியாய் இருக்க முடியாது. ஒருவரே இரண்டுமாக இருப்பதென்பது நடக்காத காரியம். மாறுகிற அரசியல் கட்சிகளின் கொள்கைகளுடன் சம்பந்தப்பட்டிராமல் அரசியல் நிர்ணயச் சட்டத்துக்கு மட்டுமே ஒருவர் முற்றிலும் கட்டுப்பட்டிருந்தால்தான் அவர் நீதிபதியாக இருக்க லாயக்கானவர்; இல்லையேல் அந்தப் பதவி வகிக்க அவர் தகுதியற்றவராகி விடுவதுடன் எடுத்துக் கொண்ட பிரமாணத்தையும் மீறுபவராகிறார்.''

திரு பால்கிவாலாவின் கட்டுரையில் காணப்படும் மேற்படி ஒரு பாரா இந்தக் கட்டுரைத் தொகுப்பு நூலின் நோக்கத்தையும், தன்மையையும், நடை அழகையும் தெளிவாக்குவதாய் இருக்கிறது.

கட்டுரைகளின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் பற்றி 'படித்துப் பாருங்கள், பிறருக்கும் எடுத்துச் சொல்லுங்கள்' என்பதற்கு அதிகமாக ஜனநாயகப் பற்றுள்ளவர்களுக்கு ஏதும் கூறத் தேவையில்லை. ஆனால் மொழிபெயர்ப்பு மிகவும் சரளமாகவும் அருமையாகவும் அமைந்திருப்பதை எடுத்துக் கூறல் பொருத்தும். தமிழில் எழுதப்பட்டதையே படிப்பது போன்று நெருடல் இன்றி இருக்கிறது.

ஆங்கிலத்தில்: A Judiciary made to measure. Edited by N. A. Palkhivala, Published by M. R. Pai, Dr. Dadabhoy Naoroji Road, Bombay 400001 விலை: ரூ. 2-00.

தமிழில்: ''ரெடிமேட் நீதித் துறை'' தமிழாக்கம்: 'விராஜன்', கிடைக்குமிடம்: விவேகா பப்ளிகேஷன்ஸ், 7, முதல் மெயின் ரோடு, ஜெத் நகர், சென்னை— 28; விலை: ரூ. 1-50.



CMGC.1.216 TM



பழைய வீடு

ஹென்றி ஸ்லேசார்
தமிழாக்கம்: ஓவியன்

அவர் ஊருக்குப் புதியவர். அவர் ஓட்டி வந்த சிவப்பு கன்வர்டிபிள் கார் நியூயார்க் லைசென்ஸ் நம்பர் கொண்டது. அவருக்கு ஐம்பது வயதிருக்கும். வியர்வையில் ஊறிச் சிவந்துபோன முகத்தில் கண்கள் மட்டும் சின்னதாக, கொடூரமாகக் காணப்பட்டன.

ஆரான் ஹாக்கரைப் பார்த்து, "நீங்கள் தான் வீட்டுத் தரகரா?" என்று கேட்டார்.

"ஆம், உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று புன்னகையோடு கேட்டார் ஆரான்.

"என் பெயர் வாட்டர்பரி. எனக்கு நேரமில்லை. விஷயத்தை' நேராகச் சொல்லட்டுமா?"

"தாராளமாகச் சொல்லுங்கள். குறிப்பிட்ட வீடு ஏதாவது வேண்டுமா?"

"ஆமாம்! ஊருக்கு எல்லையிலுள்ள அந்தப் பழைய வீடு வேண்டும்."

"எது? தூண்கள் உள்ள வீட்டைச் சொல்கிறீர்களா?"

"ஆம். அது விற்பனைக்கு இருப்பதாக அறிவிப்புப் பார்த்த ஞாபகம்."

"ஆம். இதோ அந்த வீட்டைப் பற்றிய குறிப்புக்கள்" என்று ஒரு புத்தகத்தின் ஏட்டைப் புரட்டிக் காட்டினார் ஆரான்.

"நூற்றி அறுபது வருஷத்திய பழைய வீடு. எட்டு அறைகள், இரண்டு குளியலறைகள், பெரிய தோட்டம், மரம் செடிகள். கடைகளும் பள்ளிக்கூடங்களும் பக்கத்தில். விலை எழுபத்தையாயிரம். வேண்டுமா?" என்று கேட்டார் ஆரான்.

"ஏன்? அதில் ஏதாவது குறைகள் உண்டோ?"

"இல்லை; இங்கு குடியேறுவதென்றால் வேறு பல நல்ல வீடுகள் இருக்கின்றன."

"நான் இந்த வீட்டைப் பற்றித்தான் கேட்டேன். உங்களுக்கு அதை விற்க விருப்பமில்லையென்றால் சொல்லுங்கள்."

"விருப்பமில்லையா? நன்றாகச் சொன்னீர்கள்! என் கமிஷன் பணத்தை இழக்க நான் என்ன முட்டாளா? ஆனால், நீங்கள்தான் அதை வாங்க மாட்டீர்கள். அந்தக் கிழவிக்காகத்தான் இந்தக் குறிப்பையே வைத்திருக்கிறேன். இல்லாவிட்டால்..."

"நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே!"

"சரி, புரியும்படி சொல்கிறேன் கேளுங்கள். கிழவி சாடி கிரைம்ஸ் இந்த வீட்டை ஐந்து வருஷங்களுக்கு முன் விற்பனைக்கு விட்டாள். ஆனால் அவள் கேட்கிற விலைக்கு ஏற்ற வீடல்ல அது. பழைய உளுத்துப்போன வீடு. பழுது பார்ப்பதே கிடையாது. இன்னும் கொஞ்ச காலத்தில் கூரையே விழுந்து விடும். வருஷத்தில் பாதி நாட்கள் தாழ்வாரத்தில் தண்ணீர் தேங்கிச் சொத சொத வென்றிருக்கும்."

"பின் எதற்காக அவ்வளவு விலை கேட்கிறாள்?"

ஆரான் கைவிரித்தார். "யாருக்குத் தெரியும்? ஒருவேளை கௌரவத்துக்காக இருக்கும். உள்நாட்டுப் போருக்கு முன்பிருந்தே அது அவளுடைய குடும்பச் சொத்தாக இருந்து வந்திருக்கிறது. அந்தக் கௌரவமோ என்னவோ!"

தலையைக் குனிந்து தரையைப் பார்த்துக் கொண்டிருந்த வாடர்பரி, "நஷ்டம்தான்! ஆனால் எனக்கு அந்த இடம் பிடித்து விட்டது. ஏன் என்று சொல்வது கொஞ்சம் கஷ்டம். எனக்கேற்ற வீடாக அது தெரிகிறது" என்று சொல்லிவிட்டு ஆரானை நிமிர்ந்து பார்த்துப் புன்னகை செய்தார்.

"வேண்டுமென்றால் முடித்துத் தருகிறேன். பத்தாயிரத்துக்கு அது பரவாயில்லை. ஆனால், எழுபத்தையாயிரம்...?" ஆரான் சிரித்தார். "ஆனால் கிழவியின் எண்ணம் எனக்குப் புரிகிறது. அவளிடம் அதிகப் பணம் கிடையாது. ஒரே ஒரு மகன் இருந்தான். பட்டணத்தில் ஏதோ நல்ல நிலையில் இருந்தான். அவன் தான் அவளைக் கவனித்து வந்தான். ஐந்து வருஷங்களுக்கு முன் அவனும் செத்துப் போனான். வீட்டை விற்பதுதான் புத்திசாலித்தனம் என்பதைக் கிழவி உணர்ந்திருக்க வேண்டும். ஆனால் அதை விட்டுப் பிரியவும் மனம் வந்திருக்காது. அதனால்தான் யாரும் வாங்க விரும்பாத விலை கேட்கிறாள் போலிருக்கிறது. அது அவள் மனத்துக்குத் திருப்தியாயிருக்கிறதோ, என்னவோ! அதிசயமான உலகம்தான்!"

"ஆமாம்" என்று ஏதோ யோசனையில் சொன்ன வாட்டர்பரி, "அவளிடம் நேரில் போய் விலையைக் குறைக்கும்படி கேட்டுப் பார்க்கட்டுமா?" என்று எழுந்தார்.



இர்விங் ரோஸ் என்ற அந்த ஊரின் அமைதியான தெருக்களில் காரை ஓட்டிக் கொண்டுபோன வாட்டர்பரி கருக்கலாகிவிட விருந்த இழவி சாடி கிரைம்ஸின் வீட்டின் முன்னால் காரை நிறுத்தினார். வீட்டைச் சுற்றி உளுத்துப்போன மர வேலி. தோட்ட மெல்லாம் காடு போல் மண்டிக் கிடந்த புதர்கள்.

வாசலுக்கு வந்த இழவி குள்ளமாய், நரைத்த தலையோடும், சுருக்கம் விழுந்த முகத்தோடும் காட்சி தந்தான். வெப்பம் மிகுந்த சமயத்திலும் கம்பளிச் சட்டை போட்டுக்கொண்டிருந்தான்.

''நீங்கள்தான் வாட்டர்பரியா? ஆரான் போன் செய்தார்'' என்றான் இழவி.

''ஆமாம்! சௌக்கியமா?''

''சௌக்கியத்துக்கு என்ன குறைச்சல்! உள்ளே வரவேண்டுமா?''

''ஆமாம்! இங்கே வெளியே ரொம்பச் சூடாயிருக்கிறது.''

''சரி, வாருங்கள் ஐஸ் பெட்டியில் குளிர் பானம் போட்டு வைத்திருக்கிறேன்.''

உள்ளே ஜன்னல்கள் மூடப்பட்டு வெளிச்சம் குறைந்து குளுமையா யிருந்தது. கூடம் நிறையப் பழைய காலத்து மேஜை, நாற்காலிகள். இழவி ஆடும் நாற்காலி ஒன்றில் கை கட்டிக்கொண்டு உட்கார்ந்தான்.

வாட்டர்பரி கனைத்துவிட்டுக்கொண்டார். ''உங்கள் வீட்டுத் தரகரிடம் பேசினேன்...''

''அதெல்லாம் தெரியும். என் மனத்தை மாற்ற முயலலாம் என்று உங்களை அனுப்பி வைத்த ஆரான் ஒரு முட்டாள்'' என்று முரட்டுத்தனமாகச் சொன்னான் இழவி.

''அப்படியில்லை உங்களிடம் கொஞ்சம் பேசலாம் என்று நானாகவே வந்தேன்.''

இழவி குனிந்து வாட்டர்பரியை உற்றுப் பார்த்தான். ஆடும் நாற்காலி கிரீச்சிட்டது.

''பேசுவதற்கு விலையா என்ன? தாராளமாகப் பேசுங்கள்.''

பருத்த வாட்டர்பரி வெள்ளைக் கைக் குட்டையால் முகத்தை ஒத்திக் கொண்டார். ''சரி, முதலில் என்னைப் பற்றிச் சொல்கிறேன். நான் வியாபாரி. பிரம்மச்சாரி. ரொம்ப காலம் உழைத்து நிறையச் சம்பாதித்தேன். இப்போது ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்து விட்டேன். அதற்கு அமைதியான இடமாகத் தேடுகிறேன். இந்த ஊர் எனக்குப் பிடித்து விட்டது. சில வருஷங்களுக்கு முன்பு அல்பேனியாவிலிருந்து இந்த ஊர் வழியாக ஒரு முறை போயிருக்கிறேன். எப்போதாவது ஓர் இடத்தில் ஸ்திரமாகத் தங்க வேண்டி வந்தால் இந்த ஊர்தான் சரி என்று அப்போதே தீர்மானித்தேன். இன்று இந்த வழியாகப் போகும்போது இந்த வீட்டைப் பார்த்தேன். வீடு எனக்குப் பிடித்து விட்டது.''

''எனக்கும் இந்த வீடு மிகவும் பிடிக்கும். அதனால்தான் நியாயமான விலை கேட்கிறேன்'' என்றான் இழவி.

''நியாயமான விலையா? நீங்களே சொல் லுங்கள், இந்த வீட்டுக்கு அதிகம்போனால்...''

''போதும். நிறுத்துங்கள். உங்களிடம் வாதம் செய்ய நான் தயாராயில்லை. நான் சொன்ன விலை தர விருப்பமில்லா விட்டால் அதைப் பற்றிப் பேசவே வேண்டாம்.''

''ஆனால்...''

''வணக்கம். போய் வாருங்கள்.''

கிழவி எழுந்து கொண்டாள். ஆனால், வாட்டர்பரி எழுந்திருக்கவில்லை. ''கொஞ்சம் இருங்கள். இது பைத்தியக்காரத்தனமாய்த் தான் தெரியும். பரவாயில்லை. நீங்கள் கேட் கிற விலையைக் கொடுக்கிறேன்.''

கிழவி அவரை நெடுநேரம் உற்றுப் பார்த் தாள். ''உண்மையாகவா?''

''ஆமாம்! இதோ தேவையான பணம் இருக்கிறது. நீங்கள் கேட்கிற விலையே கொடுக்கிறேன்.''

கிழவி பொதுவாகப் புன்னகை செய்தாள். ''ஐஸ் பெட்டியில் வைத்த குளிர் பானம் குளிர்ந்து விட்டிருக்கும். கொஞ்சம் இருங்கள். கொண்டு வருகிறேன். பிறகு இந்த வீட்டைப் பற்றிச் சொல்கிறேன்.''

கிழவி குளிர்பானம் கொண்டு வரும்போது மறுபடியும் தம் முகத்தைக் கைக்குட்டையால் ஒத்திக் கொண்டார் வாட்டர்பரி. நுரை பொங்கிய அந்தக் குளிர்பானத்தை, ஆவ லோடு வாங்கிக் குடித்தார்.

''இது மிகப் பழைய வீடு. 1802ம் வருஷத் திலிருந்து இதுஎங்கள் குடும்பச் சொத்து. இந்த ஊரில் உள்ள வீடுகளில் இது அப்படியொன் றும் உறுதியான வீடு இல்லை என்பது எனக்குத் தெரியும். என் மகன் மைக்கேல் பிறந்தபோது வீட்டின் தாழ்வாரத்தில் வெள்ளம் புகுந்து விட்டது. அதற்குப் பிறகு ஈரம் காய்ந்ததே கிடையாது. கூரைத் தளங்களில் பூச்சி அரிப்புக் கண்டிருப்பதாக ஆரான் சொல் கிறார். ஆயினும் இந்தப் பழைய வீட்டை நான் நேசிக்கிறேன். நான் சொல்வது உங் களுக்குப் புரிகிறதா?''

''புரிகிறது'' என்றார் வாட்டர்பரி.

''மைக்கேலுக்கு ஒன்பது வயதானபோது, அவன் அப்பா செத்துப் போனார். அப்போது எங்களுக்குக் கஷ்டகாலம். அப்பாவை இழந்த துக்கம் ஒருவேளை அவனை அதிகம் பாதித்து விட்டதோ என்னவோ, அதற்குப் பிறகு அவன் முரடனாகவே வளர்ந்தான்.''

வாட்டர்பரி இரக்கத்தோடு 'ச்சச்சோ' என்று சப்புக் கொட்டினார்.

''படிப்பு முடிந்தவுடன் பட்டணத்துக்குப் போய்விட்டான். அவனுக்கு என்ன கனவோ யார் கண்டது! பட்டணத்தில் என்ன செய் தான் என்று எனக்குத் தெரியாது. நல்ல நிலையில் இருந்திருக்க வேண்டும் என்றுதான் நினைத்தேன். எனக்குத் தவறாமல் பணம் அனுப்பி வந்தான்'' என்று சொல்லும்போதே அவள் கண்களில் கண்ணீர் படர்ந்தது.

''ஒன்பது வருடங்களாக நான் அவனைப் பார்க்கவில்லை. அப்பால் அவன் வீட்டுக்கு வந்தபோது ஏதோ தொல்லையில் அகப்பட்டுக் கொண்டிருந்ததாகத் தெரிந்தது. நடு ராத்



திரியில்தான் வீட்டுக்கு வந்தான். மெலிந்து போய், வயதுக்கு மீறிய கிழவனாகக் காணப் பட்டான். அவனிடம் ஒரு சிறிய கறுப்புப் பெட்டியைத் தவிர வேறு ஒன்றும் இருக்க வில்லை. அதை வாங்கி வைக்க முயன்றபோது என்னையே அறைந்து விட்டான். மறுநாள் கொஞ்ச நேரம் வெளியே போகும்படி என்னைத் துரத்தியடித்தான். ஏன், எதற்கு என்று சொல்லவில்லை. சில மணி நேரத்துக்குப் பிறகு நான் திரும்பி வந்த போது அந்தச் சிறிய கறுப்புப் பெட்டியைக் காணவில்லை.''

குளிர்பானம் குடித்துக் கொண்டிருந்த வாட்டர்பரியின் கண்கள் கண்ணாடித் தம்ளர் வழியாக அகல விரிந்து நோக்கின.

''அன்றிரவு யாரோ ஒரு மனிதன் எங்கள் வீட்டுக்கு வந்தான். அவன் எப்படி உள்ளே வந்தான் என்பது எனக்குத் தெரியாது. மைக் கேல் அறையில் பேச்சுக் குரல் கேட்டது. என் மகன் எப்படிப்பட்ட தொல்லையில் மாட்டிக் கொண்டிருக்கிறான் என்று தெரிந்துகொள்ளக் கதவருகே போய் ஒட்டுக் கேட்டேன். ஆனால் எனக்குக் கேட்டதெல்லாம் வெறும் கூச்சல் களும், பயமுறுத்தல்களும்...'' கிழவி சற் றுத் தயங்கினாள். அவள் தோள் துயரத்தில் சிலிர்த்தது. ''ஒருவெடிச் சத்தம்தான்'' என்று பேச்சைத் தொடர்ந்தாள்: ''ஆமாம்! ஒரு துப்பாக்கி வெடிச் சத்தம்தான். நான் அறைக் குள் போனபோது ஜன்னல் திறந்திருந்தது. வந்திருந்த மனிதன் போய் விட்டிருந்தான். மைக்கேல் தரையில் பிணமாகக் கிடந்தான்.

''இது ஐந்து வருஷங்களுக்கு முன்னால் நடந்தது. உண்மையில் என்ன நடந்தது என்பதைப் போலீஸார் எனக்குச் சொல்லப் பல மாதங்கள் பிடித்தன. என் மகன் மைக்கேலும், அந்த மனிதனும் ஏதோ ஒரு பெரிய கொள்ளையில் ஈடுபட்டிருக் கிறார்கள். லட்சக்கணக்கில் கொள்ளையடித் திருக்கிறார்கள். மைக்கேல் அந்தப் பணத் தோடு ஓடி வந்திருக்கிறான். அதை இங்கே, இந்த வீட்டில் எங்கோ ஒளித்து வைத்திருக் கிறான். தன் பங்கை வாங்கிக் கொண்டு போகத்தான் அந்த மனிதன் வந்திருக் கிறான். அந்தப் பணம் எங்கோ மறைக்கப் பட்டுவிட்டதை உணர்ந்தபோது அவன் என் மகனைச் சுட்டுவிட்டான்.''

கிழவி நிமிர்ந்து பார்த்தாள். ''அப்போது இந்த வீட்டுக்கு எழுபத்தையாயிரம் என விலை நிர்ணயித்தேன். என் மகனைக் கொன்றவன் எப்படியும் ஒரு நாள் திரும்பி வருவான், எவ் வளவு விலையானாலும் இந்த வீட்டை வாங்க முயல்வான் என்பது எனக்குத் தெரியும். நான் செய்ய வேண்டியதெல்லாம் ஒரு கிழவியின் வீட்டுக்கு நியாயமான விலைக்கு மேல் அதிக விலை கொடுக்கத் தயாராக இருப்பவன் வரும் வரையில் பொறுமையோடு காத்துக் கொண் டிருப்பதுதான்.'' கிழவி மெதுவாக நாற் காலியை ஆட்டிவிட்டுக் கொண்டாள்.

வாட்டர்பரி காலியான கண்ணாடித் தம் ளரைக் கீழே வைத்துவிட்டு உதடுகளை நக்கி விட்டுக் கொண்டார். அவர் கண்களில் இப் போது பார்வையில்லை. ''இது என்ன, இந்தக் குளிர் பானம் கசப்பாயிருக்கிறதே !'' என்று அவர் வாய் முணுமுணுத்தது. அவர் தலை தோளில் சாய்ந்துவிட்டது.

பிரபல நகைச்சுவை எழுத்தாளர் அல்போலிஸ்கா 'தி மகரிஷி ஸேஸ்' (The Maharishi Says) என்ற ஒரு நகைச்சுவைத் தொகுப்பு எழுதி யிருக்கிறார். அதிலிருந்து சில:

பொன்மொழி + நகைச் சுவை = பொன் நகை மொழி!

☐ உங்கள் குறைகளைப் பிறரிடம் சொல்லும் போது பாதிப் பேர் அதைக் காதில் போட்டுக் கொள்வதில்லை; மீதிப் பாதிப் பேர் சந்தோஷப்படுகிறார்கள்!

☐ அவர் பின்னால் பலர் போகிறார்கள். ஆனால் அவர்கள் அவரைப் பின்பற்றுகிறார்களா, அல்லது விரட்டுகிறார்களா என்று புரியவில்லை !

☐ தேர்தலுக்கு முன் உங்கள் கையைப் பிடித்துக் குலுக்கியவர்கள், பிறகு உங்களையே குலுக்குவார்கள்!

☐ நீங்கள் ஒரு பெண்ணைப் பார்த்துச் சிரிக்கும் போது அவள் உங்களைத் தன் அப்பாவின் நண்பர் என்று நினைத்துக் கொண்டால் உங்களுக்கு வயதாகி விட்டது என்று அர்த்தம் !

☐ அரசியல்வாதிகள் பேசுவதை எல்லாம் போடா மல் செய்ததையெல்லாம் போடுவது என்று வைத்துக் கொண்டால் செய்தித் தாள்களில் பாதிக்கு மேல் காலியாக இருக்கும்!

☐ ஒரு குழந்தைக்கும் மற்றொன்றுக்கும் இடையே நல்ல இடைவெளி வேண்டும் — குறைந்தது பத்து அடியாவது வேண்டும், சண்டை போடாமல் இருக்க!

☐ தூக்கம் இல்லாத போது படுத்து, தூக்கக் கலக்கத் தோடு எழுந்திருக்கும் ஒரே மிருகம்—மனிதன்!


☐ தொண்டைப் புண் வரும் பொழுதெல்லாம் சந்தோஷப்படுங்கள்—

''கடவுள் என்னை ஓர் ஒட்டகச் சிவிங்கியாகப் படைக்கவில்லையே'' என்று!

தொகுப்பு: பாலி



பலம் பெறுவாய் பலே பாண்டியா



சூரப் புலிகளின் பரம்பரை சுருண்டுகிடப்பதா?
தெம்பை உறிஞ்சும் இன்றைய வேகத்தின் முன்
சோர்ந்துவிடாதீர். இழந்த சக்தியை மீட்க
இதோ டானிக் மாத்திரைகளான ஒகாஸா.
உடல்பலம், ஊக்க சக்தி, ஆரோக்கியம்.
உங்களுக்கே. வேங்கையென விழித்தெழுவீர்.
பாரெங்கும் வெற்றிகண்ட
பாக்கியசாலிகளின் வழி: ஒகாஸா.
வெள்ளிமுலாம் பூசிய டானிக் மாத்திரை
இது ஒன்றே.

ஹார்மோ-பார்மா லிமிடெட், லண்டன்-பெர்லின் முழுமுதல் தயாரிப்பு
(ஆடவருக்கும் பெண்டிருக்கும் தனித்தனி மாத்திரைகள்)

வல்லவராய் வாழ்வதற்கே

ஒகாஸா

OKASA CO.PVT.LTD., 12A, Gunbow Street, P. B. No. 396, Bombay-400001.

1898
முதல் பிரசித்தி பெற்றது

பண்டிட்.D.கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்கியத்திற்கும்
பலத்திற்கும்

ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிமிடெட் - சென்னை-17.

மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான

ஹெடன்ஸா

களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
—ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

Bensons-2141 TAM

ரிக்ஷாவாலா

கதைக்குக் கால் உண்டு. எனவே அது நடக்கும்; ஓடும்; சிலசமயம் காலை வாரியும் விடும். அதனால் அதன் போக்கில் விட்டுப் பிடித்தால் பிழைத்தோம். இல்லாவிட்டால் செத்தோம்.

உதாரணத்துக்குப் பாருங்கள்: ரிக்ஷாக் காரனாக இருந்த சந்தன், வில்லன் மதனின் கையாளாகிறான். எப்படி என்பது கதைக்கு அப்பாற்பட்ட விஷயம். அவன் மனைவியே அங்கு பலவந்தமாகக் கொண்டு வரப்பட்ட பின், இம்மாதிரிக் காரியங்களுக்கு உறுதுணை யாக இருந்த சந்தனின் உணர்வு விழித்துக் கொண்டு ஸ்தலத்திலேயே மதனைச் சாடிச் சூறையாடும் துணிவைப் பெறுகிறான். மதன் நினைத்திருந்தால் அவனை அங்கேயே குழி தோண்டிப் புதைத்திருக்கலாம். ஆனால் அப் படி நினைக்க முடியுமா? கதையை நடத்திச் செல்ல வேண்டும் என்ற நல்லறிவு அவனை விட்டுப் பிடிக்க வைக்கிறது, எலியை விட்டு விட்டுப் பிடிக்கும் பூனைபோல்.

நட்ட நடுத் தெருவில் சந்தனைக் கடுகிறான் மதன். நாலு பேர் பார்க்கிறார்கள். அவ்வளவு பேரும் ரிக்ஷாக்காரர்கள்! அப்படியும் வழக் குரைஞர் கைலாஷின் வாதத்திறமையால் சட்டத்தின் பிடியிலிருந்து தப்புகிறான்.

கதாநாயகன் கோபி ஒரு ரிக்ஷாக்காரன். கதாநாயகன் என்றால் நல்லவனாகத்தானே இருக்க வேண்டும்? அவன் சந்தனின் குழந்தை யைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிறான். ஓர் இல்லத்தில் கொண்டு சேர்க்கிறான். அதோடு அவன் பொறுப்புத் தீர்ந்து விட்டது. சந்தனின் மனைவி என்ன ஆனாள் என்பதுகடவுளுக்குத்தான் வெளிச்சம்!

கதை அந்தக் குழந்தையையும் தாயையும் பற்றிச் சுற்றிப் படருமோ என்று எண்ணினால் ஏமாந்து போகவே நேரிடும். அவர்களை அம்போ என்று விட்டுவிட்டு மாறு கிளை பாய் கிறது. எனவே கடைசிவரையில் அவர்கள் தலைகாட்டவே யில்லை.

மதனுக்காக வாதாடிய கைலாஷ் நீதிபதி யாகிறார். அவர் வாழ்க்கையிலும் ஒரு சோகம், தம் மனைவியைச் சந்தேகித்துக் கொன்று விட்டதாக. மதன் அதனைத் தன்-னல்வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கிறான்.

கைலாஷுக்கு ஒரு பெண் குழந்தை. அது என்ன ஆயிற்று என்று அவருக்குத் தெரியாது.

பார்வதி என்பவள் ரிக்ஷாக்காரர்களுக்குச் சோறு போட்டு வயிறு வளர்ப்பவள். அவள் இரண் என்னும் பெண்ணைப் பெரிய படிப்புப் படிக்க வைத்து ஆளாக்குகிறாள்.

அந்தப் பெண் ரிக்ஷாக்காரன் காதலி யாகிறாள். அவனுக்காக அடிதடி மோதல், சிலம்பம், கத்தி என்று அத்தனை சண்டை களும் நடைபெறுகின்றன. இப்படியாகக் கதையைப் பின்னிப் பிரிவைக் கட்டி இழுத் திருக்கிறார்கள். அத்தனையையும் அவிழ்ப்பது என்றால்... 'ஹேண்ட்ஸ் அப்!'

டிராமா, மெலோ டிராமா என்று எத் தனையோ டிராமாக்களை ஆடிவிட்டுக் கதை சுபமாக முடிகிறது. ஒரு ஹிந்திப் படத்தில் இந்த அளவுக்குக் கதையைப் புகுத்தியதே புதுமை: புதுமையிலும் புதுமை!

நடிப்பில் பார்வதியாக வரும் மாலா சின்ஹாவுக்கு முதலிடம் தரலாம். அது சரி, எந்த பாத்திரத்துக்கும் மேலாக ஆடை அணிகள் இல்லாவிட்டால் நடிக்க வராதோ?

அடுத்தபடி பிரான், அன்வர் ஹுஸைன் இருவரையும் கூறலாம். ரண்தீர் கபூர் நடிப் புக்காகப் புதுப் பயிற்சியோ, முயற்சியோ மேற்கொள்ளத் தேவை ஏற்படவில்லை. 'ராம் பூர் கா லக்ஷ்மண்' பார்த்தவர்களுக்குத் தெரி யும் ''டிட்டோ'' என்று.

நீது சிங் உணர்ச்சியை உணரவில்லை. ஆனால் கவர்ச்சியைத் தெரிந்து வைத்திருக் கிறார். அடிதடிக் காட்சிகளில் கூடக் கலந்து கொள்ளுகிறார்.

திரைப்படத் துறைக்குரிய — மற்ற துறை களில் காணமுடியாத — ஒரே பெருமை, நடிகர்கள் அனைவருக்கும் சண்டைகளில் எத் தனை விதமோ அத்தனையும் போடத் தெரிந் திருக்க வேண்டும். இந்த நியதியைப் பின் பற்றி ஜட்ஜ் கைலாஷ்கூடக் கோதாவில் இறங்கி யிருக்கிறார். ஆனால் நல்ல வேளை! நீதிபதிப் பதவியை உதறிய பின் இதைச் செய்திருக்கிறார்.

குடிசை முதல் குபேர மாளிகை வரை திரைக் கதை நீண்டதால் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிடப் போவதில்லை. பொழுது போகாதவர்களுக்குக் கொட்டா விக் கட்டுப்பாடு சாதனமாக வேணுமானால் விளங்கலாம்! — ரா. வீ.





○ பறவைகளைப் பார்த்து விமானம் தயாரிக்க முயன்ற லியனர்டோ டாவின்ஸி

இயற்கையை யாரால் வெல்லமுடியும்?


விஜயா பாலகிருஷ்ணன்

இயற்கையின் சிருஷ்டி நுணுக்கங்களைக் காப்பி யடித்து யந்திரங்கள் முதலியன சமைக்கும் விஞ்ஞானத் துறைக்குப் பெயர் 'பயானிக்ஸ்'. அதாவது 'பயாலஜி', 'எலெக்ட்ரானிக்ஸ்' என்ற இரண்டு துறைகளும் சேர்ந்து செயல்படுவதினால் இந்தத் துறைக்கு அப் பெயர் வந்தது. வளர்ந்து வரும் விஞ்ஞானத்தின் போக்கிலே இது ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல் ஆகும். சிருஷ்டித் தொழில் என்பது இயற்கைக்குக் கைவந்த கலை. மனிதனால் என்றுமே இயற்கையை மிஞ்சி எதுவும் படைக்க முடியாது.

லியனர்டோ டாவின்ஸி என்ற மேதையைப்பற்றி நாமெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். பிரபல சித்திரக்காரரான அவர் ஒரு சிறந்த விஞ்ஞானியும்கூட. அந்த நாளிலேயே விமானம் சமைக்க முயன்றார். பறக்கும் பட்சிகளை முன்னோடியாக வைத்துக் கொண்டுதான் அவர் 'பறக்கும் யந்திரம்' தயாரிக்க முயன்றார். அவருக்கு இன்று விஞ்ஞானிகளுக்கு இருக்கும் குறைந்த பட்ச வசதிகள் கூடக் கிடையாது. கைவசமிருந்த பணமும், கற்றுக்குட்டி யந்திரங்களும், இதர கருவிகளும் அவரது பெருங் கனவை நிஜமாக்கப் போதுமானதாக இல்லை. எனவே அவர் இலட்சியம் ஈடேறவில்லை. பின்னால் வந்த வேறு விஞ்ஞானிகளுக்குக் கொடுத்து வைத்திருந்தது!



○ ரேடார் கருவியில் ஒரு வகையும் அதைத் தயாரிக்க விஞ்ஞானிக்கு உதவிய வௌவாலும்



இயற்கையின் சிருஷ்டி நுணுக்க மொன்றைப் பயன்படுத்திக் கண்டுபிடிக்கப்பட்டது தான் 'ராடார்' (Radar) என்ற இயந்திரம். எதிரிகளின் நீர்மூழ்கிக் கப்பல்கள், விமானங்கள் எங்கே இருக்கின்றன என்று கண்டு பிடிக்க இது உதவுகிறது. ஒலி அலைகளை நாலு திசைகளிலும் சிதறவிட்டு அவற்றின் எதிரொலிகளின் உதவியினால் எதிரி நீர்மூழ்கிக் கப்பல்கள் இருக்கும் இடம் நிர்ணயிக்கப் படுகிறது. இந்தத் தத்துவத்தை என்றோ பயன்படுத்தி விட்டது இயற்கை! இருண்டர்ந்த அறையில் வௌவால்கள் எப்படிச் சிரமமின்றிப் பறக்கின்றன? எதன் மீதும் தப்பித் தவறிக் கூட முட்டிக் கொள்வதில் லையே! ஒலிதான் அதற்கு வழி காட்டுகிறது. வௌவால் பறக்கும்போது வாயினால் சத்த மிட்டவண்ணம் பறக்கிறது. (Ultra high frequency sound) இது நம் காதுக்குக் கேட்ப தில்லை. ஒலி அலைகளின் எதிரொலியிலிருந்து தன் பாதையில் இருக்கும் தடங்கலைத் தெரிந்து கொள்கிறது அது. வௌவால் எங்கே? ராடார் எங்கே? ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாதது போல் தோன்றுகிறது, நமக்கு! ஆனால் ஒன்றை 'மாதிரி'யாகக் கொண்டுதான் இன்னொன்று உருவாயிற்று என்றால் வியப்பாக இருக்கிறதல்லவா?

'கம்ப்யூட்டர்' தயாரிப்புக்கு இயற்கை சிருஷ்டித்த மனித மூளைதான் ஆதாரம். என்னதான் 'கம்ப்யூட்டர்'கள் வளர்ந்து தங்களை விடச் சக்தி வாய்ந்த புதுக் கம்ப்யூட்டர்களைப் படைத்தாலும் பிரம்மதேவனின் 'பேடண்ட்' படைப்பான மனித மூளையை அவை மிஞ்ச மாட்டா; மிஞ்ச முடியாது!

தவளைகளிடமிருந்து ஒரு தத்துவத்தைக் கண்டறிந்தார் ஒரு விஞ்ஞானி. அதன் அடிப்



○ என்னதான் கம்ப்யூட்டர் தயாரித்தாலும் மனித மூளைக்கு இணையாகாது.

படையில் அவர் ஒரு 'மின் கண்' (Electronic Eye) தயாரித்தார். தவளை தன் கண் முன்னால் அசைந்தாடும் சிறு பொருள்களை மட்டும்தான் தின்னும். பூச்சி புழுக்கள் ஆடாமல் அசையாமல் பக்கத்தில் நின்றால்கூடத் தவளை அவற்றைச் சாப்பிடாது! உணவுப் பொருள் என்று தெரிந்துகொள்ளாமல் பட்டினி கிடக்கும். குறிப்பிட்ட மின் கண் இந்தத் தத்துவத்தைத்தான் பயன்படுத்துகிறது. அது எல்லாவற்றையும் பார்க்க உதவாது. ஆடி அசையும் பொருள்களைப் பார்க்க மட்டும்தான் உதவும். அதே சமயம் இயற்கையின் இன்னொரு விநோதத்தைப் பாருங்கள். பெரிய பொருள்களைத் தவளை சடுதியில் புரிந்து கொள்ளும். தன் எதிரிகளான சிறுவர்கள், பாம்பு என்று தென்பட்டால் அந்த இடத்திலிருந்து தத்தித் தத்தி ஓடிவிடும்.

பட்டுப் பூச்சியிடமிருந்தும் நாம் பாடங்கள் கற்றுக் கொள்ளலாம். ஆண் பட்டுப்பூச்சி, பெண் பட்டுப் பூச்சி இருக்கும் இடத்தை வாசனையினால்தான் கண்டு கொள்கிறது. அவ்வளவு 'மூக்கு நீளம்' அதற்கு! காற்றில் ஓரிரு வாசனை அணுக்கள் இருந்தாலே அது இன்னொரு பட்டுப் பூச்சி இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விடுகிறது. மனிதனின் நாசிக்கு இவ்வளவு சக்தி ஏது? விஞ்ஞானிகள் பட்டுப் பூச்சியிடமிருந்து கற்றுக்கொண்ட பாடத்தைப் பின்வரும் தோரணையில் பயன்படுத்தலாம். முகர்ந்து பார்க்கும் சக்தி அதிகமாகப் படைத்த ஒரு மின் இயல் கருவியை (Electronic Device) உருவாக்கினால் அது பல வழிகளில் பயன்படும். ஆராய்ச்சிச் சாலையில் பல்வேறு வாயுக்களை (Gases) எளிதில் கண்டறிய இது உதவும். உணவுப் பண்டங்கள் கெட்டுப் போகத் தொடங்கின உடனேயே அபாய அறிவிப்புக் கிடைக்கும். போலீஸ் நாய்களுக்குப் பதிலாகவும் இக் கருவியை உபயோகிக்கலாம்!

பயானிக்ஸ் துறையில் ஆராய்ச்சி செய்கிறவர்கள் 'இழை ஜீவிகளை'க் (Reptiles) கூட விட்டு வைக்கவில்லை. இவற்றில் சிலவற்றுக்கு ஒரு தனிச் சக்தி உண்டு. ஊர்ந்து செல்லுகையில் தரையின் வெப்ப நிலை மாறினால் இவற்றின் மண்டையில் 'மணி அடிக்கும்.' எதிரில் வேறு ஏதோ ஜீவராசி இருக்கிறது என்று உணர்ந்து கொண்டு ஜாக்கிரதையாக முன்னேறும்; அல்லது வேறு திசை



யில் செல்லும். இந்த அபூர்வ சக்தியின் அடிப்படையில் என்ன இயந்திரம் தயாரிக்கலாம் என்று மூளையைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள் விஞ்ஞானிகள்.

விமானிகளுக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கருவியின் தத்துவம் கூட இயற்கையிடமிருந்து திருடப்பட்டதுதான்!. நாம் நாள்தோறும் சந்திக்கும் ஒரு வகை வண்டுதான் இந்தக் கருவியை உருவாக்க உதவியது. சுற்றுப்புறத்தை எப்படி மாற்றி அமைத்தாலும் வண்டு கவலையின்றித் தன் வழியே போகும் குணமுடையது. ஓர் உருளைக்குள்ளிருக்கும் வண்டு, உருளையை உருட்டினாலும் புரட்டினாலும் தடம் புரண்டு கீழே விழுவதில்லை. தான் இருந்த நிலையிலேயே நின்று செயல்படுகிறது. இதன் மர்மம் என்ன? வண்டின் கண் அமைப்புத்தான் இதற்குக் காரணம். வண்டுக்கு ஒரு கண் அல்ல, பல கண்கள் இருக்கின்றன. இவற்றைக் கூட்டுக் கண்கள் (Compound eyes) என்று அழைக்கலாம். செதுக்கப்பட்ட வைரத்துக்குப் பல முகங்கள் உண்டல்லவா? அதைப் போலிருக்கும் வண்டின் மொத்தக் கண் (Whole eye). ஒளி வரும் திசையையும் பரிமாணத்தையும் உணர்ந்து கொண்டு அது செயல்படும் முறை மிகவும் விந்தையானது. இந்த நுணுக்கத்தைத் திருடி விஞ்ஞானி தயாரித்திருக்கும் 'எலெக்ட்ரானிக் கருவி' விமானிகளுக்கு ஒரு வரப்பிரசாதம். ஒளியின் வேகத்தைக் கணக்கிட இது உதவுகிறது. விமானத்தில் இதைப் பூமி நோக்கிப் பொருத்தினால், பூமி அளவில் விமானத்தின் வேகத்தைக் கணக்கிடலாம்.

ஆம்! மற்ற ஜீவராசிகளிடமிருந்து மனிதன் தெரிந்துகொள்ள வேண்டிய இரகசியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. 'பயானிக்ஸ்' வளர வளர இயற்கையிடம் நமக்கிருக்கும் பக்தியும் வளரும்!

○ எதிரி நீர்மூழ்கிக் கப்பல் கடலின் ஆழத்துக்குச் சென்றாலும் அதை ரேடார் கருவி கண்டுபிடித்துவிடும்.





மஹாராஷ்ட்ரா, தமிழ் நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடக
மற்றும் கேரளா மாநிலங்களில் கிடைக்கும்.

பரிசு

'ஷமீனா'

தம் முன்னால் தரையில் பரப்பியிருந்த தினசரியை முறைத்துப் பார்த்தார் கேதாரி. கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டார். மறுபடியும் பார்த்தார். நிஜந்தான். அதே நம்பர்.

''ஹே...ஹே...'' விசித்திர ஒலி எழும்பியது அவரிடமிருந்து.

''எச் ஒய் 333333'' சந்தேகமே இல்லை. கனவிலும் நினைவிலும் அவர் ராமஜபமாக முழங்கி வந்த அதே நம்பர். முதற் பரிசு விழுந்திருக்கிறது. லட்ச ரூபாய் பரிசு! கேதாரிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

கேதாரி ஒரு முதல்தர ஊதாரி. இதுவரை அவர் பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் இன்று விடிவுகாலம் வந்து விட்டது.

கேதாரிக்கு மனைவியும், மூன்று பெண்களும். (இருவர் ரொம்ப நாட்களாகக் கல்யாணத்துக்குத் தயாராக இருக்கிறார்கள்.) எல்லோருக்கும் உடலில் வியாதி வரும். கேதாரிக்கு மனத்திலே வியாதி. செலவு வியாதி. மனிதருக்குக் கையிலே பணம் இருந்தால் இராத் தூக்கம் வராது. அதைச் செலவழித்து விட்டுத்தான் அவர் கண்ணை மூடுவார்.

இந்த வியாதியினால் அவர் குடும்பமே அவரை வெறுத்தது. அவரை விட்டு வெகு தூரம் சென்று விட்டது. கேதாரிக்குத் தம் பலவீனம் தெரிந்துதான் இருந்தது. இருந்தாலும் என்ன செய்வது?

ஒரு நாள் கேதாரிக்கு என்னவோ தோன்றியது. 'மெரீனா' பீச்சில் உட்கார்ந்தவாறே தம் கடந்தகால வாழ்க்கையை அசை போட்டார். அவர் மனமே அவரைச் சுட்டது.

'சீ! என்ன கேவலமான வாழ்க்கை வாழுகிறேன். ஆயிரம் ரூபாய் சம்பளம் என்று பெயர். என் ஊதாரிச் செலவு எழுநூறு ரூபாய்; குடும்பத்துக்கு மூந்நூறு ரூபாய். தலைக்கு மேலே கடன். குடும்பத்திலே ஒருத்தருக்காவது நல்ல துணி மணியே கிடையாது. அப்புறம் நகையாவது, நட்டாவது? மூச்! என்னிக்கு எனக்கு விடிவு காலம் வருமோ?' கேதாரியின் கண்களில் நீர் வழிந்தது.

''தமிழ் நாடு ஒரு ரூபாய் சார்!''

கேதாரியின் சிந்தனை கலைந்தது. அவர் கண்முன்னே பரிசுச் சீட்டுகளை விசிறியாக விரித்தவாறு ஒரு பையன் நின்றிருந்தான்.

''தமிழ்நாடு ஒரு ரூபாய் சார்...!''

மின்வெட்டுப் போல ஒரு விரக்தியான விருப்புத் தோன்றியது. ''ஆண்டவனே! உன்னை நம்பி ஒரு பரிசுச் சீட்டு வாங்கறேன். பரிசு விழட்டும். எல்லாக் கடனையும் ஒழிச்சுட்டு, என் ஊதாரித்தனத்துக்கும் ஒரு முழுக்குப் போடறேன்'' — சமுத்திர தீரத்தில் சங்கல்பித்துக் கொண்டார் கேதாரி.

பையிலிருந்து ஒரு ரூபாய் பையனிடம் சென்றது. பரிசுச் சீட்டைக் கண்களில் ஒற்றிக் கொண்டு பையில் வைத்துக் கொண்டார்.

புதிய கேதாரி வீட்டை நோக்கி நடந்தார்.

அந்தச் சீட்டுக்குப் பரிசு லட்ச ரூபாய்! கேதாரியின் வீடே ரணகளமாகக் கிடந்தது.





அத்தனை பேரும் மூட்டு மூட்டாக நின்றிருந்தனர் — முகத்தில் சவக் களையோடு. வீட்டிலுள்ள சகல இண்டு இடுக்குகளெல்லாம் தேடியாகிவிட்டது. அந்த 'லாட்டரி'ச் சீட்டைக் காணவில்லை.

காலையில் பேப்பரைப் பார்த்து விட்டுக் கேதாரி கூச்சல் போட்டதிலிருந்து எல்லோரும் தேடுகிறார்கள்.... அப்படித் தேடுகிறார்கள். சமையலா சாப்பாடா ஒன்றுமில்லை. பலன் பூஜ்யம்தான்!

கேதாரியின் அடிவயிற்றில் 'ஜாடராக்கினி' கனன்றது. ஒன்றும் தோன்றாமல் ஜடமாக நடந்து வெளியேறினார்.

அடுத்த அரை மணிக்குப் பிறகு...

''இதுதானே கேதாரியின் வீடு...?'' என்று கேட்டவாறு ஒரு வாலிபன் கேதாரியின் வீட்டில் நுழைந்தான்.

''ஆமாம்... என்ன விஷயம்?'' — கேதாரியின் மனைவி கமலா.

''நான் அவரோட ஆபீசில் வேலை செய்யறேன். கொஞ்ச நாழி முன்னாலே என் அறைக்கு வந்தார். பேசிண்டே இருந்தார்... திடீரென்று மாரை வலிக்கிறதுன்னார். டாக்டரை அழைச்சிண்டு வந்தேன். உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துண்டு போகச் சொன்னார். அதுதான் உங்க கிட்டே சொல்லிவிட்டு...''— வாலிபன் முடிக்கவில்லை.

கேதாரியின் மனைவியும் பெண்களும் கலவரத்தில் கூச்சலிட்டனர். குழப்பமும், பயமும் அவர்களைச் சூழ்ந்து கொண்டன.

எல்லோரும் அந்த வாலிபனின் அறைக்குச் சென்றபோது கேதாரி கண்களை மூடியவாறு கட்டிலில் படுத்திருந்தார். அவர் மனைவி கமலா கட்டிலருகே சென்று அழ ஆரம்பித்து விட்டாள்.

''ஐயோ! எத்தனை பெரிய பாவியாகி விட்டேன்... பரிசுச் சீட்டு உங்க கையிலே கெடச்சா கன்னு பின்னுன்னு செலவாயிடுமேன்னு.... அதை நான் ஒளிச்சு வைச்சிருந்தேனே... கடைசியிலே இப்படி ஒரு நிலைமை வந்துடுத்தே....''

சொடுக்கிய சாட்டையைப் போல் எழுந்தார் கேதாரி. அவர் குடும்பமே திகைத்தது.


''ஹா... ஹா... கமலா! நீதானே பரிசுச் சீட்டை ஒளிச்சு வச்சிருக்கே... நம்ம நாடகம் எப்படி பாரு.... எங்கே அந்தப் பரிசுச் சீட்டு?'' — பயங்கரமாகச் சிரித்தார் கேதாரி.

கேதாரியின் மகள் அனு கூச்சலிட்டாள்: ''ஐயோ அப்பா! அத்தனையும் நாடகமா? இது நிஜம்னு நினைச்சு — உங்க சிநேகிதர் வந்து சொன்ன வுடனே 'தாயே பராசக்தி! என் மாங்கல்யம் பிழைக்கட்டும்... இந்தச் சனியன் பிடிச்ச பரிசு வேண்டாம்'னு அம்மா வெறுத்துப் போய் அந்தச் சீட்டை அடுப்பிலே போட்டுட்டாளே அப்பா... நான்தான் பிடுங்கினேன். இதோ பாருங்கோ பாதி எரிஞ்சுபோன சீட்டு...''

கேதாரி மலங்க மலங்க அந்த — எரிந்து போன சீட்டைப் பார்த்தார் எச் ஒய் 333— மாத்திரம் இருந்தது.

''ஓ...ஹோ... அப்படியா...?'' என்றார் கேதாரி. அவ்வளவுதான்! அதுதான் அவர் பேசிய கடைசிப் பேச்சு! நாடகம் மெய்யாகி விட்டது!





வாழ்க்கை இன்பத்துக்கு எல்லையேது பஜாஜ் சாதனங்கள் இருக்கும்போது!

குளிர் காலத்தில் வெதுவெதுப்பு!

உங்கள் வீட்டில் வெதுவெதுப்பான சுகமளிக்கும் சூழ்நிலையை உண்டாக்க விரும்பினால், பஜாஜ் சாதனங்கள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும். உண்மையில், பஜாஜ் சாதனங்கள் அனைத்துமே சுகவாழ்வுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ரூம் ஹீட்டர் இம்மர்ஷன் ஹீட்டர், போர்ட்டபிள் கீஸர், வாஷிங் மெஷின் முதலியவை.

தவிர பஜாஜ் கம்பெனிக்கு மட்டுமே நாடெங்கிலும் 3,500 விற்பனையாளர்களும், 16 கிளை அலுவலகங்களும் உள்ளன. இதன் மூலம் நாங்கள் விற்பனைக்கு முந்திய-பிந்திய சேவைகளைத் திறம்பட ஆற்றி வருகிறோம்.



பிரதமரின் புதல்வியும் அரசியின் குமாரியும்

பாரதப் பிரதமருக்கு இம் மாதம் 19ந் தேதி பிறந்தநாள். அப்பாவுக்கும் பெண்ணுக்கும் ஒரே மாதத்தில் பிறந்த தினம்! ஐம்பத்தாறு வயது நிரம்பப் பெறும் பிரதமருக்குப் பல்லாண்டு கூறுகிறோம். சுதந்திர பாரதத்தின் சரித்திரத்தில் மிகவும் சிக்கலானதும் சிரமமானதுமான ஒரு கட்டத்தில் ஸ்ரீமதி இந்திரா பிரதமராக இருக்கிறார். மக்களின் இன்னல்கள் குறைவதும் நாட்டின் பெருமை ஓங்குவதும் அவர் கையில்தான் இருக்கிறது. பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓட வேண்டும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அடிப்படைத் தேவைகள் பூர்த்தியானாலே எளிமைக்குப் பழக்கப்பட்ட இந்தியன் திருப்தி அடைவான். இதற்கு வழி காணப் பிரதமருக்கு அறிவாற்றலையும், மனோ திடத்தையும், ஆரோக்கியத்தையும் பக்கபலத்தையும் அருளுமாறு இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இந்த வேண்டுதலுடனேயே பாரதப் பிரதமரின் படத்தை இவ்விதம் மேலட்டையில் பிரசுரிக்கிறோம்.

அது சரி, அதோ ரொம்ப உரிமையுடன் பிரதமரின் கரத்தைப் பற்றிக் கொண்டு அகமும் முகமும் மலரச் சிரிக்கும் அந்தப் பெண்மணி யார்?

ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் கச்சேரியைக் கேட்டிருப்பவர்கள் எல்லோரும் உடனே பதில் சொல்லிவிடுவார்கள், "சதாசிவம்—சுப்புலக்ஷ்மி மூத்த புதல்வி ஸ்ரீமதி ராதா விசுவநாதன்தான் அவர்!" என்று.

சென்ற செப்டம்பரில் பிரதமர் சென்னைக்கு விஜயம் செய்தபோது, ஏழை மாணவர்களுக்காகத் தங்கும் விடுதி கட்டுவதென்ற தென்னிந்திய கல்வி அறநிலையத்தின் பணிக்கு அடிக்கல் நாட்டினார். அந்த விழாவின்போது எடுத்த வண்ணப் புகைப்படத்தைத்தான் மேலட்டையில் காண்கிறீர்கள்.



"என்ன, பிரதமருடன் நீங்கள் சகஜமாக, சர்வ சுதந்திரத்துடன் பழகுகிற மாதிரி இருக்கிறதே?" என்று கேட்டால் உடனே ஸ்ரீமதி ராதா, "நன்றாயிருக்கிறது! பிரதமர் என்கிற மரியாதையுடன்தான் நான் அணுகினேன்; ஆனால் குடும்ப நண்பர்கள் என்ற ஹோதாவில் பிரதமர் ரொம்ப சௌஜன்யமாக இருக்கிறார். அத்தனை பெருந்தன்மை அவருக்கு" என்று பதிலளிக்கிறார்.

ஸ்ரீமதி ராதா சிறுமியாக மீராவில் நடித்தபோதே பிரதமர் நேருவுக்கு அவளிடம் அலாதி வாஞ்சை. அப்போது முதலே ஸ்ரீமதி இந்திராவுடன் பழக்கம்.

"Who am I, a mere Prime Minister before the Queen of Songs" ("ஒரு சங்கீத ராணியின் முன் வெறும் பிரதமராகிய நான் யார்?") என்று எம்.எஸ்ஸின் இன்னிசையில் சொக்கிப் போய்க் கூறிய நேருஜி இயல்பாகவே குழந்தைகளிடம் அவருக்குள்ள வாத்ஸல்யத்துடன் பால மீராவாக நடித்த சிறுமி ராதாவை அப்படியே கட்டி அணைத்துக் கொண்டு மனமார ஆசீர்வதித்தார். அந்தப் புகைப்படத்தைக் கல்கி 1948, ஜனவரி 4 ந் தேதி இதழில் மேலட்டையில் பிரசுரித்து மகிழ்ந்தார் அமரர் 'கல்கி'. அப்போது அவர் எழுதினார்: "இந்த இதழின் அட்டைப் படத்தில் ஜொலிக்கிறவர்கள் யார் யார் என்று தெரிகிறதல்லவா? ஒருவர் சுதந்திர இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு. பாரதத் தாயின் சேவையிலிருந்து அவருடைய கவனத்தைச் சிறிது நேரத்துக்குக் கவர்ந்து இழுத்துத் தன்னுடைய அன்பு வலையில் சிக்க வைத்த ஸ்ரீமதி..... வேறு யாருமில்லை; பத்து வயதுக்குள் பரத நாட்டியக் கலையின் கரை கண்டு புகழ்பெற்ற குழந்தை ராதா.

"புது தில்லியில் பிளாஸா தியேட்டரில் ஹிந்தி மீரா படம் பார்த்து முடிந்ததும் ஜவாஹர்லால்ஜி குழந்தை மீராவாக நடித்த ராதாவைத் தேடிக் கண்டுபிடித்துக் கட்டித் தழுவிக் கொண்டு மனமார்ந்த ஆசிகளைப் பொழிந்தார். அவருடைய கண்களிலே ததும்பும் கரை காணாக் கருணை வெள்ளத்தைக் கவனியுங்கள்!"

அந்தப் பால்ய நினைவுகளில் ஆழ்ந்தவராக இன்று ஸ்ரீமதி ராதா கூறுகிறார்: "திருமூர்த்தி பவனில் நாட்கணக்கில் சேர்ந்தாற் போல்



வேதமும் விஞ்ஞானமும்

கும்பகோணம் கல்யாணராமன்கள் தர்ம ஸ்தாபனத்தால் நடத்தப்பட்டு வரும் வேத கலாசாலையின் முதல் பட்டமளிப்பு விழா, தமிழ்நாடு ஆளுனர் ஸ்ரீ கே.கே. ஷா அவர்கள் தலைமையில் அண்மையில் நடந்தேறியது.

ஆளுனர் பேசுகையில் "வேதத்தை அத்யயனம் செய்து வேத பாஷ்யத்தின் மூலம் அதன் பொருளை உணர்வதுடன் நில்லாமல், உலகத்தின் நன்மைக்காக வேதத்தில் கூறப்பட்டுள்ள சடங்குகளை அநுபவபூர்வமாய் நடத்துவது மிகவும் அவசியம். வேதத்தில் கூறப்பட்டுள்ள சடங்குகளை நடத்தி வைப்பதற்கு கூறப்பட்டுள்ள பாத்திரங்கள், ஹோமகுண்டம் முதலியவைகளுக்குத் துல்லியமான அளவுகளும் விதிமுறைகளும் கூறப்பட்டுள்ளன. இம்முறைகளை நாம் பரிசீலித்துப் பார்த்தால் நவீன விஞ்ஞானத்துடன் நெருங்கிய ஒற்றுமையைக் காணலாம். இக்கலாசாலையில் வேதம் நன்கு பயின்ற வர்களுக்கு இத்தகைய அநுபவ அறிவும், பயிற்சியும் வழங்குவதைக் காண நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். வேத வித்தையானது தென்னிந்தியாவில்தான் பூர்ணத்துவம் பெற்றதாகக் காண்கிறது. இதை மேலும் மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு நம் எல்லோருக்கும் உண்டு" எனக் கூறி, "ச்ரௌத வித்யா ப்ரவீண" என்ற விருதையும், சால்வையையும் மேற்படி கலாசாலை வித்யார்த்திகளான ஜெயராமன், கிருஷ்ணமூர்த்தி என்பவர்களுக்கு அளித்து ஆசீர்வதித்தார்,

புகைப் படம்: யாகத்தில் பிரயோகிக்கும் பாத்திரங்களைப் பற்றிய விவரங்களை மானேஜிங் டிரஸ்டி டாக்டர் வி.ஆர். எல். சர்மா, தமிழ் நாடு ஆளுனர் ஸ்ரீ கே. கே. ஷா அவர்களுக்கு விளக்கிக் கூறுகிறார். உடனிருப்பவர், உதவி கலெக்டர் திரு ஓம்குமார், ஐ. ஏ. எஸ்.

* * * * * * * * * * * * * * *

வீட்டையே காணோம்!

மேலைநாடுகளில் ரெடிமேட் டிம்பர் வீடுகள் எழும்புவது சகஜமாக உள்ளது. ஆனால் இதில் ஆபத்தும் இருப்பது சமீபத்தில் தெரிய வந்துள்ளது. இத்தாலியில் ஓர் ஊரில் திருடர்கள் சிலர் இரண்டு மாடி கொண்ட ஒரு ரெடிமேட் வீட்டைப் பூட்டும் பூட்டாகக் கழற்றி, லாரிகளில் ஏற்றிக் கடத்திக் கொண்டு போய்விட்டனர். வெளியூர் சென்றிருந்த வீட்டுக்குரியவர்கள் திரும்பியதும் தமது வீட்டைக் காணாது திகைத்தனர். ஒருவேளை வீடு தவறி வந்துவிட்டோமோ என்று நினைத்தனர். பிறகுதான் உண்மை புரிந்தது. -நியூடைம்ஸ்

அப்பா அம்மாவுடன் தங்கியிருந்திருக்கிறேன். அதிகாலையில் தாம் வளர்த்து வந்த பாண்டா எனப்படும் கரடிக் குட்டிகளை எனக்குக் காட்டி அவற்றைக் குசலம் விசாரித்து விட்டுப் பிறகுதான் காலை உணவு அருந்த என்னை அழைத்துச் செல்வார் நேருஜி. சாப்பாட்டு மேஜையில் அம்மா நேருஜிக்கு வலப்புறம் அமர்ந்திருப்பாள். நேருஜி அடிக்கடி அவள் பக்கம் திரும்பி, 'அதைச் சாப்பிடாதே, தொண்டை கட்டிக் கொள்ளும்; இதைச் சாப்பிடாதே, உனக்கு உடம்புக்கு ஆகாது' என்று சொல்லிக் கொண்டே இருப்பார். அத்தனை கரிசனம்! அம்மா அவருடன் சேர்ந்து சாப்பிடும் போதெல்லாம் அரைப்பட்டினி தான்!"

"சென்னையில் பிரதமர் இந்திராவைச் சந்தித்த போது அவர் என்ன சொன்னார்?" என்று ஸ்ரீமதி ராதாவை வினவினோம்.

"பேச்சின் ஆரம்பத்திலேயே அம்மாவைப் பற்றித்தான் குறிப்பிட்டார்: 'அடிக்கடி நாட்டி ஆசி கூறுமாறு என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். ஸ்ரீமதி எம். எஸ். பிரார்த்தனை பாடி ஆசீர்வதித்துள்ள எந்தக் காரியமும் வெற்றி பெறுவது சர்வ நிச்சயம்' என்று கூறினார்."

"தனிப்பட்ட முறையில் உங்களிடம் ஏதும் பேசியிருப்பாரே?"

"ஓ! 'உன் குழந்தைகள் சௌக்கியமா?' என்று கேட்டார்.

"'சௌக்கியம்தான். ஆளுக்கொரு ஆட்டோகிராஃப் நோட்டை என் தலையில் கட்டி அனுப்பியிருக்கிறார்கள்!' என்றேன்.

"'அப்படியா? இப்போது வேண்டாம். ராஜ்பவனுக்கு எடுத்துப் போய்ப் போட்டு அனுப்பி விடுகிறேன்' என்றார். அவ்வாறே மறக்காமல் ஆட்டோகிராஃப் போட்டு அனுப்பி விட்டார். அவருக்குள்ள எத்தனையோ காரியங்களுக்கிடையில் என் குழந்தைகளை நினைவு வைத்திருந்து விசாரித்து, ஆட்டோகிராஃப் போட்டு அனுப்பி சந்தோஷப்படுத்தினாரே!" என்று நெஞ்சம் நெகிழ்ந்து கூறுகிறார் ஸ்ரீமதி ராதா.

(வண்ணப் படம்:
கே. எஸ். ராமானுஜம்)

நத்தையில் முத்து

படத்தில் நத்தை இருக்கிறது - ஆனால் முத்து எங்கே?

சற்றுப் புதுமையான பெயருடன் வெளி வந்திருந்தாலும் திரைக் கதை மிக மிகப் பழமையானதுதான். அந்தண வாலிபன் ஹரிஜனப் பெண்ணை மணந்துகொள்ளும் கதைக்குப் புதுமையூட்டுவதற்காக ஒரு சம்பவம் புனையப்பட்டிருக்கிறது. வாய்க்காலில் கதாநாயகன் மது குளித்துக் கொண்டிருக்கும் போது இன்னொரு பக்கம் கதாநாயகி செல்லக் கண்ணுவும் குளிக்கிறாள். (உங்கள் ஊகம் 'கரெக்ட்'! இது ஒரு 'நியூவேவ்' காட்சி தான்!) குளிக்கும் பெண்ணின் புடவை ஆற்றோடு போக, தவிக்கும் அந்தப்பெண் கரையேறி ஓட, கதாநாயகன் அவள் பின்னே ஓட, (இடுப்பில் துண்டுடன்தான்!) அவள் ஒரு குடிசைக்குள் ஒளிய, உள்ளே நாகம் ஒன்று நெளிய, கதாநாயகன் தன் வேஷ்டியை அவளிடம் வீச, ஊர் மக்கள் பாம்பை விரட்டக் குடிசையைக் கொளுத்த..... ஒருவாறு திரைக்கதை ஆரம்பமாகிறது. கலப்பு மணத்துக்கு உதவும் நியூ வேவ் கதை வாழ்க! தங்கப் பதக்கத்தை இனி நியூவேவ் கதாசிரியர்களுக்கும் வழங்கலாம்!

செல்லக்கண்ணுவாக வரும் கே. ஆர். விஜயா நடிப்பில் யாரையும் மிஞ்சி நிற்கிறார். ஆசார அனுஷ்டான நியமங்களில் பற்றுக் கொண்ட வக்கீல் அகத்து மாமியின் பாத்திரம் எஸ். வரலக்ஷ்மியால் பளபளப்பாகிறது. அந்தக் குடும்பத்தின் இளம் விதவையாக வரும் சந்திரகாந்தா படத்தின் பல சிக்கல்களுக்குத் தீர்வு காண உதவியாயிருக்கிறார். சற்று விசித்திரமான பாத்திரம்; செயற்கையானதும்கூட. முற்போக்கான கருத்தையும், பகுத்தறிவு வாதத்தையும் எடுத்துக் கூறும் பாத்திரம்.

கதாநாயகன் மது — முத்துராமன். காதலிக்கவும், சீர்திருத்தக் கருத்துக்களை ஆவேசமாக எடுத்துச் சொல்லவும் வாய்ப்புக் கிடைக்கிறது. சுலபமாகக் கிடைத்த வாய்ப்பைக் கைநழுவ விட்டு விடவில்லை.

திரைப்படத்தில் கொஞ்சம் அரசியல் கலந்தால் பரவாயில்லை. அரசியலுக்காகவே திரைப்படமென்றால் அதைச் சகிக்க முடியவில்லையே! காலம் சென்ற சாதி வேற்றுமைக்கு, மக்கள் வேகமாக மறந்து வரும் ஒரு பழைய சமாசாரத்துக்கு மீண்டும் புத்துயிர் அளிக்க முயன்றிருப்பது குழிப் பிள்ளையை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு ஒப்பாரி வைப்பது போலாகும்!

கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் டைரக்ஷன் நன்றாயிருக்கிறது; ஆனால் வசனம்தான் அளவுக்கு மீறிப் போய் விட்டது. பேச்சு, பேச்சு, படத்தின் வேகம் போச்சு, போச்சு!

பாடல்களைக் கண்டு கொள்ளாமல் விட்டு விடுவது நமக்கும் நல்லது, பாடல்களுக்கும் நல்லது!

சித்ரா புரொடக்ஷன்ஸாரின் இப்படம் கே. ஆர். விஜயாவின் நூறாவது படம். ஆனால் நூற்றில் ஒன்றாகக் கருதக்கூடிய படம் இல்லை!

—காந்தன்



பினகா ஃப்ளோரைட்* பற்பசை வலிதரும் சொத்தையையும் பற்சிதைவையும் தடுக்கிறது

ஆகவே நீங்கள் அதை உபயோகிக்க வேண்டும்

பல் வைத்தியர்களும் ஆராய்ச்சி விஞ்ஞானிகளும் இதை ஊர்ச்சிதம் செய்கின்றனர்

*"பற்சிதைவைக் காப்பதில் பெரும்பகுதி ஃப்ளோரைட் என்று நமக்கு இப்பொழுது தெரியும். பல் ஆரோக்கிய துறையில் விஞ்ஞான ஆராய்ச்சி தந்த ஒரு பெரும் சாதனை ஃப்ளோரைட்"—

"தி ஜெர்னல் ஆஃப் மெடிகல் நியூஸ் (தி மெடிஷன் & சர்ஜன் VIII 252-57 பிப். 1967)".

பினகா ஃப்ளோரைடினால் பல்துலக்குங்கள் பற்களை உறுதியாக வைத்திருங்கள்



பினகா டூத் பிரஷ்களிலுள்ள மழுக்கப்பட்ட முனைகள் ஈறுகளுக்கு ஊறு செய்யாது

CIBA

ULKA-CF-33 TM

32. ஆறு ரூபாயைக் காணோம்!

சில விநாடிகள் ஏதோ யோசனையில் இருந்த வேதமூர்த்தி, ''அதுவா?... நம்ம சசிவர்ணத்தை இன்னிக்குப் பார்த்தேன். அவரைப் பயமுறுத்தி அநாமதேயக் கடிதம் ஒண்ணு வந்திருக்குதாம். இன்னும் கூடிய சீக்கிரம் அவரைக் கொலை செய்து, அவருடைய வீடும் கொள்ளையடிக்கப்படும்னு அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருக்குதாம். பைப் பாரத் கம்பெனிக்கு ஓர் அசிஸ்டண்ட் அகவுன்டென்ட் தேவைன்னு அவர் விளம்பரம் செய்து, அவ்வேலைக்கு மனு செய்தவங்களுக்கு இண்டர்வியூ கார்டும் அனுப்பிச்சுட்டு அப்புறம் அதைக் கான்சல் செய்ததற்குப் பழி வாங்கவே அம்மாதிரி பண்ணப் போறாங்களாம். கடிதத்தின் கடைசியில் 'மாசேதுங் வாழ்க'ன்னு எழுதப்பட்டிருக்குதாம்'' என்று கரகரத்த குரலில் சொல்லி நிறுத்தினார்.

கௌரியம்மாள் இவ்விவரங்களைக் கேட்டு ஒரேயடியாகப் பயந்து போனாள்.

இந்தச் சமயம், ''அப்பா! உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்லணுமே!'' என்றவாறு உள்ளே வந்தாள் மனோகரி.

''என்ன, அம்மா?'' என்றார் வேதமூர்த்தி, முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொண்டு.

''எங்க காந்தி சமாஜத்திலே வங்காள தேச அகதிகளுக்காக உணவு உடை மருந்து முதலானவை சேகரிச்சிருக்கிறாங்க. இவைகளை எடுத்துக்கிட்டுப் போய்க் கொடுத்துவிட்டு அங்கேயே முகாம்களில் ஒரு மூணு மாசம் தங்கி அகதிகளுக்குப் பணிவிடை பண்றதுக்காகப் பத்துப் பேரை அனுப்பப் போறாங்க. அவர்களில் என்னையும் ஒருத்தியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறாங்க. நான் எங்க அப்பா அம்மாவிடம் அநுமதி கேட்டுச் சொல்றேன்னு சொல்லிவிட்டு வந்தேன். இன்னும் ரெண்டு மூணு நாட்களில் கல்கத்தாவுக்குப் பயணமாகணுமாம். அந்தக் கோஷ்டியில் சேர்ந்து போக எனக்கு ரொம்பவும் ஆசையா யிருக்குது. நீங்க என்னப்பா சொல்றீங்க?''

வேதமூர்த்தியும் கௌரியம்மாளும் ஒருவரை யொருவர் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டனர். பிறகு, ''சரி; யோசிச்சு நாளைக்குச் சொல்றேன் மனோ!'' என்றார் வேதமூர்த்தி.

''ஆகட்டும்பா!'' என்றவாறு தன் அறைக்குப் போய்விட்டாள் மனோகரி.

''என்னங்க இது, இப்படிக் கேட்கிறாளே?'' என்று திகிலுடன் இழுத்தாள் கௌரியம்மாள்.



''ஒண்ணும் பயப்படாதே! எல்லாம் நல்லதுக்குத்தான். அவள் போய் விட்டு வரட்டும்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார் வேதமூர்த்தி. பிறகு அவளுடைய கவனத்தைத் திருப்புவதற்காக, ''அது சரி; மத்தியானம் நரசு வீட்டுக்கு வந்து சாப்பிட்டானா?'' என்று கேட்டார்.

''வ ந் தா ன். சாப்பிட்டான். கொஞ்ச நேரம் படுத்திருந்து விட்டு, எழுந்து மறுபடியும் வெளியே கிளம்பிப் போய் விட்டான்.''

''அந்தப் பெண்ணைப் பற்றி ஏதனாச்சும் கேட்டானா?''

''எங்கே காணோமேன்னு கேட்டான். நீங்க என்கிட்டே சொல்லி வைச்ச மாதிரியே சொன்னேன்.''

''அதாவது?.....''

''அவளுடைய தாயார்க்காரியே வந்து அவளை அழைச்சுக்கிட்டுப் போய் விட்டாள் என்றேன்.''

''மேலே ஒண்ணும் கேட்கலியா?''

''கேட்டான். எல்லாம் நாம் எதிர்பார்த்த கேள்விகள்தாம். அதற்குத் தயார் பண்ணி வைச்சிருந்த பதில்களையே சொல்லிச் சமாளிச்சுட்டேன்'' என்று சொன்ன கௌரியம்மாள், ''அந்த மனிதர் இந்தப் பெண்ணை அழைச்சுக்கிட்டுப் போனாரே, அவளை அவர் எங்கே வைப்பார்? யாரிடம் ஒப்படைப்பார்?'' என்றாள் உள்ளார்ந்த கவலையுடன்.

''அதான் அந்தப் பாக்கியத்தம்மாள் இங்கே வந்திருப்பதாக அவர் சொன்னாரே! அவளிடம் ஒப்படைச்சுடுவார்.''

''அவள் எங்கே தங்கியிருக்காளாம்?''

''அதை நானும் கேட்கலே, அவரும் சொல்லலே !''

''ஆமாம்; அந்த விவரத்தைக் கேட்கிறது அவ்வளவு நல்லாயிருக்காது.''

• • •

'மழை பெய்யும் நேரமும் குழந்தை பிறக்கும் நேரமும் மகாதேவனுக்குக் கூடத் தெரியாது' என்று ஒரு பழமொழி இருந்தது. இந்த விஞ்ஞான யுகத்தில் அது அடிபட்டுப்போய், 'எந்தக் கம்பெனியில் எப்போது வேலை நிறுத்தம் நடக்கும் என்பதும், எந்த எம்.எல்.ஏ. எப்போது கட்சி மாறுவார் என்பதும் ஈசுவரனுக்கே தெரியாது' என்பதாக ஒரு புது மொழி தோன்றியிருக்கிறது.

நரசு இதைக் கண்கூடாகக் கண்டான். ஆம்; மூன்று மாதங்களுக்கு முன்புதான் திறக்கப்பட்டு, இன்று மத்தியானம் வரையில் நன்ருக நடந்து கொண்டிருந்த அந்தப் புதிய பெரிய ஹோட்டல் சாயந்திரம் அவன் போனபோது சாத்திக் கிடந்தது. தொழிலாளர்கள் திடீர் வேலைநிறுத்தம் செய்து வன்முறையிலும் இறங்கியதால் நிர்வாகத்தினர் அந்த ஹோட்டலை இழுத்து மூடிவிட்டார்கள். அங்கே அறை எடுத்துத் தங்கியிருந்தவர்களெல்லாம் அப்போதே வெளியேறிவிட்டார்களாம். வாசலில் ஒரே போலீஸ் மயம். விஜயரங்கன் பாவம், 'என்ன ஆனுன் என்றே தகவல் இல்லை.

மிகுந்த கவலையுடன் வீடு வந்து சேர்ந்த நரசுவுக்கு அன்றிரவு சாப்பிடக் கூடப் பிடிக்கவில்லை. வெறும் பால் மட்டும் அருந்திவிட்டுப் படுத்துவிட்டான். அடுத்த நாள் காலை எட்டு மணி வாக்கில் அவனை ஃபோனில் யாரோ கூப்பிடுவதாக மனேகரி வந்து சொன்ஞள். அவசரமாக எழுந்து போய்க் கேட்டான். விஜயரங்கன்தான் பேசிஞன். இப்போது அவன் ஒரு சின்ன ஹோட்டலில் அறை எடுத்துத் தங்கியிருப்பதாகவும், முடிந்தால் தன்னை வந்து பார்க்குமாறும் சொன்ன அவன், அந்த ஹோட்டலின் விலாசத்தையும் தெரிவித்தான். நரசு உடனே தன் நண்பனைக் காணக் கிளம்பிவிட்டான்.

அவன் வீட்டுக் காம்பவுண்டை விட்டுத் தெருவில் இறங்கிச் சற்று தூரம் நடந்திருப்பான். எதிரே, துப்பாக்கியுடன் ஏதோ ஒன்றைக் குறி வைத்துப் பதுங்கிப் பதுங்கி வரும் வேட்டைக்காரன் போல் நடந்து வந்த திருமலையைப் பார்த்து நடை பாதை ஓரம் தயங்கி நின்ருன்.

'' வெளியே கிளம்பி விட்டாயா நரசு? இன்னும் கொஞ்சம் . நான் லேட்டா வந்திருந்தால் உன்னைப் பார்த்திருக்க முடியாது இல்லையா?'' என்று கேட்டுக் கொண்டே வந்து எதிரில் நின்ருன் திருமலை. அவன் ரொம்பவும் சோர்ந்து களைத்துக் காணப்பட்டான். முகத்தைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது.

''வா, திருமலை! வீட்டில் போய் உட்கார்ந்து பேசுவோமா ?'' என்ருன் நரசு.

'' வேண்டாம், வேண்டாம். நீ எங்கோ காரியமாய் வெளியே கிளம்பியிருக்கிருய். என்ஞல் அது கெட வேண்டாம்.''

''அப்படி ஒன்றும் தலை போகிற காரியம் இல்லை. உன்னைப் போல் எனக்கு மிகவும் நெருங்கிய இன்னெரு நண்பனைப் பார்க்கப் போறேன். அவ்வளவுதான்.''

'' சரி, வா ! பேசிக் கொண்டே நடப்போம்.''



''ஏதாவது அவசர விஷயமாய்ப் பேசணுமா ?''

''ஆமாம்.''

நடந்து கொண்டிருந்த நரசு சட்டென்று நின்றான். திருமலை அவனை இழுத்து நடத்தியவாறு தானும் நடந்து கொண்டே சொன்னான் : ''என் தங்கை கண்ணம்மா நேத்திக்குச் சாயந்திரம் வீட்டை விட்டு எங்கோ போய் விட்டாள்.''

''அப்படியா ?'' என்று அதிர்ச்சியுடன் வினவினான் நரசு.

'' ராத்திரி முழுக்க இந்த மெட்ராசையே ஓர் அலசு அலசிவிட்டேன். இதுவரையில் ஒரு தகவலும் கிடைக்கலே.''

''எதற்காக ஓடிப் போனான்? கோபித்துக் கொண்டா ?''

''ஆமாம்; அம்மாவின் மேல் கோபம்!''

''திட்டினாங்களோ ?''

'' வந்த நாளிலிருந்து திட்டுறாங்க. நேத்திக்குக் கொஞ்சம் அதிகமாப் போச்சு.''

நரசுவுக்கு இதில் ஆச்சரியம் ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால் மிகுந்த துயரத்துக்கு உள்ளானான்.

''ஒருவேளை, அவள் முன்னே வந்த பழக்கத்தில் இப்பவும் இந்த வேதமூர்த்தியின் வீட்டுக்கே வந்திருப்பாளோன்னு பார்த்து விட்டுப் போகத்தான் வந்தேன்'' என்று அடைத்த குரலில் முணுமுணுத்தான் திருமலை.

''இல்லையே ! அவள் இங்கு வரவே இல்லை.''

''சரிதான். இனி கவலைப்பட வேண்டியதில்லை.''

''என்னப்பா, இப்படிச் சொல்லறே?''







''அதாவது, என் மாமா வீட்டுக்கே திரும்பிப் போய்விட்டிருப்பாள் என்று நினைக்கிறேன்.''

''மாயவரத்துக்கா ? எப்படி ?''

''வீட்டில் அம்மா அரிசி வாங்க வைச்சிருந்த ஆறு ரூபாயைக் காணேம். அவள்தான் எடுத்துப் போயிருப்பாள்.''

''ஓ !..... அப்படியானல் சரி. உன் மாமாவுக்கு இப்பவே ஒரு தந்தி கொடுத்துவிடு.''

''தந்தி அடிக்கப் பணத்துக்கு எங்கே போறது ? ஒரு பத்துப் பைசா கார்டுதான் போடணும்'' என்று விரக்தியுடன் சொன்ன திருமலை, ''சரி; அப்போ நான் இப்படியே திரும்ப றேன் நரசு !'' என்று கூறிவிட்டு வேறொரு தெருவில் நுழைந்து நடந்தான்.

நரசுவின் மனம் சயக் குண்டாகக் கனத்தது. வறுமை ஓர் இளம் டென்ணை எப்படியெல்லாம் அலைக் கழித்து வேடிக்கை பார்க்கிறது என்று எண்ணி இதயம் நொந்து நைந்த அவன், விஜயரங்கனைப் போய்ப் பார்த்ததுமே இன்னோர் அதிர்ச்சிக்கு உள்ளா ன்.

ஆம்; கதவடைப்பு செய்யப்பட்டு விட்ட அந்த ஹோட்டலில் புதிதாக நிர்மாணமாகிக் கொண்டிருந்த ஆடிட் டோரியத்தின் உள் சுவர்களில் ஓவியம் தீட்டும் வேலையைக் கண்ட்ராக்ட் எடுத் திருந்த விஜயரங்கன், இதுகாறும் தன் கைப் பணத்தைப் போட்டே அவ்வேலை யில் பாதியை முடித்திருந்தான். துணை யாட்களுக்கும் பெயிண்டுகளுக்குமாக இதுவரை ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் செலவிட்டிருந்தான். இதுவே அவ னுடைய சக்திக்கு மீறிய தொகை. மேற்கொண்டு தேவைப்படும் பணத்தை அவன் கடன் வாங்கித்தான் சரிக்கட்ட வேண்டும். வேலையை முழு மாக முடித்த பின்னர் 'பில்' போட்டுக் கொடுத்தால் உடனே மொத்தத் தொகையும் கிடைத்துவிடும். இப் படித்தான் ஒப்பந்தம் செய்து கொண் டிருந்தான். இந்நிலையில் ஹோட்டல் மூடப்பட்டுவிட்டது. ஓவிய வேலை பாதி யில் நிற்கிறது. அவனுடைய பணம் அதில் முடங்கிக் கிடக்கிறது. இனி ஹோட்டல் திறந்த பிறகே வேலையை ஆரம்பித்து முடிக்க வேண்டும். அது எப்போது திறக்கப்படுமோ ? அது வரையில் அவன் சென்னையிலேயே இருந்தாக வேண்டும். எனவேதான் இந்தச் சின்ன ஹோட்டலில் அறை எடுத்துக் கொண்டு தங்கியிருக்கிறான்.

இவ்விவரங்களைக் கேட்டு நரசு மிகவும் வேதனையடைந்தான். தன் அருமை நண்பன் விஜயரங்கனுக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது என்று மகிழ்ச்சியடைந் திருந்த அவன் இப்போது அவனுக்காக அநுதாபப்பட வேண்டியவனுனன்.

ரங்கன் தொட்டால்சுருங்கிப் பேர் வழி. ஒரு சின்ன அதிர்ச்சியையும் அவனால் தாள முடியாது. இது தெரிந்தவனான நரசு அவனுக்கு ஆறுத லாக அவனுடனேயே இருந்தான். இரவில் மட்டும் வேதமூர்த்தியின் வீட் டுக்குப் போய்விட்டு மறு நாள் இங்கு வந்துவிடுவான். இப்படியே நான்கு நாட்கள் கடந்தன. மூடிய ஹோட்டல் திறப்பதாயில்லை.

ஐந்தாம் நாள், விஜயரங்கன் ஊருக் குக் கிளம்பிவிடுவது என்று முடிவு செய்தான். ஹோட்டல் திறந்தபின் தனக்குத் தெரிவிக்குமாறும், உடனே வந்து வேலைகளை முடித்துத் தருவதாக வும் நிர்வாகத்தினரிடம் சொல்லிவிட்டு மூட்டை கட்டினான்.

நரசுவுக்கு ஒரு யோசனை தோன்றி யது. தன் நண்பன் காலி செய்துவிட்டுப் போகும் அந்தச் சின்ன ஹோட்டல் அறையைத் தானே எடுத்துக் கொண் டால் என்ன என்று எண்ணினான். வேத மூர்த்தியின் வீட்டிலிருந்து வெளியேறி விட வேண்டும் என்ற எண்ணம் கடந்த சில தினங்களாக அவன் மனத்தில் ஏனே கரித்துக் கொண்டே யிருந்தது.

இந்த முடிவை வேதமூர்த்தியிடம் மெல்ல வெளியிட்டான். அவனே கொஞ்சமும் எதிர்பாராத விதமாக அவர் மறுப்பு ஏதும் சொல்லாமல் 'சரி'



பருத்தியிலே விளைந்திடும் கற்பனைகள் அற்புதமோ அதி அற்புத
டிசைன்கள்
நேர்த்தியான மதிப்பு ....நறுவிசான பொலிவு ...
நல்லழகு ...
இயற்கைச் சிறப்பிலே இணையற்றது பருத்தி
ஸென்ச்சுரி— 100% பருத்தித் துணிகள்
தி ஸென்ச்சுரி ஸ்பின். அண்டு. மான்பு. கம். லிமிடெட், பம்பாய்-400 025
ADROIT-CM-533 P-TAI

என்று கூறிவிட்டார். கௌரியம்மாள் தான் கொஞ்சம், 'ஏன்? எதற்கு ?' என்று இழுத்துப் பார்த்தாள். பிறகு அவன் அதற்குப் பதில் சொல்லச் சங்கடப்படுவதைக் கண்டு அதோடு விஷயத்தை விட்டு விட்டாள். பண்பில் ஊறிய அவர்கள் தன் விருப்பத்தை இவ்வளவு சுமுகமாக ஏற்றுக் கொண்டது அவனுக்கு அதிக ஆச்சரியத்தை உண்டு பண்ணவில்லை.

வங்காள தேச அகதிகளுக்குச் சேவை செய்யக் கிளம்பிய குழுவோடு சேர்ந்து மனோகரி கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப் போய் மூன்று தினங்களாகி விட்டன. அவள் போகும் போது நரசுவிடம் அந்த அகதிகள் நிலை பற்றி மிக உருக்கமாக விளக்கிச் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு விடை பெற்றுச் சென்றதை அவனால் மறக்க முடியவேயில்லை. இத்தனை நாட்களும் ஓர் அந்நிய ஆடவனுடன் இளம் பெண்ணான அவள் எவ்விதக் கல்மிஷமும் இல்லாமல் பேசிப் பழகிய விதம் அவனுக்குப் 'பெண்மையில் ஒரு புதிய கண்டு பிடிப்பாகவே' தோன்றியது.

நரசு தன் பெட்டி, கான்வாஸ் பையோடு ஹோட்டல் அறைக்கு வந்து சேர்ந்தான். அங்கு வந்தபின் அவனுடைய கவனம் வேறு எதிலும் சிந்திச் சிதறுவதற்கு வழி இல்லாது போனதால் முழுக்க முழுக்க வேலை தேடும் முயற்சியிலேயே நாட்டம் கொள்ளலானான்.

வாரங்கள் இரண்டு ஓடி மறைந்தன. அன்று ஞாயிற்றுக்கிழமை.

படுக்கையிலிருந்து எழுந்திருக்கும் போதே அவன் மனத்தில் ஏனோ கண்ணம்மாவைப் பற்றிய நினைவு கிளர்ந்தது. வீட்டை விட்டு ஓடிப் போன அவள் எங்கே இருக்கிறாள், என்ன ஆனாள் என்பதை அறிய வேண்டும் என்ற ஆவல் அவனை அமைதி இழக்கச் செய்தது.

திருமலையைப் பார்த்து விசாரித்தால்தான் இந்த விவரம் தெரியும். அவனை எங்கே பார்ப்பது ? வீட்டுக்குப் போனால் பார்க்கலாம். அவன் வீட்டில் இல்லாவிட்டாலும் அவனுடைய தாயாரிடம் தகவல் கேட்டு அறியலாம். ஆனால் அவன் நரசுவைத் தன் வீட்டுப் பக்கம் வரவேண்டாம் என்று சொல்லியிருக்கிறானே! அதையும் மீறிப் போவது அசிங்கம் அல்லவா?



அவன் மனம் குழம்பியது. அந்தக் குழப்பத்தினூடே கண்ணம்மாவைப் பற்றிய நினைவுத் தாகமும் ஒரு விரிய வேகத்துடன் மேலோங்கியது. 'சரி; திருமலையின் வீட்டுக்குத்தான் போய்ப்பார்க்கலாமே!' என்று வீம்பானதொரு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு புறப்பட்டு விட்டான் அவன்.

காலை மணி ஒன்பது இருக்கும். திருமலையின் வீட்டு வாசற்படி மேல் ஏறி நின்ற நரசு, கதவு பூட்டிக் கிடப்பதைக் கண்டு பெரிதும் ஏமாற்றம் அடைந்தான். திருமலையின் தாயார் வெளியே போயிருப்பாளோ ?

மாடிப் போர்ஷனை அண்ணாந்து நோக்கினான். கதவும் சன்னல்களும் திறந்தே யிருந்தன.

'திருமலை அங்கே இருப்பானோ? அல்லது அந்த வங்காளிப் பேர்வழி திரும்பவும் குடி வந்து விட்டிருப்பாரோ ?'

அவனுக்கு மேலே போகத் தயக்கமாயிருந்தது. இன்னொரு நாள் வந்து பார்க்கலாம் என்ற தீர்மானத்துடன் தெருவில் இறங்கத் திரும்பினான்.

''நரசு சார் ! வாங்க சார் !''

திடுக்குற்று நின்ற நரசு மேலே அண்ணாந்து பார்த்தான். அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. படபட வென்று இமைகளைத் தட்டிக் கொண்டு மீண்டும் தன் பார்வையை மேலேற்றி னான். சந்தேகமில்லை; புஷ்பசுகந்தி தான் அந்த மாடிப் படிகளில் கிடுகிடு வென்று இறங்கி வந்து கொண்டிருந் தாள்.

''தோஸ்திரம் சார்! வாங்க சார்! என்ன, இவ்வளவு தூரம் வந்துவிட்டுத் திரும்பிப் போறீங்களே?''

ம கி ழ் ச் சி ப் புன்னகையுடன் கை குவித்தவாறு அவன் எதிரே வந்து நின்றாள் புஷ்ப சுகந்தி. திக்பிரமை அடைந்தவனாய் அவளைத் திருதிரு வெனப் பார்த்துக் கொண்டு நின்றான் நரசு. சில விநாடிகள் அவனுக்கு மூச்சு விடக்கூடச் சிரமமாகிவிட்டது. அத் தனை வியப்பு!

''வாங்க, சார்! அம்மா மேலேதான் இருக்கிறாங்க. அவங்கதான் உங்களைப் பார்த்து விட்டுச் சொன்னாங்க.''

'எந்த அம்மா?' என்று கேட்க வாயெடுத்தான் நரசு. ஒருகால் திருமலையின் தாயாரைச் சொல்லு கிறாளோ என்று அவனுக்குச் சந்தேகம். பிறகு பாக்கியத்தம்மாளா யிருக்கக் கூடும் என்ற நினைவு சற்று நேரம் கழித்தே அவனுடைய மூளையைத் தொட்டது. அத்துடன், 'மேலே' போக லாமா, வேண்டாமா?' என்னும் ஒரு கேள்வியும் எழுந்து அவனைக் கலக்கிக் குழப்பலாயிற்று. ''நான் இந்த வீட்டாரைப் பார்க்க வந்தேன்'' என்று குழறினவாறு திருமலையின் வீட் டைச் சுட்டிக் காட்டினான்.

சுகந்தியின் முகம் சட்டென்று வாடித் துவண்டது. சில விநாடிகள் தலை குனிந்து மௌனமாயிருந்த அவள், ''இந்த வீட்டிலே யாரைப் பார்க்க வந் தீங்க?'' என் று மெல்லிய குரலில் கேட்டாள்.

''திருமலையின் தாயாரை.''

''அவங்க இல்லையே! இந்த வீட் டைக் காலி பண்ணிவிட்டு ஊருக்குப் போயிட்டாங்க.''

''மாயவரத்துக்கா?''

''ஆமாம்; அங்கே அவங்க தம்பி வீடு இருக்குதாம்.''

''அந்த அம்மாளுடைய மகள்?''

''கண்ணம்மாதானே?''

''அவள் எங்கேயோ போய்விட்ட தாகக் கேள்விப்பட்டேன்.''

''எங்கேயும் போயிடலை. இங் கிருந்து நேரே தன் மாமா வீட்டுக்குத் தான் போயிட்டாள்.''

நெஞ்சிலிருந்து ஒரு பெரிய பாரம் இறங்கினாற் போல் பெருமூச்சு விட்டு முகம் மலர்ந்த நரசு, ''அப்போ.... திருமலை?'' என்று இழுத்தான்.

''அவர் மேலேதான் இருக்கிறார்'' என்று பதிலளித்தாள் சுகந்தி.

நரசுவுக்கு ஒரே ஆச்சரியமாகிவிட் டது. 'திருமலை மாடியில் இருந்து கொண்டா இவ்வளவு நேரம் என்னை எட்டிக்கூடப் பார்க்காமல் இருக் கிறான்?' — அவன் மனம் சுருங்கிச் சுண்டியது. 'ஒருகால் அவனுக்கு உடம்பு சரியில்லாமல் இருக்குமோ?'

''நிற்கிறீங்களே, வாங்க, சார்!'' என்று உள்ளார்ந்த பயத்துடன் மீண் டும் அழைத்தாள் சுகந்தி.

அவளைப் புன்முறுவலுடன் பார்த்த நரசு, 'சரி' என்பது போல் தலை யசைத்தான். மகிழ்ச்சிப் பெருக்குடன் மாடிப் படிகளில் துள்ளிப் பாய்ந்து ஏறி ஓடினாள் சுகந்தி.

அவளைப் பின் தொடர்ந்து தயங்கித் தயங்கிச் சென்றான் அவன்.

''வாங்க, தம்பி! சௌக்கியமா?''— பாக்கியத்தம்மாள்தான் அவனை வர வேற்றாள்.

''இருக்கிறேன், சின்னாச்சி!'' என்று தன்னை மீறிய ஒரு பாசக் குழைவுடன் சொல்லிக் கொண்டே போய் நாற்காலி யில் அமர்ந்த நரசு அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவளும் அவனையே பார்த் துக் கொண்டிருந்தாள்.

அதே சோகம் ததும்பும் புன்னகை; துயரம் செறிந்த கண்கள்; அதே ஆடை அணிமணிகள்! மாயூரத்தில் மதுரத்தம் மாளின் வீட்டில் அவன் இருந்த அதே கோலம்; அதே தோற்றம்!

கன்னிகா மடத்தில் சேரப் போவ தாகத் தன் தாயாரிடம் பொய்க் கார ணம் கூறிவிட்டு இங்கே வந்து தன் மக ளோடு இருக்கும் அவள், தன்னைப் பார்த்ததும் தனக்கு அவ்விவரம் தெரிந்திருக்கலாமோ என்ற குற்ற உணர்ச்சியால் ஏதேனும் சலனமடை கிறாளா என்பதைக் கூர்ந்து கவனித் தான் நரசு.

ஓர் அணுவளவுகூட அத்தகைய உணர்ச்சிச் சலனம் அவளது முக பாவத்திலோ, அங்க அசைவுகளிலோ ஏற்படாததைக் கண்டு அவனுக்கு உள்ளூற ஒரே வியப்பும் பிரமிப்புமாகி விட்டது.

அடுத்த இதழில் முடியும்



அவள் மென்மையானவள்... அவள் ஒரு புதிர்...
அவள் மிருதுவானவள், உறுதியானவள்...
தீப்போன்றவள்... அவள் பெண்மையே உருவானவள்...
பட்டுப் போன்ற டால்க்... அன்பைப்போல மிருதுவானது. உங்கள் மேனியைத் தழுவி அரவணைப்பது. உங்களை மோகன லாகிரியில் ஆழ்த்தும் அருமையான புது நறுமணம் கொண்டது. அதுவே வீல் ஆஃப் லவ். ஹேலோ மட்டுமே அளிப்பது. அதைத் தாராளமாக மேனியெங்கும் தூவிக் கொள்ளுங்கள். ஹேலோவிற்கெனவே பிரத்யேகமாக உருவான அதன் நறுமணம் நீண்ட நேரம் உங்களைத் தழுவி, உங்களைச் சுற்றிலும் கமகமவென வீசிக் கொண்டிருக்கும். வீல் ஆஃப் லவ் உங்களை அலங்கரிக் கட்டும். ஹேலோ மட்டுமே அளிக்கும் வாசமுள்ள அன்புத் திரை அது.
ஹேலோ வீல் ஆஃப் லவ் டால்க் வாசமுள்ள அன்புத்திரை... அன்பைப் போல மிருதுவானது.
அவளுக்கு உகந்தது
ஹேலோ
வீல் ஆஃப் லவ்
டால்க்
Halo

HT.G.I.TM

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031

Managing Editor: T. Sadasivam


பண்டைய நாகரீகத்தின்
மறுமலர்ச்சி
மபத்லால்
க்ரூப் அளிக்கும்
சேர்த்தியான துணிமணிகள்
மெஃப்ரின்
பாலியெஸ்டர் சேலைகள் மற்றும்
உடுப்புத் துணிகள்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)

